விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 04 வியாழக்கிழமை (20.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

# மரணதண்டனை விதிக்கப்பட்ட 5 தமிழக மீனவர்களும் நேற்று விடுதலை

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேரும் சிறையிலிருந்து பொது மன்னிப்பின் பேரில் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதனை இலங்கை-இந்திய தூதரக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். 24ஆம் பக்கம் பார்க்க....



## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை தொடரும் என எதிர்பார்ப்பதாக வானிலை அவதான திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை நேற்று புதன்கிழமை அத்திணைக்களம் 23ஆம் பக்கம் பார்க்க....

## மாதகலில் காணி அளவீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் ஜோதிப்புலம் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 4.5 ஏக்கர் காணி கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிக்கும் வகையில் 23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு, வாழ்வாதாரத்தை போராளிகளுக்கு வழங்குங்கள்

### ஜனாதிபதியிடம் வட. சபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் போராளிகளினை பாதுகாக்கு மாறு வட மாகாண சபை ஜனாதிபதியிடம கோரியுள்ளது. இதற்கு எதிர்க்கட்சியினரும் ஆதரவு தெரிவித்துள்ளதோடு மலையகம் உட்பட அனைத்து பகுதியினரினையும் இதில் உள்ளடக்குமாறும் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் 19 ஆவது அமர்வு நேற்று கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்றது. 24ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர் வாரம் நெருங்குவதால் யாழ்.பல்கலைக்கு விடுமுறை?

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரம் நெருங்கும் நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்தின் பீடங்கள் அனைத்தும் விடுமுறைகளினை அறிவித்து வருகின்றன.

விஞ்ஞான பீடம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் என்பன ஏற்கெனவே பரீட்சை மற்றும் 23ஆம் பக்கம் பார்க்க....

**அன்பு வாசகர்களே!**

**இன்று முதல் உங்கள் வலம்புரியில் ......**

ஜோதிட கலாமணி

**சிவல்புரி சிங்காரம்**

எழுதும் கார்த்திகை மாத இராசி பலன் வாசிக்கத் தவறாதீர்கள்.

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரிக்கை

### மாகாண சபையில் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களாக தடுத்து வைகக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளினை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு நீதியமைச்சரிடமும் ஜனாதிபதியிடமும் வடமாகாண சபை பிரேரணை மூலம் கோரியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 19 ஆவது அமர்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இதன்போதே இப் பிரேரணை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தால் முன்மொழியப்பட்டு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் வழிமொழியப்பட்டு சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப் பிரேரணை தொடர்பில் வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் உரையாற்றுகையில், பொதுவாக இவ்வகு 23ஆம் பக்கம் பார்க்க....

## சர்வாதிகார முடியரசு ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதே இலக்கு

### கூட்டு ஒற்றுமையால் சாதிப்போம் – மனோ

(கொழும்பு)

அதிகாரப்பூர்வமாக நமது நாடு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என அறியப்பட்டுள்ளது. இதில இன்று எஞ்சி இருப்பது இலங்கை என்ற பெயர் மட்டும்தான். ஜனநாயகத்தையும், சோசலிசத்தையும் ஒழித்து விட்டு ஒரு முடியரசு இங்கே தோன்றியுள்ளது.

இதன்மூலம் இந்த சர்வாதிகார முடியரசு ஆட்சியை முதலில் முடிவுக்கு கொண்டு வந்துவிட்டு, நிறைவேற்று அதிகாரத்தை மீண்டும் பாராளுமன்றத்துக்கு வழங்குவோம். அதன்பிறகு நாம் பொது தேர்தலை தனித்தனி கட்சி 24ஆம் பக்கம் பார்க்க....






Reg. No: PB 62PQ Fitch rating BB+(lka)

வாழ்வாதாரமளிக்கும் - உற்சாகமூட்டும் - நிம்மதியான வாழ்க்கை

ரூபா ஒரு மில்லியன் வரையிலான கடனுதவி.*
உத்தரவாதமளிப்பவர்கள் தேவையில்லை.
ஆகக்குறைந்த வட்டி.
ஆகக்குறைந்த தவணைக் கட்டணம்.
மரணத்தின்போது தங்கி வாழ்பவருக்கு நட்டயீட்டுக் கொடுப்பனவு.*
வங்கியொன்றினால் வழங்கப்படும் அதிகூடிய ஓய்வுக் கடன்.*

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

ஓய்வுபெற்றவர்களான உங்களது விருத்திக்காக வேண்டி ஆகக்குறைந்த வட்டி வீதத்துடன் உங்களுக்கு பெற்றுத்தரப்படும் மாபெரும் வெகுமதி.

art sense

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
0112 832577

இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions
ஓய்வூதியத் திணைக்களம்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு


SDBL
சணச அபிவிருத்தி வங்கி
தேசத்தின் முன்னோடி

(C-9125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மு.போராளியைக் காணவில்லை




யாழில் விடுதலைப் புலிகளின் முன்னாள போராளியொருவர் காணாமல் போயிருப்ப தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் ஐந்து மாடிகுடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய அந்தோனிமுத்து அன்ரன் ஜெயரோன் என்பரை, கடந்த 17 ஆம திகதி முதல் காணவில்லை என அவரது மனைவி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவ தினம் கடைக்கென புறப்பட்டு சென்றிருந்த அவர் இதுவரை வீடு திரும்ப வில்லை என மனைவி தனது முறைப்பாட் டில் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் கைதான அவர், அரசா ங்கத்தால் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத் தில் இணைக்கப்பட்டவராவார். (செ-11)

# ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல்; மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## ஐ.தே.க கோரிக்கை

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிப தித் தேர்தலை நடத்துவது குறித்த தீர்மான த்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாத த்தில் கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சி யின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமர துங்க, ஜனவரி மாதத்திற்கு பின்னர் ஜனாதி பதித் தேர்தலை நடத்துமாறு பிரதமர் டி.எம். ஜயரத்னவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வாழ் கத்தோலிக்க மக்கள் ஜனவரி மாதம் இலங்கை வரும் புனித பாப் பரசர் முதலாவது பிரான்ஸிஸ் ஆண்டகை யின் வருகையை எதிர்பார்த்துள்ளனர்.

ஜனவரி மாதம் தேர்தல் நடைபெற்றால், பாப்பரசர் வருகை தரும் போது அமைதி யான சூழல் இருக்காது என்பதுடன் அது அவ ரது விஜயத்தை பாதிக்கும்.

ஜனவரி மாதத்திற்கு பின்னர் அரசாங் கம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், பாப்பரசரின் விஜயம் சம்பந்தமான நிகழ்ச்சி நிரலில் பாதிப்பு ஏற்படாதிருப்பதை உறுதிப் படுத்த முடியும்.

இலங்கையில் மத சுதந்திரத்தை பாதிக் கும் வகையில் களுத்துறை மற்றும் சீதுவ பிரதேசங்களில் கத்தோலிக்கர்களை இலக்கு வைத்து சம்பவங்கள் நடைபெற்றது என்றார்.

இதற்கு பதிலளிக்க பிரதமர் டி.எம். ஜய ரத்ன, குறித்த சம்பவங்கள் குறித்து கவன த்தில் எடுத்துள்ளதாகவும் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு உரிய அதிகாரிக ளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலத் தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழ க்கிழமை காலை 9 மணியளவில் வித்தியா லய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.புஸ்பராஜா தலை மையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தின ராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர்.

2014 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் மேற்படி பாடசாலை ஐம் பது சதவீத சித்தியைப் பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# இலங்கை மீனவர்களையும் விடுவிக்க கோரிக்கை

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்திய குற்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டதன் பின் னர் நேற்று இந்திய மீனவர்கள் ஐந்து பேர் விடுதலை செய்யப்பட்டிருப்பதைப் போன்று, அவர்களுடன் கைது செய்யப்பட்டு தண் டனை விதிக்கப்பட்டுள்ள மண்டைதீவு மற் றும் குருநகர் ஆகிய இடங்களைச் சேர்ந்த இலங்கை மீனவர்கள் மூவரையும் விடு தலை செய்ய வேண்டும் என அவர்களது உறவினர்கள் கோரியிருக்கின்றனர்.

இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப் பட்டுள்ள போதிலும் இலங்கை மீனவர்கள் பற்றி தகவல் தெரிவிக்காதிருப்பது தங்களு க்குக் கவ்லையளிக்கின்றது என்று தண் டனை பெற்றவர்களில் ஒருவராகிய மண்டை தீவைச் சேர்ந்த கிறிஸ்துராஜா ஹில்மட் ராஜின் மனைவி மரியபுளோரன்ஸ் ஊடக ங்களுக்குத் தெரிவித்தார்.

எனது கணவருடன் குருநகரைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் துஷாந்தன், கமல் கிறிஸ்டி ஆகிய மூவரையுமே ஐந்து இந்திய மீனவர் களுடன் வழக்கில் தண்டனை வழங்கியிரு ந்தார்கள்.

இந்திய மீனவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யும்போது எங்கள் கணவன்மாரையும் விடுதலை செய்யாதது ஏன்? அவர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

அவ்வாறு விடுதலை செய்யாவிட்டால் நாங்களும் தூக்கில் தொங்குவதைவிட வேறு வழி எங்களுக்கு இல்லை என்று மரிய புளோரன்ஸ் தெரிவித்தார். (செ-11)

# போர்க்குற்றம் தொடர்பில் போலி சாட்சியங்கள் சமர்ப்பிப்பு

## மாவீரர் குடும்பங்கள் மீது பீரிஸ் குற்றஞ்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர் பான ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவு க்கு போலி சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள் ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சாட்டி யுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விஸ் வராசா என்ற நபரை விடுதலை செய்யுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணை க்குழுவின் தலைவர் சயித் ராத் ஹுசைன் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந் தார். இதனை அரசாங்கம் நிராகரித்திருந் தது.

இந்நிலையில் குறித்த வேண்டுகோள் தொடர்பாகவும், அரசாங்கம் அதனை நிராக ரித்தமை குறித்தும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இந்த ஊடகவியலாளர் சந் திப்பு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலை மையகத்தில் நடைபெற்றிருந்தது.

இதன் போது தொடர்ந்தும் கருத்துத் தெரி வித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கையில் இருந்து ஐ.நா.விசாரணைக்குழுவுக்கு சுமார் 400க்கும் மேற்பட்ட போலி சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. புலிகளின் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இதனைச் சமர்ப்பித்துள்ளனர்.

விஸ்வராசா என்ற நபர் இதனை ஒருங்கி ணைத்திருந்தார். அதன் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப் பட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான போலியான தக வல்களை வழங்கி, இவர்கள் ஐ.நா. விசார ணைக்குழுவை தவறாக வழிநடத்த முற்படு கின்றார்கள் என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தொடர்ந்தும் குற்றம் சாட்டியுள்ளார். (செ-11)

## சுவிஸ் தூதுவர் யாழ் வருகை

வடக்கில் அபிவிருத்திகளை அவதானிக் கும் நோக்குடன் மூன்று நாள் பயணமாக இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் ஹெயின்ஸ வோக்கர் நெடர்கூர்ன் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்தார்.

இதன்போது அவர் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறியைச் சந்தித்து வடக்கின் அபிவிரு த்தி திட்டபணிகள் தொடர்பாக கலந்துரையா டினார்.

இந்தச் சந்திப்பின்போது உட்கட்ட மைப்பு, விவசாயம், கல்வி, சுகாதாரம், சமூக நலமேன்பாடுகள் பற்றியும் வடக்கில் அடை ந்துள்ள மாற்றங்கள் தொடர்பாகவும் வடமா காண ஆளுநர் சுவிஸ் தூதுவருக்கு விளக் கினார். இந்தச் சந்திப்பில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் மற்றும சுவிஸ் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (செ-11)


யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு சேவையை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான

**கூறுவிலை கோரல்**

- இவ் ஒப்பந்தமானது 01.01.2015 - 31.12.2015 வரை குத்தகைக்கு வழங் குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றது.
- இதற்குரிய கேள்வி விண்ணப்ப படிவத்தினையும், நிபந்தனையையும் அலு வலக நேரத்தில் யாழ்.வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்தி சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9 மணி - பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும். (04.12.2014) பகல் 12 மணிக்கு பின்னர் விண்ணப்ப படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
- விண்ணப்ப படிவங்கள் மீளளிக்கப்படாத தொகையான ரூபாய் 500/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மீளளிக்கப்படக்கூடிய தொகை யான ரூபாய் 10000/= ஐ செலுத்திய பற்றுச்சீட்டினையும் விண்ணப்ப படி வத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப படிவங்கள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலை யில் "துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலைய கேள்வி விண்ணப்பம்" என குறிப்பிடப்பட வேண்டும். கேள்வி விண்ணப்பங்கள் யாவும் 05.12.2014 பகல் 12 மணிக்கு முன்னர் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும்.
- விண்ணப்பங்கள் யாவும் 05.12.2014 அன்று பகல் 12 மணிக்கு பணிப் பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விதாரர் பிரசன்னமாக இருக்கலாம்.

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (837) யாழ்.கூட்டுறவு நலவிருத்திச் சங்கம்


# ஆசிரிய ஆலோசகர் சேவை அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் புதிதாக உருவாக் கப்பட்டுள்ள ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனையடுத்து நாடுமுழுவதிலும் இரு ந்து 4ஆயிரம் பேர் இச்சேவைக்குள் உள் வாங்கப்படவுள்ளனர் என கல்வி அமைச் சின் செயலாளர் அனுரதிசநாயக்க தெரிவி த்துள்ளார்.

இலங்கை ஆசிரிய சேவையில் முதலாம் வகுப்பில் உள்ள ஆசிரிய ஆலோசகர்களாகக் கடமையாற்றிக்கொண்டிருப்போரே மேற் கண்ட சேவைக்கு உள்வாங்கப்படவுள்ளதா கத் தெரியவருகின்றது.

இலங்கை அதிபர் சேவைக்குக் குறைவா கவும் இலங்கை ஆசிரிய சேவைத் தராங்க ளிற்கு மேலாகவும் உள்ளவாறு ஆசிரிய ஆலோசகர் சேவை அமையும் எனக் குறிப் பிடப்படுகின்றது.

ஏற்கெனவே கல்வி அமைச்சின் கீழ் கல்வி நிர்வாக சேவை, ஆசிரிய கல்வியியலாளர் சேவை என்ற ஒரே சேவைத்தராங்களுடன் உள்ள நிலையில் புதிதாக ஐந்தாவது சேவை யாக ஆசிரிய ஆலோசகர் சேவை உருவாக் கப்பட்டுள்ளது.

தற்போது ஆசிரிய ஆலோசகர்களாகக் கடமையாற்றுவோர் யாவரும் முதலாம் வகு ப்பு ஆசிரிய சேவையைச் சார்ந்திருக்கவில்லை என்பதும் இச்சேவைக்கு உள்வாங்கப்படுவது தொடர்பிலான முடிவுகளை இச்சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பு வெளியிடப் பட்டபின்பே குறிப்பிட முடியும் எனவும் அவ தானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ந)





SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுதம் தாங்கிய படையினருக்கு காணிகளை விற்று விடாதீர்கள்

## வடக்கு மக்களிடம் மாகாண சபை மன்றாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆயுதம் தாங்கிய படையினருக்கு காணிகளை விற்பனை செய்து எமது தமிழினத்தின் இருப்பினைக் கேள்விக்குறியாக்கி விடாதீர்கள் என்று வடக்கு மாகாண சபை மக்களிடம் அவசரக் கோரிக்கை ஒன்றினை அவசியம் கருதி முன்வைத்துள்ளது.

வடக்கில் தற்போது மிகவும் தீவிரமாக இடம்பெற்று வரும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை கபளீகரம் செய்யும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக காணிகளை கொள்முதல் செய்யும் முயற்சியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே வடக்கு மாகாண சபை மக்களிடம் மன்றாட்டமாக மேற்படி கோரிக்கையினை தமிழினத்தின் நன்மை கருதியும் பிரதேச நன்மை கருதியும் முன்வைத்துள்ளது.

இதுதொடர்பாக வடக்கு மாகாண சபையினர் ஆளும் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவிக்கையில், நாம் எமது மக்களிடம் மன்றாட்டமாக ஒரு முக்கிய கோரிக்கை ஒன்றினை முன்வைக்கின்றோம்.

வடக்கில் தமிழர்கள் வாழ்ந்த பல இடங்களை இராணுவம் உள்ளிட்ட முப்படையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதோடு சிங்களவர்களை கொண்டு வந்து குடியேற்றுவதிலும் தீவிரம் காட்டி வருகின்றது.

இந்நிலையில் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கரையோரப் பிரதேசங்களில் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் கொள்முதல் செய்யும் முயற்சியில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஓர் கட்டமாக மாதகல் கோணவளைப்பகுதியில் கடற்படையினர் தனியாரிடம் தற்போது காணிகளை விலை கொடுத்து வாங்கும் முயற்சியிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஒரு போதும் எமது மக்கள் எடுப்பட்டுவிடக் கூடாது. படையினருக்கு எக்காரணம் கொண்டும் காணிக்களை விற்று விடாதீர்கள் என அவர் மேலும் மக்களிடம் மன்றாட்டமாக கேட்டுக் கொண்டுள்ளார். (இ)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1944 06 08 — மறைவு 2014 11 16

இரணைமடு திட்ட முகாமையாளரும், கிளிநொச்சிப் பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளருமாகிய திரு. சி.விகிர்தன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம் அவர்களுக்கு அஞ்சலி**



அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-9127)

D1. கமக்காரர் அமைப்பு (திட்ட உபகுழு, வட்டக்கச்சி.)

## கண்ணீர் அஞ்சலி

இரணைமடு திட்ட முகாமையாளரும் கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனப் பொறியியலாளருமாகிய திரு.சி.விகிர்தன் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம் அவர்களின் துயர்பகிர்வு**

தோற்றம் 1944 06 08 — மறைவு 2014 11 16



**சிறிதளவு நீரை சிதறாமல் பகிர்ந்தளித்து எம்மை வாழவைத்த மைந்தனை பெற்றெடுத்த அன்னையே உங்கள் பெயர் வானுலகிலும் எழுதப்படும் தாயே.**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் (திட்ட உப குழுக்களின்) சம்மேளனம், கிளிநொச்சி.**

(சி-9126)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் செல்லத்துரை கணேசபிள்ளை**



**கஜமுகன் ஹாட்வெயர் ஊழியராகிய அருள்ராசா அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் செல்லத்துரை கணேசபிள்ளை அவர்கள் 18.11.2014 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இல.147, 149,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர்
உரிமையாளரும்
ஊழியர்களும்.

(சி-9130)


## இராசி பலன்

20.11.2014
(கார்த்திகை 04, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை-6.02 மணிக்கு
திரியோதசி முன்னிரவு 6.22 மணிவரை
சித்திரை பிற்பகல் 12.33 மணிவரை
இராகுகாலம் 01.39-03.09 மணிவரை
சுபநேரம் 07.39-09.09 மணிவரை
பிரதோஷ விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவ மொன்று நடக்கும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திர மாக விளங்குவர், உறவினர்க ளின் சந்திப்பால் உள்ளம் மகிழ் வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தே சங்களும் அதிகரிக்கும், தொழி சம்பந்தமாக முக்கிய முடி கள் எடுப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம் போசன சுகமுண்டு.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, மாமன் மைந்துனர் வழியில் இனிய தகவல்கள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் மீது அதிக பிரியம் காட்டுவீர்கள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**சிம்மம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி:** சுயமுயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், இனிய தகவல்கள் வந்து சேரும் நாள்.

**துலாம்:** பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் நலன் கருதி சற்று அலைய நேரிடலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்களால் மன உளைச்சல் கள் ஏற்படலாம், உஷ்ண சம்பந்தமான ரோக நிலையுண்டு.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், மதிப்பும் மரியா தையும் உயரும், புதிய பொரு ட்களை வாங்கி மகிழ்வீர்கள் காரிய அனுகூலமுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி கரமானதாக இருக்கும், சான் றோர் சந்திப்புண்டு.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், அலு வலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலை பேசித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழி பட வேண்டிய நாள், பித்த சம்ப ந்தமான ரோகங்கள் ஏற்படலாம் தொழில் ரீதியான பயணங் களில் கூடுதல் கவனம் தேவை, திடீர் செலவுகள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும்

**யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப் பேருரை**



திரு.ஆ.நித்திலவர்ணன்
விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நாம் எதிர்கொள்ளும் சமூகம் சார் சவால்களை தீர்ப்பதற்கான முயற்சிகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் செயற்படும்வகையில் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், நல்விழுமியங்கள் போதிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் இனியும் செயற்படாது, வாழாதிருக்கக்கூடாது. இளைஞர்கள் மற்றும் யுவதிகளை நல்வழிப்படுத்துவதில், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து காத்திரமாகப் பணியாற்ற முடியும். வழிபாட்டுத் தலங்கள், பொதுநிறுவனங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் தமது தார்மீகக் கடமையிலிருந்து ஒருபோதும் தவறிவிடக்கூடாது.

**வடமாகாணத்தின் கலாச்சாரம்சார் சவால்கள்**

"ஓர் இனத்தின் இனத்துவ அடையாளங்களாக அந்த இனத்தின் பண்பாடும், கலாச்சாரப் பாரம்பரியங்களுமே காணப்படுகின்றன. அவற்றின் பாதுகாப்பிலேயே அவ்வினத்தின் பாதுகாப்பு தங்கியுள்ளது. தனித்துவம் என்றபோர்வையில் ஒதுங்கிப் புறநடையாகச் செல்லாமலும், பன்மைத்துவம் என்ற வகையில் கரைந்து காணாமல் போகாமலும், ஒவ்வொரு இனமும் தமது கலாசாரத்தைப் பாதுகாத்து வாழவேண்டும்."

என பருத்தித்துறைப் பள்ளிவாசல்பிரதம இமாம் அஜ்மல். ஏ.காதர் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டிருக்கின்றார். மேலும் அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் ஆரியரத்தின அத்துக்கல அவர்கள் கலாச்சாரத்தைப் பற்றி அண்மையில் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடும்போது,

"எந்தவொரு கலாச்சாரமும் மற்றுமொரு கலாச்சாரத்தை மிஞ்சிவிடமுடியாது. ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உன்னதநிலையாக மற்றைய கலாச்சாரத்தை மதிப்பதே எனக்கூறப்படுகின்றது" எனவும்

"யாழ்பாணத்திற்கே உரிய பல கலாச்சார முக்கியத்துவங்கள் காணப்படுகின்றன. முன்னேற்றமடைந்த அதேவேளை பண்டைய கலாச்சாரத்தை உடையவர்களே யாழ்ப்பாணமக்கள்" எனவும் குறிப்பிடுகின்றார்.

ஆனால் இன்று நாம் எமது "கலாச்சாரப் பாதுகாப்பு" தொடர்பாக கவலை கொண்டிருக்கின்றோம். பண்பாட்டு அடையாளங்களான தாய்மொழி, வாழ்க்கைமுறை, பாரம்பரிய கலைகள் உணவுமுறை மற்றும் ஆடை அணிகலன்கள் என்பன சிதைவடைய ஆரம்பித்துள்ளன. இதற்கான காரணங்களாக உலகமயமாக்கல், மேலைத்தேய மோகம் மற்றும் உள்நாட்டில் காண்பிக்கப்படும் இனரீதியான பாகுபாடு என்பன காணப்படுகின்றன.

புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில்வாழும்எமது உறவினர்களின் இரண்டாம் தலைமுறைப் பிள்ளைகள் பலர் தமிழ்மொழியை எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். அண்மையில் கோடைவிடுமுறைக்காக இலண்டனிலிருந்து வந்த எனது உறவினர்களுடன் இணைந்து "ஆடிஅமாவாசை" விரதத்தை அனுஸ்டிக்க நேர்ந்தது. படையலின்போது தேவாரம் பாடுமாறு சிறுவனொருவனைக் கோரிய போது, அவனால் பாடமுடியாதிருந்தது. மிகவும் கவலையாக இருந்தது.

புலம்பெயர் உறவுகள் எங்களது வாழிவியலிலிருந்து பிரிக்க முடியாதவர்கள். எங்கள்பல குடும்பங்களின் பொருளாதார மூலங்கள். அவர்கள் தமது திருமண பந்தங்களுக்கான மணமகள் மற்றும் மணமகன்களை இங்கிருந்தே பெரும்பாலும் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. இனி ஒவ்வோராண்டும் கோடைவிடுமுறைக்கு அவர்கள் இங்குதான் வருவார்கள். ஏனெனில் அவர்களது வேரும், வேரடி மண்ணும் இங்குதானுள்ளது. அவர்கள் சிலரின் நடவடிக்கைகள் எமது பண்பாட்டைச் சிதைப்பதாக உள்ளன. அவர்களின் இரண்டாம் தலைமுறைக்கான பண்பாட்டுக்கையளிப்பு மற்றும் தமிழ் கற்றல் - கற்பித்தலுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும்.

எமது தாய்மொழியான தமிழ் மொழி பல்வேறு வழிகளிலும் அழிவுக்குட்பட்டு வருகின்றது. அதனை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும். எமது கலாசார உடைகளை நாம் அணியவேண்டும். எமக்கே தனித்துவமான உணவுகளைத்தயாரித்து உண்ணவேண்டும். பாரம்பரிய கலைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு பாடசாலைகளிலிருந்தே ஊட்டப்பட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள இளைஞர் யுவதிகள் தமது தார்மீகக் கடமையாக இதனை ஏற்க வேண்டும். இது தொடர்பான சமூக விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டும். இதுவும் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வியின் ஒரு அங்கமாகும்.

**பேண்தகு அபிவிருத்திக்கும், க்கல்விக்குமிடையிலான தொடர்பு**

இவ்வாறான சவால்களை எதிர்கொண்டு பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கான முக்கியமான வழிமுறையாக கல்வி மற்றும் முறையான பயிற்சி என்பன விளங்குகின்றன.

கல்வியானது சந்தேகத்திற்கு இடமின்றி, நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க சமூக பொருளாதார மாற்றத்துக்கான முக்கியமான கருவியாகவுள்ளது.


தனியே தொழில்நுட்ப தீர்வுகளாலோ, அரசியல் சீராக்கங்களாலோ அல்லது நிதிசார் கருவிகளாலோ பேண்தகு அபிவிருத்தியை அடைந்துவிட முடியாது.

மாறாக எமது சிந்தனை மற்றும் செயற்பாட்டுப் பாதையை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

(தொடரும்)

# அதிசய உலகம்

முலைக்காம்புப் பழம்



titty nipple udder fruit முல்லைக் காம்புப் பழம் என்கிற பெயர் எமக்கு ரொம்பவே புதுமையானதுதான்.

இப்பழம் இலத்தீன் மொழியில் Solanum mammosum என்று அழைக்கப்படுகின்றது.

ஆங்கிலத்தில் இதற்கு பல பெயர்கள் இருக்கின்றன. இருப்பினும் Titty Fruit என்கிற பெயர்தான் வழக்கத்தில் சொல்லப்பட்டு வருகின்றது.

இலத்தீன் பெயரின் அர்த்தம் எமக்கு புரியாமல் விட்டாலும் ஆங்கில பெயரின் அர்த்தம் மிக நன்றாகவே, தெளிவாகவே புரிகின்றது.

இது உருளை, தக்காளி போன்றவற்றின் குடும்பத்தை சேர்ந்த பழம் தான். இதன் பூர்வீகம் தென்னமெரிக்கா.

ஆயினும் ஆசியா, கரீபியன் ஆகியவற்றிலும் மிகுந்த பிரபலம் பெற்று விளங்குகின்றது. ஏனென்றால் இது தோற்றத்தில் பசுவின் மடி போன்று காட்சி கொடுக்கின்றது.

இது சீனாவில் ஐந்து விரல் முட்டைப் பழம் என்று அழைக்கப்படுகின்றது. ஜப்பானில் இது நரி முகம் என்று அழைக்கப்படுகின்றது. இவையும் காரணப் பெயர்கள்தான். இதன் பூக்கள் பர்ப்பிள் நிறம் உடையவை. சிறிய அப்பிள் மரத்தின் உயரத்துக்கு இம்மரம் வளரும். புத்தாண்டு மலர்கின்றபோது வீட்டில் வளர்ந்து இருக்க வேண்டிய சுப மரங்களில் ஒன்றாக இது சீனாவில் மதிக்கப்படுகின்றது. அத்துடன் நத்தார் மரத்தை அலங்கரிக்கின்றமைக்கு இங்கு முலைக் காம்பு பழம் பயன்படுகின்றது.

இப்பழம் ஐந்து விரல்களை கொண்டது. இவை ஐந்தும் ஐந்து ஆண் குழந்தைகளை குறிக்கின்றன என்று கொள்கின்றனர். எனவே இம்மரம் செழிப்பாக வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிகின்ற வீட்டில் ஐந்து ஆண் குழந்தைச் செல்வங்கள் உருவாகும் என்பது நம்பிக்கை. இந்த ஐந்து விரல்களும் ஐந்து தலைமுறைகளை குறிக்கும்.


எனவே முலைக் காம்பு கனிந்து காட்சி தருகின்ற வீட்டை சேர்ந்தவர்கள் ஒரே கூரையில் ஐந்து தலைமுறைகள் சந்தோசமாக, செழிப்பாக வாழ்வார்கள் என்றும் சீனர்கள் கொள்வர்,

அத்துடன் இவ்வீட்டார் மிக நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள் என்றும் விசுவாசிக்கப்படுகின்றது. இது ஒரு நச்சுப்பழம். ஆயினும் மருத்துவ தேவைகள் சிலவற்றுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக பாதப் படை நோய்க்கு நல்ல மருந்தாக உள்ளது.

# சமைப்போம் சுவைப்போம்

## முடக்கத்தான் கீரை தோசை



**தேவையானவை:-**

**புழுங்கல்- அரிசி 200 கிராம்,**
**வெந்தயம்,**
**உளுத்தம்பருப்பு-தலா 2 டீஸ்பூன்,**
**முடக்கத்தான் கீரை- இரண்டு கைப்பிடி அளவு (கீரை விற்பவரிடம் கேட்டு வாங்கவும்),**
**எண்ணெய், உப்பு- தேவையான அளவு.**

**செய்முறை:-**

அரிசி, உளுந்து, வெந்தயத்தை ஒன்றாக ஊற வைத்து... ஒரு மணி நேரத்துக்குப் பிறகு முடக்கத்தான் கீரையையும் சேர்ந்து நைஸாக அரைத்து, உப்பு சேர்த்துக் கலக்கவும். மாவை தோசைக்கல்லில் தோசைகளாக வார்த்து, லேசாக எண்ணெய் விட்டு, பொன்னிறமாக வேகவிட்டு எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 3 ஆவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சட்ட விரோதமான ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம் என்று கூறியும் எதிரணியினர் நேற்று முன்தினம் கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தியிருந்தனர்.

# யாழிலிருந்து கட்டைக்காடு வரையிலான இ.போ.ச.பேருந்து சேவையை சீராக்கவும்

## பயணிகள் கோரிக்கை

(தும்பளை)

யாழ்ப்பாணத்திலிருந்து கட்டைக்காடு வரை சேவையில் ஈடுபட்டு வருகின்ற இலங்கை போக்குவரத்துக்கு சபைக்கு சொந்தமான 807 வழித்தட பேருந்துகள் சீரற்ற சேவையினை வழங்கி வருவதாக பயணிகளால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த சேவையானது தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை 6.30 மணிக்கு புறப்பட்டு கொடிகாமம் புதுக்காட்டுச்சந்தி, மருதங்கேணி என்பவற்றின் ஊடாக கட்டைக்காடு பிரதேசத்துடன் நிறைவடைவது வழமை.

பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், வியாபாரிகள் என பல தரப்பட்டவர்கள் இப்பேருந்துச் சேவையினை நம்பி தமது பயணத்தை தொடர்ந்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது குறித்த பேருந்துச் சேவையானது சீரற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் மேற்குறித்த பயணிகள் தினமும் பல தரப்பட்ட சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமை தற்போது அதிகரித்துள்ளமையால் பயணிகள் தனியார் பேருந்துகளுக்காக நீண்ட நேரம் காத்து நிற்கின்றனர். இதில் கட்டைக்காடு பாடசாலை வரை செல்லும் மாணவர்கள் குறித்த சேவையினை நம்பி அரச பேருந்துக்கு மாதாந்த பருவகால சிட்டையினை பாவித்து வருகின்றார்கள்.

இதேவேளை அரச பேருந்துகள் குறித்த நேரத்தில் சேவையில் ஈடுபடாவிட்டால் தனியார் பேருந்துகளில் கட்டணம் செலுத்தி பயணிக்க வேண்டிய சூழ்நிலை தினமும் உருவாகின்றது.

இவ்வாறு தனியார் பேருந்துகளில் பாடசாலை செல்லும் போது தாமதமாக பாடசாலைக்கு சென்று அதிபர், ஆசிரியர்களது கண்டிப்பு, தண்டனைகளுக்கும் மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றார்கள்.

அரச பேருந்துகளில் பயணம் மேற்கொண்டால் பாதுகாப்பானது என் கருதுகிறார்கள்.

ஆனால் அரச பேருந்துகள் தினமும் குறித்த நேரங்களில் சேவைகளில் ஈடுபடாது காணப்படுவதாக அங்குள்ள ஆசிரியர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளன.

குறித்த சேவையினை நம்பி நேரத்திற்கு பேருந்துத்தரிப்பிடங்களில் காத்து நிற்கும் பயணிகளை ஏமாற்றக் கூடாது என அங்குள்ள சில புத்திஜீவிகளால் தெரிவிக்கப்படுகின்றது. தனியார் பேருந்துகளில் உள்ள நெருக்கடிகள், பாதுகாப்பின்மை போன்ற பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக அரச பேருந்துகளை நம்பி பயணிகள் தினமும் பேருந்துத் தரிப்பட‌ங்களில் காத்து நிற்கின்றனர்.

அவ்வாறு காத்து நிற்கும் பயணிகளை உரிய நேரத்தில் ஏற்றிக் கொண்டு சேவையில் ஈடுபட வேண்டும் என அரச பேருந்துச் சேவையில் ஈடுபட்டு வரும் 807 வழித்தட சாரதிகளுக்கு பயணிகளால் தெரிவிக்கப்படுகின்றது. எனவே குறித்த சேவையினை சீரான முறையில் ஏற்படுத்தித் தருமாறு அங்குள்ள பயணிகளால் அரச பேருந்து சேவை அதிகாரிகளுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-7-19)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை யாழ். முகாமையாளர் சம்மேளனம் (JMF) ஒழுங்கு செய்துள்ளது.

இக்கலந்துரையாடலானது நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வளவாளராக வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சரின் முன்னாள் செயலாளரும் நீர்ப்பாசன திணைக்கள முன்னாள் பிரதிப் பணிப்பாளருமான பொறியியல் கலாநிதி கே.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-7)


# விசேட சலுகை

**வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.**

**முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampurijaffna@gmail.com


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 28<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L (கனடா)<br>தொ.இ: B/2089 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 17 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC/ உதவி முகாமையாளர்<br>தொ.இ: G/3144 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 23<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ கணக்காளர்<br>தொ.இ: B/2091 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 78 1/4<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3145 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 22 செவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: B/2094 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 46 1/4 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MSC/ பொறியியல்ாளர்<br>தொ.இ: G/3146 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 87 1/4 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/2099 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 22 1/2 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3156 |


# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'புயல் மழைக்குப் பின்னான பொழுது' ஜெயசீலனின் கவிதைநூல் வெளியீடு


(யாழ்ப்பாணம்)

த.ஜெயசீலனின் புயல் மழைக்குப் பின்னான பொழுது கவிதை நூல் அறிமுகம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலாபூசணம் குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள ராஜா ராணி சேவை இல்லமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன் போது வரவேற்புரையினை கலைப்பரிதி யோ. இருதயராசாவும் ஆசியுரைகளை சிவஸ்ரீ வே.தியானந்த ராஜகுருக்கள் வண. டேமியன் அடிகளார் ஆகியோரும் வாழ்த்துரைகளை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் தேசமான்ய சபாரவீந்திரன், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.இராங்கேஸ்வரன் ஆகியோரும் நூல் அறிமுக உரை யினை சாகித்திய ரத்னா தெணியானும் நூல் வெளியீட்டுரையினை கவிஞர் இ.சு. முரளிதரனும் வழங்வுள்ளனர்.

அத்துடன நூல் நயப்புரைகளை கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி மற்றும் சமூகவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டில் முதற் பிரதியினை பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் சி.பத்மநாதனும் கௌரவப் பிரதியினை கலாபூசணம் ச.உருத்திரேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (இ-7)




# உயிரிழந்தவர்களை நினைவுகூரமுடியாத அடக்கு முறைக்குள் தமிழரின் வாழ்க்கை

## யாழ்.மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டு

இறந்தவர்களை நினைவுகூர முடியாத அடக்கு முறைக்குள் தமிழர்கள் இருப்பதனால் அவர்களின் ஆரோக்கியமும் உள நிலையும் பாதிப்படைகின்றது என யாழ். மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மருத்துவர் சங்கம் தெரிவிக்கையில் , பல் தேசிய கம்பனிகளின் கொள்ளை இலாபம் ஈட்டும் சுயநலன் காரணமாக அவற்றின் நலன் காக்கும் வல்லரசுகள், உலகஸ்தாபனம்போன்றவற்றின் அழுத்தம் காரணமாக மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் இலங்கையில் மிகவும் அதிகவிலையில்விற்கப்படுகின்றன.

இதன் காரணமாக பல ஏழை நோயாளிகளுக்கு உரிய மருந்துகளையும் சிகிச்சைகளையும் பெற முடியாத அவல நிலையேற்பட்டு ள்ளது.

இதனை முதுகெலும்பில்லாத அரசியல் தலைமைகள் தட்டிக் கேட்க திராணியற்று இருக்கும் போது ஊடகவியலாளர்கள் இந்த சுரண்டல் களை அம்பலப்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றான சுகாதார வசதி அனைவருக்கும் கிடைப்பதற்குரிய வழி வகையைச் செய்தல் வேண்டும்.

தற்போதைய காலகட்டத்தில்போரின் விளைவுகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களை ஆரோக்கியமான பாதைக்கு இட்டுச் செல்வதற்கு அனைவரினதும் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் சுகாதாரச் சேவை அபிவிருத்தியானது கடந்த 3 தசாப்தகாலமாக திட்டமிட்டவகையில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றதா என ஆராயப்படல் வேண்டும்.

யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வடகிழக்கில் வாழ்வாதாரம் இன்றியும் கணவனை யிழந்த நிலையிலும் பாதிக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான விதவைகள், கணவன் இறந்து விட்டாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா என்பதனை அறிந்து கொள்ள முடியாமல் தவிக்கும் பெண்கள் மற்றும் இறந்தவர்களை நினைவு கூர முடியாமல் அடக்குமுறைக் குள்ளாக்கப்பட்டு இருக்கும் தமிழ் மக்களின் உண்மையான உளவியல் மற்றும் வாழ்வதாரப் பிரச்சினைகள் வெளிக் கொணரப்படல் வேண்டும்.

இவ்வாறே பெருந்தோட்டப் பகுதியில் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து தகுதி வாய்ந்த மருத்துவர்களை நியமிக்காது சுகாதார சேவையில் காட்டப்படும் பாரபட்சம் திட்டமிட்ட கருவன அழிப்பு ஆகியவற்றினையும் ஆதாரங்களுடன் வெளிக் கொணர வேண்டும்.

அண்மைக்காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்டப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கருவனக்குறைப்பு நடவடிக்கைகள், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்துடைப்பு விசாரணைகள் போன்ற இனஅழிப்பு நடவடிக்கைகளை மனிதவுரிமை மீறல்களையும் அம்பலப்படுத்த வேண் டும்.

தமிழ் பேசும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் மக்களின் சுகாதாரத் தேவை போன்ற அடிப்படை நலன்களில் ஆர்வமின்றி தமது ஆசனங்களை உறுதிப்படுத்துவதில் ஆர்வமாகவுள்ளனர்.

தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாகிவிட்ட நிலையில் மக்களை வழிநடத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஊடகங்களுக்கே உண்டு என யாழ். மருத்துவ சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-4)

## 'குரும்பை' குறும்பட வெளியீடு

(கொழும்புத்துறை)

யாழ்திருமறைக்கலா மன்றத் தின்ஏற்பாட்டில் பீ.சே.கலீஸ் இயக்கத்தில் உருவான குரும்பை குறும்பட வெளி யீட்டு விழா எதிர்வரும் 23 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதான வீதியிலுள்ள கலைத்தூது கலையகத்தில் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் வாழ்வக நிறுவன பிரதித்திட்ட மேலாளர் சைவ ப்புலவர் கே.பரந்தாமன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தின ராக யாழ். மறை மாவட்ட சமூக தொடர் புகள் ஆலய இயக்குனர் அருட் பணி ஜே.சி.போல் றொகான் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது குரும்பை எனும் குறும்படத்தின் மதிப்பீட்டு உரையினை எழுத்தாளர் அ.யேசுராஜா வழங்கவுள்ளார். (இ-7-51)

# புனரமைக்கப்படாத நிலையில் பேருந்து தரிப்பிடங்களுள்ளன



(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம் மத்தியில் பேருந்து தரிப்பிடங்கள் புனரமைக்கப் படவில்லை என பயணிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் பணிபுரியும் அரச ஊழியர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பல தரப்பட்டவர்களுக்கு குறித்த பேருந்து தரிப்பிடங்கள் முக்கிய தரிப்பிடமாக காணப்படுகின்றது.

ஆனால் பேருந்து தரிப்பிடம் நிரந்தரமாக காணப்படாமையினால் பல்வேறு சிரமங்களை பயணிகள் எதிர்நோக்கி வருகிகின்றனர்.

தற்போது மழைபெய்து வருவதால் பயணிகள் மழைக்கு ஒதுங்கி நிற்பதற்கு பேருந்து தரிப்பிடம் இல்லாது மிகவும் சிரமப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் பேருந்து தரிப்பிங்கள் தகரக்கொட்டகையாகவும் சிறு தரிப்பிடங்களாகவும் காணப்படுவதால் மழைபெய்யும் போது பல பயணிகள் அத்தரிப்பிடங்களில் ஒதுங்கி நிற்க முடியாது சிரமப்பட்டு வருகின்றார்கள்.

இது தொடர்பாக பயணிகளால் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித் திருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் என பல தரப்பட்டவர்களது கோரிக்கைகளுக்கமைய குறித்த பேருந்துத்தரிப்பிடத்தினை புனரமைத்துத் தருமாறு அங்குள்ள பயணிகளால் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-7-283)




## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேவி பாகவதம் எனும் தொடர் சொற்பொழிவினை சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் வழங்கவுள்ளார். (இ-7)

✦✦✦✦✦✦✦✦


(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தியில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீ மகாபக்த விஜயம் பற்றி வ.ஆ.தங்கமயில் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களமானது சாமியார் ஆச்சிரமம்

## நான்கு பெண்கள் பலி



அரியானா மாநிலத்தில் ஹிசார் நகர் அருகே பர்வாலா என்ற இடத்தில் 12 ஏக்கர் பரப்பில் பிரமாண்ட ஆச்சிரமம் நடத்தி வருபவர் சர்ச்சைக்குரிய சாமியார் ராம்பால் இவருக்கு (வயது -63).

கடந்த 2006ஆம் ஆண்டு, ஜூலை 12ஆம் திகதி இவரது ஆதரவாளர்களுக்கும், மற்றொரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல ஏற்பட்டது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். இது தொடர்பாக சாமியார் மீதும், அவரது ஆதரவாளர்கள் மீதும் ரோட்டாக் செசன்சு நீதிமன்றில் கொலை வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், பஞ்சாப்-ஹரியானா நீதிமன்றில் சாமியார் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நீதிமன்றில உத்தரவிட்டும் தொடர்ந்து 3 முறை ஆஜர் ஆகாத நிலையில், அவர் மீது பிணையில் வர முடியாத பிடிவாரண்டு பிறப்பித்து நீதிமன்றில் உத்தர விட்டது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமைக்குள் அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு அரியானா மாநில பொலீசுக்கு உயர் நீதிமன்றில் கண்டிப்புடன் உத்தரவிட்டது.

இதையடுத்து சாமியாரின் ஆச்சிரமத்தை சுற்றி வளைத்து, அவரை கைது செய்வதற்காக பொலிஸ் அதிகாரிகள் நேற்று முன்தினம் செனறணர். கூடவே பெரும் பொலிஸ் படையும் சென்றது.

அப்போது ஆச்சிரமத்துக்கு உள்ளே இருந்த சாமியாரின் ஆதர வாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. பொலிஸார் மீது சாமியார் ஆதரவாளர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினர். இதில் செய்தி சேகரிப்பதற்காகவும், படம் எடுப்பதற்காகவும் சென்றிருந்த ஊடகத்தினரும் சிக்கினர். தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர்களது கமராக்கள் உடைபட்டன.

சாமியாரின் ஆதரவாளர் களை விரட்டியடிக்க ஏதுவாக பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்தனர். தடியடி நடத்தினர். ஆனால் ஆச்சிரமத்துக்கு உள்ளே இருந்த அவரது ஆதரவாளர்கள், பொலிஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பெற்றோல் குண்டுகளை வீசினர்.

நிலைமை மோசமானதால், துணை இராணுவத்தினரும் வந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பொலிஸாருடன் இணைந்து அவர்களும் தடியடி நடத்தி, கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்து சாமியார் ஆதரவாளர்களை விரட்டியடிக்க முற்பட்டனர்.

இந்த மோதல் சம்பவத்தில் ஊடகத்தினர், பொலிசார் 100 பேர் உட்பட 200இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். ஆச்சிரம பகுதியே போர்க்களம் போல காணபட்டது. படுகாயம் அடைந்தவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டு, வைத்திய சாலை களில் அனு மதிக் கப்பட்டனர். காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த தாயும், 5 வயது குழந்தையும் பலியாகி உள்ளனர். இவர்கள் மத்திய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. ஆனால் ஆச்சிரம கலவரத்தில் 4 பெண்கள் பலியானதாக கூறப்படுகிறது. (இ-5)




# தருமபுரியில் 11 சிசுக்கள் இறந்ததற்கு சிகிச்சை குறைபாடு காரணம் இல்லை

## முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிக்கை

தருமபுரி அரச வைத்தியசாலையில் 11 பச்சிளம் குழந்தைகள் இறந்துள்ளதற்கு சிகிச்சைக் குறைபாடுகள் காரணம் இல்லை. குறைப் பிரசவம், குழந்தை எடை குறைவு போன்ற இயற்கையான காரணங்களே காரணம். ஆனாலும், 4 நாட்களில் சற்று அதிக இறப்புகள் நடந்துள்ளதால் கண்காணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

தருமபுரி மாவட்ட அரச மருத்துவக் கல்லூரி வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த 4 நாட்களில் 11 பச்சிளம் குழந்தைகள் இறந்துள்ளன. இதுதொடர்பான ஆய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. அமைச்சர்கள் நத்தம் விஸ்வநாதன், வைத்திலிங்கம், எடப்பாடி பழனிச்சாமி, டாக்டர் விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் மோகன் வர்கீஸ் சுங்கத், தமிழ்நாடு அரச ஆலோசகர்கள் ஷீலா பாலகிருஷ்ணன், கே.ராமானுஜம், சுகாதாரத் துறைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதா கிருஷ்ணன், சிறப்பு செயலாளர் செந்தில் குமார், சமூகநலத் துறைச் செயலாளர் பஷீர் அஹமது, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் இயக்குநர் மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தருமபுரி அரச மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் கடந்த 14ஆம் திகதி 5 பச்சிளம் குழந்தைகள் இறந்தன என்று தெரிந்தவுடன், சென்னையில் உள்ள குழந்தைகள் நல வைத்திய சாலையில் இருந்து பச்சிளம் குழந்தைகள் தீவிர கண்காணிப்புப் பிரிவு ஒருங்கிணைப்பு அலு வலர் டாக்டர் சீனிவாசன் உடன டியாக தருமபுரி அரசு வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

### மருத்துவக் குறைபாடு இல்லை

அவரது ஆய்வில், தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் எந்தவொரு மருத்துவரீதியான குறைபாடும் காணப்படவில்லை. தற்போதும் 73 பச்சிளங் குழந்தைகள் இந்த வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றன.

மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் கீதாலட்சுமி தலைமையில் பச்சிளங்குழந்தை நிபுணர்கள் நாராயண பாபு, சீனிவாசன், குமுதா ஆகியோர் தருமபுரி வைத்திய சாலையில் கண்காணிப்பு பணி மேற்கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# பிஜி தீவுக்கு சென்ற பிரதமர் மோடிக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு

பாரதப் பிரதமர் மோடி உத்தியோகபூர்வ பயணமாக 10 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மியன்மார், அவுஸ்திரேலியா மற்றும் பிஜி நாடுகளுக்கு சென்றுள்ளார்.

மியன்மார் மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளில் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, இந்திய விமானப்படைக்கு சொந்தமான தனி விமானத்தில் பிஜி சென்ற பிரதமர் மோடியை நவ்சோரி சர்வதேச விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் பைனிமராமா வரவேற்றார். பின்னர் பிரதமர் மோடிக்கு இராணுவ மரியாதையுடன் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது.



அதன் பின் இரு நாடுகளுக்கிடையே மூன்று முக்கியமான ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. பிஜி நாட்டு மக்கள் இந்தியா வந்து சேர்ந்தவுடன் விசா வழங்கப்படும் என்ற முக்கிய அறிவிப்பையும் மோடி வெளியிட்டார். பின்னர் அநநாட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியாவுக்கு பிஜி முக்கியமான கூட்டணி நாடு என்று கூறினார்.

அந்நாட்டு பிரதமர் பிராங்க் பைனிமராமாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின் பேசிய பிரதமர் மோடி, அந்நாட்டின் சிறு மற்றும் கிராமப்புற தொழில் வளர்ச்சிக்காக 5 மல்லியன் டொலர் நிதியுதவியை இந்தியா வழங்கும் என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# லைபீரியாவிலிருந்து புதுடில்லி திரும்பிய இந்தியப்பிரஜை த்னிமைப்படுத்தப்பட்டார்

லைபீரியாவிலிருந்து இந்தியா திரும்பிய இந்தியப் பிரஜை ஒருவருக்கு எபோலா தொற்று இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவரை அதிகாரிகள் தனிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

லைபீரியாவில் இருந்தபோது இந்த நோய் தொற்றிய இந்த 26 வயது ஆணுக்கு அவர் அங்கிருந்த போதே உடல்நிலை சரியாகி விட்டது என்று இந்திய சுகாதார அமைச்சகம் கூறியது.

கடந்த வாரம் டில்லிக்கு விமானம் மூலம் வந்த இவர்மீது, உலக சுகாதார அமைப்பின் விதிமுறைகளின்படி செய்யப்பட்ட பரிசோதனைகளில், எந்த ஒரு வைரஸ் தொற்றும் இருப்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேலும் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் அவர விந்தில் எபோலா வைரஸின் சில கூறுகள் இருப்பது கண்டறியப்பட்டது.

இவரது உடலிலிருந்து வரும் அனைத்து திரவங்கள் மீதும் நடத்தப்படும் சோதனைகள் அனைத்திலும், வைரஸின் கூறுகள் இல்லை என்ற நிலை வரும் வரை அவர் தனித்து வைக்கப்பட்டிருப்பார் என்று அமைச்சகம் கூறியது.

இதன்மூலமே எபோலா தொறறை மற்றவர்களுக்கு அவர் பரவ விடாமல் தடுக்க முடியும்.

யாரும் பீதியடையத் தேவையில்லை என்று சுகாதார அமைச்சர் கூறினார்.

சுகாதார நிலைமைகள் குறித்த தரக்கட்டுப்பாடுகள் குறைவாக இருப்பதாகக் கருதப்படும் இந்தியாவில் இந்த நோய் பரவுவதால் ஏற்படும் பாரிய விளைவுகள் குறித்து முன்னர் ஐ.நா. சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டிருந்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்டத்தில் திட்டமிடல் செயற்பாடுகள்

ஒரு நிறுவனத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நோக்கங்களை அல்லது ஒரு நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்கு முறைகள் தயாரிப்பதை திட்டமிடல் என பொதுவாக குறிப்பிடலாம். பாடசாலைகள் தற்போது நிறுவனமயப்பட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. பாடசாலைகளில் புதிய கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது. உருவாக்கம் பெற்ற செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. கல்வி அமைச்சு தனது 07/2013 இலக்க சுற்று நிருபத்தில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட பண்பு ரீதியான, அளவு ரீதியான கட்டமைப்பு ரீதியான அபிவிருத்தி பற்றிய திட்டமிடல்கள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் பாடசாலைக்கான அபிவிருத்தி நோக்கிலான திட்டமிடல்செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பாடசாலை முகாமைத்துவ நிர்வாக செயற்பாடுகளில்இணைந்திருப் போர் திட்டமிடல் தொடர்பில் போதுமான விளக்கத்தையும் பயிற்சிகளையும் பெறுவது அவசியமாகிறது. பொது வான ஒரு முறைமையின் கீழ் எல்லைப் பாடசாலைகளிலும் ஒரே வகையான அபிவிருத்திச்சுட்டிங்களைப் பயன்படுத்துவதே பொருத்தமானதாகும்.

பாடசாலை ஒன்றின் எதிர்காலத்துடன் பிணைந்துள்ளயாதாயினும் ஒரு நோக்கத்தை அடைவதற்கு ஏற்ற பல்வேறு மாற்று வழிகளை கண்டுபிடித்து அவற்றினை மதிப்பீடு செய்து அவற்றில் பொருத்தமானவற்றை தெரிந்தெடுத்து அவற்றை செயற்படுத்துவதற்கான முடிவுகளை முன்கூட்டியே மேற்கொள்வதை பாடசாலைத் திட்டமிடல் எனக் குறிப்பிடலாம். இதன் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

↳ குறிக்கப்பட்ட கால எல்லையுள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருத்தல்.

↳ பாடசாலையில் இருக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களைஉச்சமட்டத்தில்பயன்படுத்தல்.

எந்தவொரு பாடசாலையும்,

☞ தான் அடைய வேண்டிய இடம் எது?

☞ அந்த இடத்தை எவ்வாறு அடைந்து கொள்வது?

☞ அதற்காக தன்னிடம் உள்ள வளங்கள் எவை?

என்பவற்றை அறிவதுடன் அடைய வேண்டிய இடத்தை அடைவதற்கு பல்வேறு மாற்று வழிகள் இருப்பினும் அதனைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

➢ பல்வேறு மாற்று வழிகள் பற்றி பட்டியல்படுத்தல்.

➢ சிறந்த மாற்று வழியைத் தெரிவு செய்தல்

➢ குறைந்த செலவில் பயன்தரக் கூடியதாக இருத்தல்

➢ இலகுவாக பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்

➢ இடர்கள் குறைவாக இருத்தல்.

கல்விமுறைமையின் இறுதி மட்டம் பாடசாலையாகும். இன்று இலங்கையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றின் செயற்பாட்டுக்காக அரசாங்கம் பல்வேறு நிறுவனங்கள், சமூகம் ஆகியவை பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகின்றன. இந்த பல மில்லியன் ரூபா பெறுமதியான பணம் உண்மையில் மனித வள அபிவிருத்திக்கான முதலீடாகும். இது இலங்கை மக்களுக்குரிய நிதியாகும். எனவே இந்த முதலீட்டின் மூலம் உச்சப்பயனை மக்களுக்கு வழங்குவது பாடசாலைகளின் பொறுப்பாகும். பயனுள்ள திட்டங்களை பாடசாலைகள் மேற்கொள்ளாவிட்டால் கல்வி அமைச்சு முன்வைக்கும் பல்வேறு செயற்பாடுகளையும் பணிகளையும் தாமதமின்றி வினைத்திறனுள்ளதாக நிறைவேற்றுவது சிரமமாக இருக்கும்.

பாடசாலைக்கான ஒரு திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பாடசாலை அதிபருக்கு உரியதாகும். பாடசாலையின் திட்டத்தை தயாரிப்பதற்கு முன்பாக கல்வியுடன் தொடர்பான கொள்கைகளின் இயல்புகளை புரிந்து கொண்டு அதன்படி செயற்படல் முக்கியமானது.

இலங்கையில் கல்வித் துறை அபிவிருத்தி சட்டமும் வேலைத்திட்டமும் கொள்கைகள் தொடர்பான விடயங்களை முன்வைத்துள்ளன. இதனைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி தொடர்பில் சாதாரண கல்வி பிரவேசத்திற்கு சம வாய்ப்பை அதிகரித்தல்.



கல்வித் தரிசனம்

2. ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியின் தர உறுதிப்பாட்டை வளர்த்தல்.

3. கல்வியில் சிறந்த பராமரிப்பு மற்றும் சேவை வழங்கலை வலுப்படுத்தல்.

➢ மையத்தலைப்பு–கல்வித்துறை அபிவிருத்தி முறைமைகள் சுழற்சித் திட்டம்.

➢ கட்டாய செயற்பாடு பெறுபேறு அடைவை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

(மூலம் –கல்வி அமைச்சு)

பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னர் பாடசாலையின் போஷிப்பாளர்கள் பலர் இருப்பார்கள். இவர்களைக் கருத்தில் எடுக்க வேண்டும். பாடசாலையில் நிகழும் மாற்றத்தை உண்மையில் கவனித்துக் கொண்டு இருப்பவர்கள். அதன் உரித்தாளர்கள் ஆவார். (Stake holders) இவர்கள் அபிவிருத்தித் திட்டமிடல் பங்கேற்கும் போது பல நன்மைகள் உண்டாகும்.

☞ அனைவரும் பங்கு பற்ற சந்தர்ப்பம் வழங்கல்.

☞ அனைவரது கருத்துக்களும் பிரதிநிதித்துவப்படுத்த அவகாசம் வழங்குதல்.

☞ ஒரு விடயத்தைப் பலரும் பல கோணத்தில் நோக்குவர்.

☞ ஒருவருக்கு படாத விடயங்கள் மற்றவர்களின் அவதானத்திற்கு உட்படும்.

☞ எல்லோரும் திட்டமிடலில் பங்குபற்றினர் என்ற உணர்வை ஏற்படுத்தல்.

☞ பாடசாலையின் உண்மையான உரிமையாளர்கள் என்ற உணர்வு ஏற்படும்.


☞ பாடசாலை தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் தொடர்புபட வாய்ப்பளித்தல்

☞ நடைமுறைப்படுத்தலின் போது தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.

☞ சகல பிரிவினரையும் ஊக்குவித்தல்.

பாடசாலைத்திட்டமிடல் பங்குபற்றல்திட்டமாக அமைய வேண்டும் (Participatory Planning)

சுற்று நிலையம் 07/2013 இன் வழிகாட்டலின் படி பாடசாலையொன்றின் மற்றைய கால மற்றும் வருடாந்த நடைமுறைப்படுத்தலிலும் தட்டறியாத வகுத்தல் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் (SDC) கடமையாகும். SDC, SMC என்பன இன்று ஒரு அபிவிருத்தித் திட்டமிடல் குழுவை




அமைத்து திட்டமிடலை மேற்கொண்டு திட்டமிடலைத் தயாரித்து அனுமதிக்கான முன்னறிவித்தல் வேண்டும்.

பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கான படிமுறைகள் பின்வருமாறு,

**படிமுறை 1 நிலைமையை ஆய்வு செய்தல்**

↳ கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை

☞ கல்வியின்நோக்கங்கள்

☞ சமூகமயப்படுத்தல்

☞ வாழ்க்கைத் தேர்ச்சி

↳ தேசிய கல்விக் கொள்கைகள்

↳ அடிப்படைத் தேர்ச்சிகள்

↳ கல்விக்கொள்கை, சம வாய்ப்பு, கல்விச் சட்டங்கள், உற்று நோக்கல்

↳ சிறுவர்/மாணவர் உளவியல் அறிக்கை

↳ மாணவர் மையம், செயற்பாட்டு மையம், மாணவர்களைக் கௌரவித்தல்.

படிமுறை 2 பாடசாலை [illegible]ண்யக் கருத்திற் கொள்ளல்

↳ பௌதீகச்சூழல்

☞ ஊட்டப்பாடசாலை

☞ நகரகிராம பாடசாலை அமைவிடம்

☞ பாடசாலையுடனான சமூக உறவு

↳ பாடசாலை பற்றிய அடிப் படைத்தரவு

☞ மாணவர்

☞ ஆசிரியர்கள்

☞ பௌதீகவள வசதி

↳ சுற்றல்கற்பித்தல்வேலைத் திட்டம்

☞ மாணவர்கள் அடைவு மட்டம்

☞ இணைபாடவிதான செயற்பாடுகள்

☞ மாணவர்கள் நலன் புரி வேலைத்திட்டம்

☞ ஒழுக்கப் பிரச்சினைகள

☞ மாணவர் வரவு விடயங்கள்

↳ ஆசிரியர் நலன்புரி விடயங்கள்

↳ பாடசாலைகளுக்குரிய வளங்கள், வருமானங்கள் எவ்வாறு தேடுவது

**தரவுகள், தகவல்கள் திரட்டிக்கொள்வதற்கான வழிகள்**

☞ பாடசாலையில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களிடம் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வது

☞ காணப்படும் குறைபாடுகள் தொடர்பான ஆய்வொன்றை நடத்துவது

☞ தகவல்களைப் பெறுவதற்கு பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களிடம் கருத்துக்களைப் பெறுவதோடு அவற்றைப் பயன்படுத்தல், நேர்காணல் வழிமுறைகளைப் பயன்படுத்தல்.

☞ நெறிப்படுத்தல்வேலைத் திட்டத்தை முன்னெடுத்தல்

☞ கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கு சிந்தனையைத் தூண்டுதல், விசேட அறிவுள்ள குழுக்களுடன் கலந்துரையாடல்

☞ நிலைமையைஆய்வுசெய்வதற்கான நுட்ப முறையை SWOT முறையைப் பயன்படுத்தல் (S- Strength-பலம், W-Weakness-பலவீனம், O- Opportunity-வாய்ப்பு, T-Threats- அச்சுறுத்தல்

அனைத்து தரவுகள் தகவலைப்பெற்றுக்கொள்ள ஆரோக்கியமான கலந்துரையாடல் ஒன்றை அனைத்து மேற்பார்வையாளர்களும் நடத்த வேண்டும். அதில் திட்டத்திற்கு தேவையான விடயங்களை உள்வாங்கலாம்.

**கொள்கைத்தயாரிப்பு**

நிலைமையை ஆராயும் போது பாடசாலை பற்றிய தகவல்களினூடாக பாடசாலைக்குப் பொருத்தமான கொள்கையை வகுப்பது முக்கியமானதாகும். பாடசாலைத் தேவைகள் பலவாக இருக்கலாம். அனைத்தையும் பூர்த்தி செய்யமுடியாது. எனவே முன்னுரிமைஅடிப்படையில்வேலைத்திட்டங்களை தெரிவு செய்ய வேண்டும். கொள்கை திட்டமிடும்போது பாடசாலைக்குப் பொதுவான விடயங்கள் பல உண்டு. அவை பின்வருமாறு,

➢ ஆலோசனை மைய வேலைத்திட்டம்

➢ மாணவர் அடைவு

➢ இணைபாடவிதான செயற்பாடு

➢ ஆசிரியர் அபிவிருத்தி

➢ நலன்புரிச் சேவைகள்

➢ மனிதவளம் போது மான அளவில் வழங்கப்படுதல்

➢ பௌதீக வளங்கள் போது மான அளவு வழங்கப்படல்

➢ பாடசாலை முகாமைத் துவம்

➢ பாடசாலைசமூகத்தொடர்பு

இவை தொடர்பாக வேலைத்திட்டங்களை மேற் கொள்வது பொருத்தமானது.

**பாடசாலைத் திட்டம் தயாரிக்கும் முறை**

↳ முதற்பகுதி பாடசாலையின் அறிமுகம் பின்புலம்

➢ பாடசாலையின் பின்புலம், களநிலைமை, தோற்றப்பாடு

➢ நோக்கம், நோக்கக்கூற்று

↳ இடம்பெறும் வினாக்களும் பிரச்சினைகளும்

➢ எதிர்நோக்கும் பிரச்சினைகள்


➢ நிலைமையை அறிந்து கொள்ளல்

↳ மத்திய காலத்திட்டம்

➢ கொள்கைகளை நிலை நாட்டுதல்

➢ முறைமையான மத்தியகாலத்திட்டம்

➢ வேலைத்திட்டம்





➢ முறைமைகள்

➢ செயற்பாடு

➢ வருடாந்தம் செயற்படுத்தும் திட்டம்

↳ செலவும் நிதியாக்கமும்

☞ செலவு



பொன்னம்பலம் அருணகிரிநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

➢ மீண்டெழும் செலவு

➢ மூலதனச் செலவு

↳ பெறுபேறு மட்ட மேற்பார்வையும் மதிப்பீடும்

➢ ஒழுங்கமைப்பு

➢ மேற்பார்வை

➢ மதிப்பீடு

➢ தரக்கணிப்பீடு

பாடசாலைகளில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் வெறும் அறிக்கை வடிவத்திலே உள்ளன. அமுலாக்கத்திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் பாடசாலைகளில் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்துள்ளன. ஆனால் நடைமுறையில்அவைவினைத்திறன் மிக்கதாக காணப்படவில்லை. ஏனெனில் அத்திட்டங்களில் பெரும்பாலானவை அதிபர், முகாமைத்துவக் குழுக்களால் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதாக இருந்ததால் நடைமுறைப்படுத்துவதில் இடர்பாடுகள் இருந்தன.

07/2013 சற்று நிருப அடிப்படையில் பாடசாலை போசிப்பாளர்களின் கலந்துரையாடலின் பின்னர் உருவாக்கப்படும்திட்டங்கள் ஆக்கபூர்வ மானதாகவும் நடைமுறைப்படுத்தப்படக்கூடியதாகவும் இருக்கும். மேலும் பாடசாலைத் திட்டமிடலை மேற் கொள்ளும் போது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களை பயன்படுத்துவது முக்கியமானதாகும். அத் துடன் பாடசாலை மட்டத்தில் அமைக் கப்பட்டுள்ளபுதிய கட்டமைப்புக்களைப் பயனுள்ள வகையில் வலுப்படுத்தி பாடசாலைகளில் அணிக்கலாசா ரத்தை மேம்படுத்தினால் பாடசாலைகள் உரிய இலக்கை அடைந்து கொள்ள முடியும்.

**துணை ஆதாரங்கள்**

பாடசாலைமட்டத் திட் டமிடல் பற்றிய வழிகாட்டிக் கைநூல் – கல்வி அமைச்சு

➢ பாடசாலை மேம்பாட்டிற்கான திட்டமிடல்- ஹேமரணசிங்க

➢ 07/2013 சுற்றுநிருப கைநூல்- கல்வி அமைச்சு

➢ பாடசாலை மேம்பாடு வேலைத்திட்டம்– வழிகாட்டல்கைநூல்-கல்விஅமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கூரிய ஆயுதங்கள் சகிதம் துணிகர கொள்ளை

## 24 இலட்சம் ரூபா பணமும் 12.75 பவுண் நகைகளும் திருட்டுக் கும்பல் வசம்

(மல்லாவி)

முகமூடி அணிந்த கொள்ளையர்கள் கூரிய ஆயுதங்கள் சகிதம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனக்கூறி வீட்டின் பின்புறத்தில் தூங்கிக் கொண்டிருந்தவர்களை கட்டி வைத்து விட்டு பின் கதவை உடைத்து உள்நுழைந்து அறையில் அலுமாரியினுள் வைக்கப்பட்டிருந்த 24 இலட்சம் ரூபா பணத்தினையும் 12.75 பவுண் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கருவேலன்கண்டல் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.




இது தொடர்பில் தெரியவருவதாவது. முகமூடிஅணிந்தநான்குகொள்ளையர்கள் கத்தி,கோடரி,வாள்கள் போன்ற கூரிய ஆயுதங்களுடன் வீட்டின் பின்புறமாக படுத்திருந்த கட்டட வேலைகளில் ஈடுபடும் நான்கு நபர்களை அவர்களது போர்வை கொண்டு கைகள் கால்கள் ஆகியவற்றை கட்டிய பின்னர் சத்தம் போடக் கூடாது நாம் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இருந்து வந்துள்ளோம் எனக்கூறி மிரட்டியதுடன் அவர்களிடமிருந்த கையடக்க தொலைபேசிகளையும் பறித்து எடுத்துள்ளனர்.

அதன் பின்னர் வீட்டின் பின்புற கதவை உடைக்கும் சத்தம் கேட்டு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வீட்டு உரிமையாளரும் மனைவியும் விழித்துக் கொண்டனர்.

உடனடியாக அவர்கள் இருவரும் எழுந்து கதவினை தள்ளிப் பிடித்த வேளை மனைவி அலவாங்கினால் குத்துப்பட்டு மயங்கி வீழ்ந்தார். அதனையடுத்து கதவினை உடைத்து உள்நுழைந்த திருட்டுக் கும்பலுக்கும் உரிமையாளருக்கும் இடையில் சுமார் 30 நிமிடங்கள் வரை வாய்த்தர்க்கம் தொடர்ந்தது. இதனையடுத்து வீட்டு உரிமையாளர் கையிலும் தலையிலும் வாள் வெட்டுக்கு இலக்காகி மயங்கி வீழ்ந்தார்.

ஒப்பந்தகாரரினால் வங்கியில் எடுத்துவரப்பட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 24இலட்சம் ரூபா பணத்தினையும் 12.75பவுண் நகைகளையும் தம்வசம் எடுத்துக் கொண்ட கும்பல் வீட்டின் பின்புறம் வழியாக தப்பிச்சென்றுள்ளனர்.

சில மணிநேரம் சென்ற நிலையில் மனைவி மயக்கம் தெளிந்து அவலக்குரல் எழுப்பவே அயலவர்கள் அவ்விடத்திற்கு ஓடிவந்து காயப்பட்ட இருவரையும் மீட்டு முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இச் சம்பவத்தில் ஒப்பந்தகாரரான இலட்சுமிகாந்தன் சந்திரரூபன் (வயது-51) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் அன்றையதினம் காலை மோப்ப நாய்களுடன் குறித்த வீட்டிற்கு வருகை தந்து கொள்ளையர்களை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டதுடன் துரித விசாரணையினையும் மேற்கொண்டனர். (2-15-28)




## கொக்கிளாய் கொலை வழக்கு வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றம்

கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் 21/08/2014 அன்று படு கொலை செய்ததாக குற்றச்சாட்டப்பட்ட இருவருக்கு எதிரான கொலை குற்றச்சாட்டுகள் முகத்தோற்றளவில் நிருபிக்கப்பட்டதை தொடர்ந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களை 2/12/2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி மேல் நீதிமன்றிலிருந்து அறிவித்தல் வருகின்ற போது எதிரிகள் மேல நீதிமன்றுக்கு ஆஜராக வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி இஸ்மத் ஜமில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## வீட்டுப் பொருட்களை களவாடிய நபருக்கு ஒரு வருடக் கடூழிய சிறைத்தண்டனை

(முல்லைத்தீவு)

வீடொன்றை இரு மாதங்களுக்கு முன்னர் உடைத்து உட்புகுந்து 24 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான பொருட்களை களவாடியதாக குற்றம்சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு நேற்று முன்தினம் ஒரு வருடக் கடூழியச்சிறைத் தண்டனையை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டார்.

உடையார்கட்டைச் சேர்ந்த நபரிடமிருந்து பொருட்கள், பணம் என்பன முல்லைத்தீவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் அப்பணம், பொருட்கள் என்பன முறைப்பாட்டாளரிடம் நீதிமன்றம் கையளிப்பதற்கு உத்தரவிட்டது.

எதிரியின் கைவிரல் அடையாளத்தை பெற்றுக் கொள்ளுமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (2)

## கஞ்சா வைத்திருந்த நபர் அதிரடிப்படையினரால் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் கஞ்சா வைத்திருந்த நபரை விசேட அதிரப்படையினர் கைது செய்தனர்.

வவுனியா குருமன்காடு பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டிருந்த சமயம் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை சோதனை செய்த போது அவரது பையில் ஒரு கிலோ 80 கிராம் நிறை கொண்ட கஞ்சா பொட்டலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட பிரஸ்தாப நபர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபோன்ற கைது நடவடிக்கைகள் அடிக்கடி வவுனியா பேருந்து நிலையத்தில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)



இவ்வாண்டு தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினரால் கப்புறுக்க பரப்புற (கற்பக தரு பரம்பரை) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய இவ்வாண்டு பிறந்த பிள்ளைகளின் பெற்றோர் ஒருவருக்கு தலா 2 பொலித்தீன் பை தென்னங்கன்றுகளை தென்னை அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் ஜெ.சந்தியேந்திரன் கிளிநொச்சி சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து வழங்கியதைப் படத்தில் காணலாம்.

## வீட்டின் மீது இடி விழுந்து உடைமைகள் முற்றாக நாசம்

(குருமன்காடு)

வவுனியா பொன்னாவரசன்குளம் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது இடிவிழுந்து மின்னொழுக்கு ஏற்பட்டதில் உடைமைகள் அனைத்தும் தீயில் எரிந்து முற்றாக நாசமாகின.

அயல் வீடொன்றில் இடம் பெறவிருந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக முதல் நாள் சென்றிருந்த வேளையில் சிறுவன் அருகில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்தான்.

இதனால் வீட்டின் மீது இடி விழு



இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இடம் பெற்றது. இது தொடர்பில் தெரிய வருவதா வது, குறித்த வீட்டில் பேர்த்தியாரும் சிறுவனும் வசித்து வந்தனர்.

சம்பவத்தினத்தன்று பேர்த்தியார் ...ந்த சமயம் உயிராபத்து எதுவும் இடம் பெறவில்லை. அயலவர்கள் வீட்டுத் தீயை அணைக்க முற்பட்ட போது மின்னொழுக்கு காரணமாக அதனை கட்டுப்படுத்த முடியவில்லை என அயலவர்களால் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-250)

## காட்டு யானைகள் குடிமனையினுள் நுழைந்து அட்டகாசம்; மக்கள் அச்சத்தில்



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை இள மருதங்குளம் ஆகிய கிராமங்களினுள் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்வதால் தாம் அச்சத்துடன் பொழுதைக்கழிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராமங்களினுள்நேற்று இரவு யானைகள் உட்புகுந்து அட்டகாசம் செய்துள்ள துடன் வீடுகளையும் தோட்டங்களையும் நாசப்படுத்தியுள் ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா, இள மருதங்குளம், ஓமந்தை ஆகிய கிரா மங்களினுள் இரவு வேளை புகுந்த யானைக் கூட்டம் வீடுகளின் கூரைகளை பிடுங்கி, சுவர்கள் என்பவற்றை இடித்ததுடன் அக்கிராமத்து மக்களால் வாழ்வாதார தேவையின் நிமிர்த்தம் தோட்டங்களில் வைக்கப்பட்ட வாழைமரங்கள், தென்னை மரங்கள் ஆகியவற்றை நாசப்படுத்தின.

யானைகளின் அட்டகாசம் காரணமாக அப்பகுதி மக்கள் இரவு வேளையில் உறங்குவதற்காக அயலில் உள்ள ஆலயம் ஒன்றில் தஞ்சமடைந்து இரவு பொழுதை கழிக்கின்றனர்.

எனவே யானைக்கூட்டம் குடிமனையினுள் மீண்டும் நுழைவதால், உரிய தரப்பினர் இதனைக் கவனத்தில் கொண்டு யானைக் கூட்டத்தை அடர்ந்த காட்டினுள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேசங்களைச் சேர்ந்த பொது மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள் - கிழக்குமாகாணம்

## விஞ்ஞானம் — மூன்று மணித்தியாலம்

(நேற்றைய தொடர்ச்சி)

3. A - I வரையுள்ள மூலகங்களில் பின்வரும் கூற்றுக்களினால் விபரிக்கப்படும் இயல்புகளுக்குப் பொருத்தமான மூலகத்தை இனம் கண்டு எழுதுக.

a) ஆகக் கூடிய உருகு நிலையும் கொதிநிலையும் கொண்ட மூலகம்

..............................

b) நீருடன் மிகவும் வலிமையான தாக்கம் புரியும் மூலகம்

..............................

c) G ஒரு மூலக மாதிரியுடன் கலந்து ஓர் ஏகவினக் கலவையை தயாரிப்பதற்கு உகந்த ஓர் மூலகம் ..............................


d) வீடுகளில் பயன்படும் பல உபகரணங்களைச் செய்வதற்குப் பயன்படுத்துவதுடன் இதன் ஒட்சைட்டுப்படை, உலோகம் மேலும் சூழலுடன் தாக்கம் புரிவதைத் தடுக்கின்றது.

..............................

4. D,F ஆகிய மூலகங்கள் சேர்ந்து உருவாகும் சேர்வையின் சூத்திரத்தை எழுதுக?


..............................

5. மூலகம் (B) ஆனது அட்டவணையில் காணப்படும் வேறொரு மூலகத்துடன் உண்டாக்கும் பங்கீட்டு வலுச் சேர்வையின் மூலக் கூற்றுப் பிணைப்பினை வரிப்படம் காட்டுகின்றது. இம் மூலகத்திற்குரிய ஆங்கில எழுத்தை எழுதுக.




..............................

6. சோடியம் குளோரைட்டிலும், குளுக்கோசிலும் உள்ள பிணைப்பு வகையைப் பரிசோதனை முறையாகக் காண்பதற்கு பாடசாலை ஆய்வு கூடத்தில் நீர் செய்யத்தக்க ஒரு பரிசோதனையைப் படம் காட்டுகிறது.




a) இப்பரிசோதனையில் மின்வாய்களாகப் பயன்படத்தக்க ஒரு பதார்த்தத்தைக் குறிப்பிடுக.

..............................

b) இப் பரிசோதனைச் செய்கையில் எந்தச் சேர்வை / சேர்வைகள் கரைசலாக இருக்கும் போது மின்குமிழ் ஒளிரும். இதற்குரிய காரணத்தை தருக.



I) மின்குமிழ் ஒளிரும் கரைசல் : ..............................

I I) மின்குமிழ் ஒளிவர்தற்கான காரணம்


..............................

4 A) தற்கால உலகில் இலத்திரனியல் சாதனங்களின் பாவனை அதிகரித்திருப்பதோடு, பருமன் குறைந்து கொண்டு வருகின்றது.

1. பின்வரும் இலத்திரனியல் துணைச் சாதனங்களின் பெயரையும், குறியீட்டையும் தருக.

| துணைச் சாதனம் | பெயர் | குறியீடு |
|---|---|---|
| a.  | | |
| b.  | | |
| c.  | | |

B)




மேற்தரப்பட்ட சுற்று, ஒளி உணர் தடையியின் செயற்பாட்டை அறிய ஆக்கப்பட்டுள்ளது.

1. X,Y க்கிடையே மின்கலம் ஒன்றை எவ்வாறு இணைப்பீர் என சுற்றில் வரைக.

2. சுற்றில் எவ்வகை திரான்சிஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது.

..............................

3. சுற்றில் காணப்படும் ஒளி உணர்தடையியில் ஒளிபடும் போதா, ஒளிபடாத போதா மின்குமிழ் ஒளிரும்.

..............................

4. சுற்றில் உள்ள மின்குமிழ் ஒளிரும் போது ஒளி உணர் தடையியில் தடைப் பெறுமானத்திற்கு யாது நிகழும்?

..............................

5. சுற்றில் காணப்படும் ஒளி உணர் தடையியையும், தடையியையும் மாற்றி இணைக்கும் போது ஒளிபடும் போதா, ஒளிபடாத போதா மின்குமிழ் ஒளிரும்.

..............................


6. சுற்றில் மின்குமிழ் ஒளிராத போது $I_b$, $I_c$ ஓட்டங்கள் பற்றி யாது கூறுவீர்?

..............................

## பகுதி II B

05.

## கட்டுரை வினாக்கள்




A - நன்றாக நீரை வழங்கி சூரிய ஒளியில் வைத்த சட்டித் தாவரம்.

B- நன்றாக நீரை வழங்கி ஒரு கிளையை பொலித்தீன் பையினால் மூடி சூரிய ஒளியில் வைக்கப்பட்ட சட்டித்தாவரம்.

தாவரத்தில் நடைபெறும் ஒரு உயிர்ச் செயன்முறை ஒன்றும் உயிர்ப்பற்ற தோற்றப்பாடு வெவ்வேறாக படங்களில் காட்டப்பட்டுள்ளது.

1. a) படத்தில் காட்டப்பட்டுள்ள உயிர்ச் செயன்முறையையும், உயிர்ப்பற்ற செயன்முறையையும் தனித்தனியே குறிப்பிடுக.

b) தேவையான எல்லாக் காரணிகளையும் காட்டி தாவர இலையில் நடைபெறும் உயிர்ச் செயன்முறையை ஒரு இரசாயனச் சமன்பாட்டு வடிவத்தில் தருக.

c) இலைகளில் உற்பத்தி செய்யப்படும் உணவு தாவரத்தின் வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது.

a) எந்த இழையத்தின் மூலம் உணவு கொண்டு செல்லப்படுகின்றது.

b) இக் கொண்டு செல்லல் செயன்முறை எவ்வாறு அழைக்கப்படும்.

c) வேர்மயிர்களினால் உறிஞ்சப்படும் நீரானது தண்டினூடாக மேல் நோக்கி கொண்டுசெல்லப்படுவதை படம் c காட்டுகின்றது.

i) இங்கு காசித்தும்பைத் தாவரம் பயன்படுத்தப்படுவதற்கான காரணம் யாது?

ii) நீரும், அதில் கரைந்துள்ள கனியுப்புகளும் தண்டினூடாக மேல்நோக்கி கொண்டு செல்லலில் செல்வாக்குச் செலுத்தும் அனைத்துக் காரணிகளையும் குறிப்பிடுக.

iii) a) சட்டித் தாவரம் A யில் உற்பத்தி செய்யப்படும் உணவின் அளவைக் கூட்டுவதற்கு சட்டித்தாவரத்தின் இலை கொண்டுள்ள இசைவாக்கம் 2 தருக.

b) தாவரத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவின் மூலம் நிறைவேற்றப்படும் இரு தொழில்களைக் குறிப்பிடுக.

iv) ஒளித்தொகுப்பு தொடர்பான மாப்பொருள் பரிசோதனையில் பின்வரும் ஆளுகை நிபந்தனைகள் மேற்கொள்ளப்பட்டன அவை ஒவ்வொன்றுக்குமான காரணத்தைக் குறிப்பிடுக.

i) 48 மணிநேரம் இருளில் வைத்த தாவர இலையைப் பயன்படுத்தல்.
ii) தாவர இலையை நீரில் அவித்தல்.
iii) நீரில் அவித்த இலையை நீர்த்தொட்டியில் வைத்து மதுசாரத்தில் அவித்தல்.

v) மூன்று சர்வசமமான B இன் ஒழுங்கமைப்புகள் வேறுபட்ட மூன்று சூழல் நிபந்தனைகளில் வைக்கப்பட்டது.

a) காற்றுள்ள சூரியஒளி b) காற்றுள்ள மர நிழல்
c) ஆய்வுகூட அறை

மேலுள்ள சூழல் நிபந்தனைகளில் பொலித்தீன் உறையினுள் சேரும் நீர்த்துளிகளின் அளவு அதிகரித்துச் செல்லும் ஒழுங்கு முறையைத் தருக.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெல உறுமயவின் வெளியேற்றம் மகிந்தவின் பலத்தை குறைக்காதாம்

## ஜீ.எல்.பீரிஸ் கூறுகிறார்



**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து ஜாதிக ஹெல உறுமய வெளியேறுவதானது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பலத்தை எந்த வகையிலும் குறைக்காது. அது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் பீரிஸிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது ஒரு கூட்டரசாங்கம். இந்நிலையில் கூட்டு அரசாங்கம் ஒன்றில் பல கட்சிகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு பல கட்சிகளிடம் தமக்கென நிலைப்பாடுகள் இருக்கும்.

எனவே ஏதோவொரு காரணத்துக்காக் கூட்டணியைவிட்டு விலகுவதற்கு கட்சிகள் தீர்மானிக்கின்றன. அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. அது அவர்களின் தீர்மானம். அதனை நாம் தடுக்க முடியாது. மேலும் ஜாதிக ஹெல உறுமயவின் கோரிக்கைகளை நாங்கள் நிராகரிக்கவில்லை. அவர்கள் வழங்கிய 35 அம்சங்கள் முக்கியமான சில விடயங்கள் இருந்தன. அவற்றை ஆழமாக பார்க்கவேண்டும்.

இந்நிலையில் அவற்றை அவசரமாக செய்ய முடியுமா? தற்போது வரவு செலவுத்திட்ட விவாதம் பாரா்ளுமன்றத்தில் இடம்பெறுகின்றது. எனவே இவை ஆழமாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டிய விடயங்கள்.

எவ்வாறெனினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திலிருந்து ஜாதிக ஹெல உறுமய வெளியேறுவதானது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பலத்தை எந்த வகையிலும் குறைக்காது.

அது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஜனாதிபதி மிகவும் பலம்வாய்ந்த தலைவராக இருக்கின்றார். ஒரு கட்சி வெளியேறுவதானது அரசாங்கத்துக்கோ ஜனாதிபதிக்கோ பாதிப்பை ஏற்படுத்தாது என்றார். (இ-5)

# ஹெல உறுமயவின் பயணத்தை தடம்புரள செய்தவர் அத்துரலிய

## ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள பௌத்த உரிமையை பாதுகாக்க ஜாதிக ஹெல உறுமய தனது பங்களிப்பை வழங்கியது. ஆனால், அத்துரலியே ரத்ன தேரர் தான் அக்கட்சியை தடம்புரளவதற்கு வழிவகுத்தார் எனக்குற்றஞ்சாட்டிய பொதுபல சேனாவின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அரசிலிருந்து வெளியேறும் ஹெல உறுமயவுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்த தயாராகவுள்ளதாகவும் தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பொதுபல சேனாவின் ஊடகவியலாளர் மாநாட்டிலே ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

சிங்கள பௌத்தர்களின் உரிமைகளை பாதுகாத்து தர்ம ராஜ்ஜியத்துக்கான பயணத்தை ஆரம்பித்த ஜாதிக ஹெல உறுமய தனது கடப்பாடுகளை நிறைவேற்றியது.

ஆனால், இடை நடுவே இதனை சீர்குலைத்து ஹெல உறுமயவின் பயணத்தை தடம்புரளச் செய்தவர் அத்துரலியே ரத்ன தேரர்.

அவருக்கு நிலையான கொள்கை இல்லை. இன்று அரசிலிருந்து வெளியேறும் நிலைமையை உருவாக்கி பௌத்தர்களிடையே பிளவை ஏற்படுத்தியுள்ளார். இது நாட்டுக்கு நல்லதல்ல. எனவே, எதிர்காலத்தில் ஹெல உறுமயவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவே உள்ளோம். இப்பேச்சுவார்த்தைகள் அரசியல் ரீதியானதாக இருக்காது.

மாறாக சிங்கள பௌத்தர்களை ஒன்றிணைப்பதாகவே அமையும் என்றும் ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கட்சி தாவிய கம்பளை நகரசபை தலைவரை மத்திய அமைச்சர் கடுமையாக சாடியுள்ளார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்குத் தாவிய கம்பளை நகரசபைத் தலைவரை ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் கடுமையாக சாடியுள்ளார்.

கம்பளை நகரசபையின் தலைவர் காமினி ஹெட்டியாராச்சி அண்மையில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார்.

இவ்வாறு கட்சி தாவியமைக்காக, ஆளும் கட்சியின் மத்திய மலைநாட்டை பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர் ஒருவர் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு பின்னர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வது ஓர் துரோகச் செயலாகும் என குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆளும் கட்சி அமைச்சர் என்றபோதிலும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் பிரதேச அரசியல்வாதிகளை தடுக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உறவினர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாக இந்த அமைச்சர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மிக முக்கியமான உறுப்பினர்களில் ஒருவரும் ஜனாதிபதி வேட் பாளராக போட்டியிட்ட போது குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவருமான காமினி திஸாநாயக்கவின் மகன் அமைச்சர் நவீன் திசாநாயக்கவே இவ்வாறு ஆளும் கட்சியில் இருந்து கொண்டு எதிர்க் கட்சிக்காக செயற்பட்டு வருவதாக சிங்கள பத்திரிகையொன்று மறைமுகமாக குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளராக கரு ஜயசூரிய நியமிக்கப்படாவிட்டால் மீண்டும் ஆளும் கட்சிக்காக சேவையாற்றுவார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் ஏகப்பட்ட கூட்டம். அங்கு இயேசுநாதர் பேசிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவர் பிரமாண்டமான துலாக்கோல் ஒன்றினை அந்த மக்களுக்கு காட்டினார்.

அப்படி ஒரு தராசை ஒரு போதும் அந்த மக்கள் அதற்கு முன்னர் கண்டதில்லை.

இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அந்தத் தராசில் வைத்து எடைபோடுகிறார் அவர்.

அதன் ஒரு பக்கத்தில் க்ண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் வைக்கிறார். மலைச்சாரலில் வளர்ந்த ஒலிவ் மரங்கள், மலையடி வாரத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆட்டு மந்தைகள், விலையுயர்ந்த பொருட்கள் எல்லாவற்றையும் அதில் வைக்கிறார்.

இதையெல்லாம் எல்லோரும் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றைய தட்டத்தில் வைப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று பேசிக் கொண்டார்கள்.

உலகத்திலுள்ள எல்லாவற்றையும் ஒரு தட்டில் வைத்தாயிற்று. அவ்வளவையும் ஈடுகட்டும் அளவுக்கு அடுத்த தட்டில் என்னதான் வைக்கமுடியும்?

எல்லோரும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசுநாதர் சுற்று முற்றும் பார்த்தார். பக்கத்தில் இருந்த ஒரு சின்னக் குழந்தையைத் தூக்கி வலது பக்கத்தட்டில் வைக்கிறார். அவ்வளவுதான்!

இடப்பக்கத்தட்டு மெதுவாக மேலே போக ஆரம்பித்தது. அதில் இருக்கும் பொருட்கள் எல்லாம் விழுந்து விடுமோ என்று நினைக்கும் அளவுக்கு இருந்தது.

எல்லோருக்கும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமானின் முகத்தைப் பார்க்கிறார்கள். அதற்கு அவர் சொல்கிறார்.

''ஒருவன் தனது ஆன்மாவுக்கு கேடு விளைவித்து உலகமெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும? '' என்கிறார்.

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக விலையுயர்ந்தது மனிதனின் ஆன்மாதான் என்பதை இந்தச் சம்பவம் மூலம் அவர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

இன்று நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை, அதுதான் காரணம்.

இப்பொழுது உலகத்தில் நடக்கும் சம்பவங்களையெல்லாம் பார்த்தால் மனித உயிர் அற்பமாகப் போய் விட்டதே என்ற எண்ணம்தான் தோன்றுகிறது!

சமீபத்தில் பத்திரிகையில் ஒரு நகைச்சுவை துணுக்கு பார்த்தேன். ஒரு ராஜா காட்டுக்கு வேட்டையாட போய் விட்டு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவரோடு கூட வந்தவர்களிடம் விசாரிக்கிறார்.

"அமைச்சர் இருக்கிறாரா?" என்கிறார் ராஜா.

"இதே இருக்கிறேன்!" என்றார் அமைச்சர்.

"சேவகர் இருக்கிறாரா?" என்றார்.

"இதோ இருக்கிறேன்! " என்றார் அவர்.

"தளபதி இருக்கிறாரா?" என்றார்.

"இருக்கிறேன்!" என்றார் தளபதி.

''அப்பாடா! அப்படியானால் நான் சுட்டது கரடியைத் தான்!'' என்கிறார் ராஜா.

மனித உயிர் மீது மன்னனுக்கு எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

987

## பேரு மாறிப்போச்!

சரண்யாவுக்கு பெயர் மாற்றி விளையாடும் விளையாட்டு மிகவும் பிடிக்கும்.

தன் தோழிகள் வீட்டுக்குச் சென்றால்... அவள் பெயரை மாற்றி தோழி பெயரை வைத்துக்கொள்வாள். இவள் பெயரைத் தோழிகளுக் கொடுத்துவிடுவாள். அப்படித்தான், ஒருநாள் குழலி வீட்டில் பெயர் மாற்றி விளையாடிக் கொணடிருந்தபோது, குழலியின் பெற்றோர் வெளியே கிளம்பியதால், அவசர அவரமாக குழலியைக் கூட்டிச் சென்றுவிட்டார்கள்.

குழலியுடன் சரண்யாவின் பெயரும் சென்றுவிட்டது. 'குழலி' என்ற பெயர் நன்றாக இருந்ததால், சரண்யாவும் சந்தோஷமாகத் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

அவள் வீட்டை அடைய ஒரு மலையைக் கடக்க வேண்டும். அப்போது, ஒரு கறுப்புக் குதிரை எதிரே வந்தது. அந்தக் குதிரையிடம், அது செல்லும் பக்கமாகத் தன்னையும் ஏற்றிச்செல்லுமாறு கேட்டாள். சரி என ஒப்புக்கொண்டது குதிரை.

உன் பெயர் என்ன? என்று குழலி பெயரிலிருந்த சரண்யா கேட்க, "ப்ளாக் பியூட்டி... கறுப்பழகி" என்றது குதிரை. "ஓ... அன்னா சீவல் எழுதிய, கறுப்பு அழகி நாவலில் வரும் குதிரை நீதானா?" என வியந்தவள், "சரி, நாம பெயரை மாற்றிக்கொள்வோமா?" என்று கேட்டாள்.

குழலி என்ற பெயரைக் குதிரைக்கும் கறுப்பழகியைத் தனக்கும் எடுத்துக்கொண்டாள்.

குதிரை வேறு பக்கம் சென்றதால், இறங்கி நடக்க ஆரம்பித்தாள். தன் பினனால் ஒருவர் பின் தொடர்வதைக் கவனித்தாள். ரொம்ப உயரமாக, பயங்கர வலிமை வாய்ந்தவராக இருந்தார் அவர்.

மாமா எனக்கு கால்வலிக்கிறது? கொஞ்சம் தூக்கிக் கொண்டு செல்கிறீர்களா? என்றாள் தைரியமாக.

அவரும் சரி என்றார். உங்க பெயர் என்ன மாமா என்றாள். கோலியாத் என்றார் அவர்.

டேவிட் வீழ்த்திய கோலியாத் நீங்கள்தானா? என்றவள், தன் வழக்கமான வேலையைச் செய்தாள். கறுப்பழகி பெயரை கோலியாத கொஞ்சம் தயக்கத்துடன் பெற்றுக் கொண்டு, தனது பெயரைக் கொடுத்தார்.

ஒரு வீராங்கனை போல கம்பீரமாக வீடு சேர்ந்தாள். அவள் அம்மா, மாலை உணவு கொடுத்தாள். சுவையாக இருந்தது.. வழக்கத்துக்கு மாறாக நிறையச் சாப்பிட்டாள். சரண்யா, நீயேவா இதை எல்லாம் சாப்பிட்டே? என்று அம்மா வியந்தாள.


ஹா... ஹா... ஹா... நான் சரண்யா இல்லை, நான் கோலியாத்" என்று நடந்ததை விவரித்தவள், திடீரென சரண்யா பெயர் வேண்டும் என்றாள்.

ஆனால், அந்தப் பெயர் இப்போது குழலியிடம் இருக்கிறது.



இருட்டத் துவங்கி விட்டதால், சிறுமியின் தாயே குழலி வீட்டுக்குச் சென்று பெயர் மாற்றி வருவதாகத் தெரிவித்தாள்.

ஆனால், குழலியின் பெயர் குதிரையிடமும், குதிரையின் பெயர் அந்தப் பெரிய வீரனிடமும் இருககிறது அல்லவா?



அதனால், தாயின் பெயரான அன்பரசியை மகளுக்குக் கொடுத்துவிட்டு, கோலியாத் பெயரை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

அந்த வீரனை வழியில் சந்தித்தாள்.

வீட்டிலிருந்து எடுத்து வந்த பழங்களை அவனுக்குக் கொடுத்துவிட்டு, பெயர்களை மாற்றிக் கொண்டாள். இருட்டிவிட்டதால் தானும் துணைக்கு வருவதாகச் சொன்னான் கோலியாத்.

கறுப்புக் குதிரையைத் தேடிச் சென்றார்கள். அது ஒரு மரத்தின் நிழலில் நின்றது. மெள்ள அதன் முதுகில் வருடி, அதற்கும் சில பழங்களைக் கொடுத்துவிட்டு, குழலியின் பெயரை வாங்கினார்.

வாங்க, வேகமாக குழலி வீட்டுக்குப் போகலாம். என் மீது அமருங்கள் என்றது கறுப்பழகி.

குழலியின் வீட்டை அடைந்தபோது, குழலியும் அவளுக்குத் தன் பெயர் வேண்டும் என அழுது கொண்டிருந்தாள்.

சரண்யாவின் அம்மா, அங்கே சென்று பெயரை மாற்றினார். நன்றாக இருட்டத் துவங்கியது.

கறுப்பழகியும் கோலியாத்தும். சரண்யாவின் அம்மாவை அவர் வீட்டுக்கு அழைத்துச்சென்றனர்.

வாசலிலேயே காத்திருந்த மகள், தன் பெயரை அம்மாவிடமிருந்து பெற்றுக்கொண்டதும் மிகவும் மகிழ்ந்தாள்.

வணக்கம் சொல்லிவிட்டு, கறுப்பழகியும் கோலியாத்தும் விடைபெற்றனர்.

## 20.11.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 284 - டயோக்கிளேசியன் ரோமப் பேரரசின் மன்னனான்.
- 1194 - இத்தாலியின் பலேர்மோ நகரம் ஆறாம் ஹென்றியால் கைப்பற்றப்பட்டது.
- 1658 - இலங்கையில் போர்த்துக்கீசர் மீதான வெற்றியைக் குறிக்க இந்நாள் டச்சு ஆட்சியாளர்களினால் நன்றி தெரிவிப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- 1700 - சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் நார்வா என்ற இடத்தில் ரஷ்யாவின் முதலாம் பீட்டரைத் தோற்கடித்தான்.
- 1910 - பிரான்சிஸ்கோ மடேரோ மெக்சிகோ அதிபர் போர்பீரியோ டயஸ் என்பவரைப் பதவியிலிருந்து அகற்றி விட்டதாகவும் தன்னை அதிபராகவும் அறிவித்தார். மெக்சிக்கோ புரட்சி ஆரம்பமாயிற்று.
- 1917 - உக்ரேன் குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1923 - ஜேர்மனியின் நாணயம் பேப்பியர்மார்க் ரெண்டென்மார்க் ஆக மாற்றப்பட்டது. (1 ரெண்டென் மார்க் ஸ்ரீ 1 திரில்லியன் பேப்பியர்மார்க்)
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி, ருமேனியா, சிலவாக்கியா ஆகியன அச்சு அணி நாடுகள் அமைப்பில் இணைந்தன.
- 1947 - இளவரசி எலிசபெத் இளவரசர் பிலிப்பை திருமணம் புரிந்தார்.
- 1962 - சோவியத் ஒன்றியம் தனது ஏவுகணைகளை கியூபாவிலிருந்து அகற்றுவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து, ஐக்கிய அமெரிக்கா கரிபியன் நாட்டுக்கெதிராக கொண்டுவந்த பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெற்றுக் கொண்டது.
- 1977 - ஆறு ஆண்டுகள் சிறைக்குப் பின் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் றோகண விஜேவீர விடுதலை செய்யப்பட்டார்.
- 1985 - மைக்ரொசொஃப்ட்டின் விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டது.
- 1988 - ராஜிவ் காந்திக்கும் மிக்கைல் கோர்பசேவுக்கும் இடையே இரு அணு உலைகளைக் கூடங்குளத்தில் அமைப்பது என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் சோவியத் கலைப்பை அடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டது.
- 1994 - அங்கோலா அரசுக்கும் யுனீட்டா தீவிரவாதிகளுக்கும் இடையே சாம்பியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதில் 19 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. எனினும் அடுத்த ஆண்டு போர் மீண்டும் ஆரம்பமாயிற்று.
- 1998 - பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் முதலாவது பகுதி சாரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

### பிறப்புகள

- 1750 - திப்பு சுல்தான், மைசூர் பேரரசன் (இ. 1799)
- 1901 - நாசிம் ஹிக்மட், துருக்கிய கவிஞர் (இ 1963)
- 1923 - நதீன் கோர்டிமர், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற தென்னாப்பிரிக்க எழுத்தாளர் (இ. 2014)
- 1942 - ஜோ பைடன், அமெரிக்க துணைத்தலைவர்

### இறப்புகள்

- 1910 - லியோ தல்ஸ்தோய், ரஷ்ய எழுத்தாளர் (பி. 1828)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

130

..இந்தியா 207 ரன்கள் எடுக்க தென் ஆப்பிரிக்கா 300 ரன்கள் குவித்து 3 விக்கெட் வித்தியாசத்தில் ஜெயித்தது. இந்தப் போட்டியில் சச்சின் 111 ரன்கள் எடுத்து தனது 48 ஆவது ஒரு நாள் சதத்தைப் பதிவு செய்தார். டெஸ்ட் 51 மற்றும் ஒருநாள் 48 என சச்சின் மொத்தம் 99 சதங்களை அடித்துள்ளார். அவர் 100 செஞ்சுரி அடிக்க இன்னும் ஒரே ஒரு சதம்தான் பாக்கி. உலகமே அவரது 100 ஆவது செஞ்சரிக்காகப் பிரார்த்தனை செய்தது.

2011 மார்ச் 20 ஆம் திகதி இந்திய- மேற்கு இந்தியத் தீவுகள் அணிகள் சென்னை சிதம்பரம் மைதானத்தில் மோதின. இந்தியா 268 ரன்கள் எடுக்க மேற்கு இந்தியத் தீவுகள் 188 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்தியா 80 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கால் இறுதிப் போட்டியில் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் மார்ச் 24 ஆம் திகதி அகமதாபாத் சர்தார் பட்டேல் மைதானத்தில் களம் இறங்கின. ஆஸ்திரேலியா 260 எடுக்க இந்தியா 261 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் ஜெயித்து அரை இறுதிக்கு முன்னேறியது.

மார்ச் 30 பஞ்சாப் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் பாகிஸ்தானும் இந்தியாவும் மோதிக்கொண்டன. இந்தியா 260 ரன்கள் எடுக்க பாகிஸ்தான் 231 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்தியா 29 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று உலக கோப்பை இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது. சச்சின் 85 ரன்கள் குவித்து இந்தியாவின் வெற்றிக்கு வழி வகுத்தார். ஆனால், அவர் 100 ஆவது சதம் அடிப்பார் என்ற எதிர்பார்ப்பு கனவானது.

- ❖ லட்சியம்:- உலகின் நம்.1 விளையாட்டு வீரன்
- ❖ பிடித்த மைதானம்:-ஆஸ்ரேலியாவின் சிட்னி
- ❖ பிடிக்காத மைதானம்:- பெங்களூர் மைதானம்
- ❖ வேறு விளையாட்டு:-டென்னிஸ்.
- ❖ கனவு மங்கை:-எனது மனைவி அஞ்சலி
- ❖ வெறுப்பது:- வதந்தி
- ❖ பிடித்த உடை:-:ஜீன்ஸ், டீசர்ட்
- ❖ பிடித்த கடவுள்:- பிள்ளையார் சாய்பாபா மீதும் பக்தி உண்டு
- ❖ பிடித்த வாசகம்:-உனக்கு நீயே உண்மையாக இரு

## 35ஆவது டெஸ்ட் சதம் சச்சின் உலக சாதனை!



இந்தியா மேற்கு இந்தியத் தீவுகள் மோதல்

3 டெஸ்ட்கள் 5 ஒருநாள் போட்டிகள் 1 டி 20 ஆகியவற்றில் விளையாட இந்திய அணி 2011 ஜூன் மாதம் மேற்கு இந்திய தீவுகளுக்கு பயணித்தது. ஜூன் 4ஆம் திகதி டிரினிடாட்டில் நடைபெற்ற டி 20 போட்டியில் இந்தியா 16 ரன்கள் வித்தியாசத்தில் ஜெயித்தது.

ஜூன் 6ஆம் திகதி நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஜூன் 8 இல் நடைபெற்ற இராண்டாவது ஒருநாள் போட்டியில் மீண்டும் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஜூன் 11 இல் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் இந்தியா 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிவாகை சுடியது.

ஜூன் 13 மற்றும் 16 திகதிகளில் நடைபெற்ற நான்காவது மற்றும் ஐந்தாவது ஒருநாள் போட்டிகளில் மேற்கு இந்தியத் தீவுகள் முறையே 103 ரன்கள் மற்றும் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆக 5 ஒருநாள் போட்டிகளில் 3-2 என்ற விகிதத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

கே. ரமேஷ்

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...ஒவ்வொரு இரவும் அவை குரைக்க ஆரம்பித்து விடுகின்றன. விடியும் வரையில் குரைத்துக் கொண்டே இருக்கின்றன. ஏற்கனவே நான் ஆழ்ந்து தூங்குபவனல்ல. எனவே, இந்த இரைச்சலால் என்னால் சிறிதும் ஒய்வெடுக்க முடியவில்லை.

நான் சொன்னேன்: வீட்டிற்குச்

## கவலைகள் இன்றி வாழ்தல்!

சென்று இன்று இரவு இதை முயற்சி செய்யுங்கள். குரப்பை கேட்கும் பொழுது கோபத்தையும் உங்களிடம் எழும் எதிர்மறை உணர்வுகளையும் விட்டுவிடுங்கள். எதிர்ப்பில்லாமல் வெறுமனே குரைப்பின் சப்தத்தைக் கேளுங்கள். உங்களிடம் சொல்லிக் கொள்ளுங்கள். நாய்கள் குரைக்கின்றன அவ்வளவுதான். அதற்கு எதிர்ச் செயல் புரிய உங்களை அனுமதிக்காதீர்கள். குரைப்பு பிரச்சினை அல்ல. அதற்கு உங்களுடைய எதிர்ப்புதான் பிரச்சினை.

அவர் திரும்பிச் சென்று நான் சொன்னதை முயற்சி செய்தார். சில நாட்கள் கழித்து திரும்பி வந்து சொன்னார். ஸ்வாமிஜி, நீங்கள் சொன்னது போலவே நான் என் எதிர்பார்ப்பை விட முயற்ச்சி செய்தேன். உன் துக்கத்தை கெடுக்க அந்த முட்டாள் நாய்களுக்கு எத்தனை தைரியம் இருக்க வேண்டும் என்று நினைப்பதற்கு பதிலாக நான் என் எண்ணங்களை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்ள முடிவு செய்தேன். நாய்கள் குரைக்கின்றன. அது ஏன் தூக்கத்தை



கெடுக்கிறது.... நாய்கள் குரைக்கின்றன. ஏதோ சில பிராணிகள் ஏதோ சில ஒலியை எழுப்புகின்றன. இந்த வாக்கியத்திற்கு வரும் பொழுது நான் துங்கிவிட்டேன். என்று நினைக்கிறேன். எது எப்படியாயினும் இந்த சில நாட்களாக நான் நன்றாக உறங்குகின்றேன். மிக்க நன்றி ஸ்வாமிஜி.

இது உங்களிடம் நடக்கலாம். உங்களுடைய எதிர்மறைத் தன்மையை எவ்வாறு விடுவது என்பது தெரியுமானால், எந்த சூழ்நிலையுமே உங்களால் சமாளித்து விடமுடியும். இதுவே மணிபூரக சக்கரத்தை திறக்கும் திறவுகோல் ஆகும்.

ஆனால், மனமோ தனக்கு மிகவும் பழக்கமான உள் பேச்சு வடிவமைப்புகளிலேயே தங்கி விடவும் நிலை பெறவும் விரும்புகிறது. இதுதான் கவலை செயற்படும். அடிப்படை.

### ஆன்மீகம் 80


மனம் எப்பொழுதுமே கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவற்றிக்கிடையே ஒப்பீடு தேவைப்படுகிறது. இந்த ஒப்பீடே இந்த ஆதாரமே இந்தத் தீர்ப்பே கவலை பிறக்கக் காரணமாகிறது. கவலைகள் என்பது நமது மனதிற்கு பழக்கமான வடிவமைப்புகளைத் தவிர வேறல்ல. மனித உளவியல் துறையில் இந்த பழக்கமான அமைப்புகளுக்கு எனகிராம்கள் (ஸம்ஸ்காரங்கள் எண்ணப் பதிவுகள்) என்று பெயர். ஸம்ஸ்காரங்கள் என்பது செதுக்கப்பட்ட இந்த கால நினைவுகள். இவையே நமது நிகழ்கால மற்றும் எதிர்காலச் செயல்களும் நமக்குளிருந்து விரும்பத்தகாத மூலகங்களாக செயற்படுகின்றன.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகம் வாயை மூடினால் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறுமா?




தமிழ்நாட்டிற்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்ட வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள், தந்தி தொலைக்காட்சியிலும், கண்ணபிரான் நினைவு நிகழ்ச்சியிலும் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் கூறும் நல் ஊடக வெளியில் பலத்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. வடக்கின் முதல்வர் தமிழக அரசியல் தலைவர்களைச் சந்திக்கவில்லை. ஆனால், ஏதோவொரு அமானுஷ்ய நெருக்கடி அவரை தந்தி தொலைக்காட்சிக்கு முன்னால் நிறுத்தியிருக்கிறது. அத்தோடு இந்தியா இல்லாமல் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையென்று அவர் அண்மையில் உதிர்த்த வார்த்தைகள்தான் இப்போது நினைவிற்கு வருகிறது.

வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதல்வரைக்கொண்டு, தமிழக ஆதரவாளர்களை, அரசியலவாதிகளை ஈழப்பிரச்சினை குறித்து பேசவிடாமல் ஊமையாக்கும் தேவை யாருக்கு இருக்கிறது என்பதனைப் புரிந்து கொண்டால், இந்த தனிப்பட்ட விஜயத்தின் சூட்சுமம் விளங்கும்.

கண்ணபிரான் மேடையில், இறுதிப்போரில் இந்தியா வழங்கிய இராணுவ- அரசியல்- புலனாய்வு ஒத்துழைப்பு பற்றி போட்டுடைத்துள்ளார் முதல்வர். போர் முடிந்தபின் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்க வேண்டும் என்பதுதான் இந்தியா இலங்கையோடு பேசிய பேரமாம்.

இந்தியாவின் போரை நாமே நடாத்தினோமென தென்னிலங்கையிலிருந்து ஒரு அதிகாரக்குரல் அண்மையில் ஒலித்ததை, விக்கினேஸ்வரன் அவர்கள் மறந்தாலும், வலி சுமக்கும் மக்கள் அதனை மறக்கவில்லை.

போர் முடிந்து 5 வருடமாகியும் இன்னும் தீர்விற்கான பேரம் முடியவில்லைபோல் தெரிகிறது. இப்போதுதானே சீனாவின் நீர்மூழ்கி இலங்கைக்கு வந்திருக்கின்றது. ஆகவே, பேரத்தின் காலம் நீண்டு செல்லும் என்பதை பகவான் சிங் போன்றோர் புரிய மறுத்தாலும், இலங்கை வரும் இந்திய இராணுவ மையப் பிரதிநிதிகள் எமக்கு உணர்த்திவிட்டுச் செல்வார்கள்.

கடந்த 12 ஆம் திகதியன்று தந்தி தொலைக்காட்சியில், அதன் பிரதம செய்தியாசிரியர் ரங்கராஜ் பாண்டே மேற்கொண்ட நேர்காணலில், வடமாகாண முதல்வர் வெளியிட்ட அரசியல் செய்திகள் குறித்து பார்ப்பது தான், இப்பத்தியின் நோக்கம். இயக்குனர் சங்கரின் ஒருநாள் முதல்வரால் சாதிக்க முடிந்ததில் ஒரு வீதம் கூட, தனது ஒருவருட ஆட்சியில் சாதிக்க முடியவில்லையே என்கிற ஏக்கம் முதல்வரின் பேச்சில் எதிரொலித்தது.

அந்த நேர்காணலிற்கான நோக்கம் தெளிவானது. அதாவது வடக்கு முதல்வரின் வாய் வழி மூலம் தனி ஈழம் சாத்தியமில்லை என்றும், அக்கோரிக்கையை முன்வைப்பதன் ஊடாக வடக்கில் இருக்கும் ஒரு இலட்சத்தி ஐம்பதினாயிரம் இராணுவத்தினரை அகற்ற முடியாதுள்ளது என்கிற அச்சுறுத்தும் செய்தியை தமிழக மக்களுக்குச் சொல்ல இந்நேர்காணல் பயன்பட்டதுபோல் தெரிகிறது.

இந்திய நடுவண் அரசை நோக்கி தமிழகம் கொடுக்கும் அழுத்தமானது கொழும்பிற்கு நெருக்கடியைக் கொடுக்கிறது என்று ஆனந்தப்படும் முதல்வர் விக்கினேஸ்வரன், இதனைச் சிங்களம் பார்க்கும் பார்வை தம்மீது புலிப்பட்டம் கட்ட உதவுகிறது தென ஆதங்கப்படுகிறார்.

ஆகமொத்தம் தமிழக மக்களின ஈழ ஆதரவு தேவை என்கிறாரா? இல்லையேல் வேண்டாம் என்கிறாரா என்று புரியவில்லை.

தாங்கள் தமிழீழம் கேட்கவில்லை என்பதனை தமிழக மக்களுக்கு இடித்துரைப்பதிலேயே அவரின் முழுக் கவனமும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இருப்பினும், தாங்கள் நீதிமன்றத்தில் தனிநாடு கோர மாட்டோம் என்று சத்தியக்கடதாசி கொடுத்தும், அதனை நம்ப மறுப்பதுபோல் நடிக்கும் சிங்களத்தின் தந்திரம் குறித்து முதல்வர் பேச மறந்துவிட்டார்.

ஆயினும், இவர்கள் விரும்பினாலும் அரசியலமைப்பின் 6ஆவது திருத்தச் சட்டம் அதற்கு அனுமதிக்காது என்பதை ரங்கராஜ் பாண்டேக்கு புரிய வைக்க எவருமில்லை.

தமிழீழத்தைக்கைவிட்டு ஒன்றுபட்ட இலங்கையில், அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் மக்களிடம் வாக்குக் கேட்டோம் என்பதனை தமிழக மக்கள் உணர வேண்டும் என்கிறார்.

முதல்வரால் இயலாததை தமிழக- புலம் பெயர்ந்த தமிழர்கள் முன்வைக்கின்றார்கள். அதிலும் தாயக- புலம்பெயர்ந்து வாழும் மக்களிடம் ஒரு பொதுவாக்கெடுப்பினை நடாத்துமாறே பெரும்பாலான தமிழக அமைப்புக்கள் கோருகின்றன. ஸ்கொட்லாந்து மக்கள் மத்தியில் அண்மையில் நிகழ்ந்த வாக்கெடுப்புப்போல் ஒன்று நிகழ்வதை முதல்வர் ஏன் நிராகரிக்க வேண்டும். கட்டலோனியா மக்களும் இத்தகைய வாக்கெடுப்பினை இம்மாதம் நிகழ்த்தியிருந்தார்கள்.

தந்தி நேர்காணலில், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு தீர்வினை வேண்டுவதாகக் கூறும் முதலமைச்சர், இதுவும் சுயநிர்ணய உரிமையை நிலை நிறுத்தும் ஒரு ஜனநாயகப் பாதை தான் என்பதை ஏன் ஏற்க மறுக்கின்றார்?.

ஆனால், இங்குதான் ஒரு முக்கிய சூத்திரம் மறைந்திருப்பதை அவதானிக்க வேண்டும்.

அதாவது, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் பட்டுப்பாதை ஆதிக்கத்தை பலமிழக்கச் செய்ய இலங்கை மற்றும் மாலைதீவின் ஒத்துழைப்பு இந்தியாவிற்கு அவசியமாகிறது. ஒத்துழைப்பு என்பதற்கு அப்பால், தனது பிராந்திய அதிகார மையத்துள் இவ்விரு நாடுகளையும் கொண்டுவரவே இந்தியா விரும்புகிறது.

இன்றைய யதார்த்த சூழலில், இதனை பொட்டலம் போட்ட பூமாலை நடவடிக்கை போல் அணுக முடியாது என்பதை, இந்திய வெளியுறவுத் துறையின் அறிவுரையாளர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

சிவப்புக் கொடியை உயர்த்த முன், பச்சைக்கொடியை உயர்த்திப் பிடிக்கும் பொறுத்திருந்து பார்க்கும் இராசாவின் தந்திரத்தை தெற்கு வளாகம் பிரயோகிப்பது தெரிகின்றது. இந்திய அளவில் இதற்குப் பெருந்தடைக்கல்லாக இருப்பது தமிழகம் மட்டுமே என்று நடுவண் அரசு நினைக்கின்றது. ஆகவே, அந்த ஈழ ஆதரவுத் தளத்தினை மாற்றியமைப்பதற்கு கூட்டமைப்பையும், உலகத்தமிழர் பேரவையையும் பயன்படுத்த தெற்கு வளாகம் முயற்சிக்கும்.

இந்திய இராசாக்களின் இத் தந்திரத்தை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்ட தலைவர்களும், கண்ணபிரான் நினைவரங்கில் சொற்பொழிவாற்றிய முதல்வர் விக்கினேஸ்வரனும் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார்கள்.

இந்திய நலன் என்கிற யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் தனி ஈழம் கோருவது, இந்திய- இலங்கை உறவில் பாதிப்பினை ஏற்படுத்தும்" என்பது குறித்தே டெக்கான் குரோனிகள் பகவான் சிங் போன்றோர் கவலைப்படுகிறார்கள்.

இராணுவ அபகரிப்பிற்குள்ளாகும் நிலம் குறித்தோ, அல்லது நிரந்தர அரசியல் தீர்வு குறித்தோ இந்தியா அக்கறை கொள்வதில்லை. அது குறித்துப்பேசி சிங்களத்தோடு முரண்படவும் இந்தியா விரும்பவில்லை.

எங்களை விட்டால் உங்களுக்கு வேறு வழியில்லை என்று உணர்த்துவதில் மட்டுமே கொள்கை வகுக்கும் கோமான்கள் குறியாக இருக்கின்றார்கள். அதனை அடிக்கடி வடக்கின் முதல்வர் வழி மொழிகின்றார்.

தந்தை. செல்வாவின் சுயநிர்ணய உரிமைக் கொள்கையை ஏற்றுக்கொண்ட ஈழப் போராளிகளும், விடுதலைப்புலிகளின் அரசியல் கோட்பாடுகளை ஏற்றுக் கொண்ட பெரும்பான்மையான புலம்பெயர் ஈழத்தமிழ் மக்கள் ஒரு முகாமிலும், அரசோடு இணைந்து வாழப்பழகிக் கொள்ள வேண்டுமென்கிற சிறு குழுக்கள் பிறிதொரு முகாமிலும், நாட்டைப் பிரிக்காமல் அதன் அதிகார வரம்பினுள்ளே எமக்கென ஒரு சுயநிர்ணய உரிமையும், ஆகக்கூடிய அதிகாரப்பகிர்வுடன் எமது வாழ்க்கையை நடத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று விரும்பும் தம்மைப் போன்றோர் மூன்றாவது முகாமிலும் இருப்பதாக விக்கினேஸ்வரன் அவர்கள் பாண்டேயின் கேள்வி ஒன்றிக்குப் பதிலளித்துள்ளார்.

ரங்கராஜ் பாண்டேயின் கேள்விகள் அனைத்தும் டெல்லியின் குரல் போல் ஒலித்தது.

புலம்பெயர் மக்கள் மத்தியில் பிளவுகள் இருக்கிறதாமே..! என்று பாண்டே குத்திக்காட்ட, முதல்வர் அதனை சமாளித்த விதத்தைப் பார்க்கும்போது, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் காட்சிகளே எம்மனதில் வந்துபோயின.

தமிழக அரசியல்வாதிகள் இலங்கையின் யதார்த்தநிலை புரியாமல் பேசுகிறார்கள்" என்கிற தொனிப்பட, கேள்வி போன்ற கருத்துத் திணிப்பினை பாண்டே முன்வைத்த போது, தம்மாலும் அவற்றை வெளிப்படையாக பேச முடியாதுள்ளதெனவும், அந்த அளவிற்கு இராணுவ அடக்குமுறை இருப்பதாக முதல்வர் குறிப்பிட்டபோது, எதிர்பார்த்த பதில் கிடைக்காததால் பாண்டேயின் முகம் சுருங்கிப்போனது.

இவர்கள் கூறுவது போன்று வெறும் உணர்ச்சி அரசியல் என்கிற குறுகிய வட்டத்திற்குள் முடங்கிவிடாமல், தர்க்கபூர்வமாக -பூகோள அரசியல் கண்ணோட்டத்தில் ஈழ மக்களின் தேசிய இனப்பிரச்சினையைப் அணுகும், அது குறித்து விவாதிக்கும், ஆரோக்கியமான பல வெளிகள் தமிழகத்தில் இப்போது உருவாகியிருக்கின்றன. இவற்றுள் மே 17 இயக்கம், மாணவர் அமைப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நாம் தமிழர் கட்சியின் பேச்சாளர் ஊடகர் அய்யநாதனும், தமிழ் -ஆங்கிலத் தொலைக்காட்சிகளில் தமது காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றார். தந்தியிலும் அவரின் பங்கு சிறப்பாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர் அமைப்புக்களின் கருத்தையும், தமிழக ஈழ ஆதரவாளர்களின் நிலைப்பாட்டையும், தமிழக மக்கள் நம்பக்கூடாது என்பதனை நிலைநாட்டும் முகமாகவே தந்தித் தொலைக்காட்சியின் நேர்காணலும், அடுத்த நாள் நடைபெற்ற விவாதமும் முன்னெடுக்கப்பட்டதா என்கிற சந்தேகம் எழுகின்றது. பாண்டேக்களுக்கும், பகவான்களுக்கும் இருக்கும் தந்திர வகைசார் அக்கறையைக் காட்டிலும், தமிழக மக்களுக்கு ஈழத்தமிழினத்தின் மீது அறிவார்ந்த, உணர்வுபூர்வமான அக்கறை உண்டென்பதை எவராலும் நிராகரிக்க முடியாது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வேட்பாளராகப் போட்டியிட மிகவும் பொருத்தமானவர் ரணில்


## சரத் பொன்சேகா திட்டவட்டம்

(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தை கவிழ்க்கும் பொது எதிரணியின் பொது வேட்பாளராக போட்டியிட மிகவும் தகுதியானவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவே என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கட்சிக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் தெரிவித்தார்.

தற்போது உள்ள அரசியல் தலைவர்களில் ரணில் விக்ரமசிங்க அனுபவ முதிர்ச்சியுடையவர்.



ரணில், அனுபவமும் திறமையும் உடையவர். ரணில் பொருத்தமற்றவர் என சிலர் குறிப்பிடுகின்ற போதிலும், என்னை பொறுத்த வரையில் ரணில் போட்டியிடுவதில் பிரச்சினையில்லை.

பொது வேட்பாளர் அனுபவமும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் நபராக இருக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கவில்லை.

வலுவான ஓர் வேட்பாளரை பெயரிட வேண்டியது மிகவும் அவசியமானது. அரசியல் ரீதியான ஓர் தலைவரையே நியமிக்க வேண்டுமென சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)



யா/மாதகல் சென்.யோசவ் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் வி.நடராசாவின் பிரியாவிடை நிகழ்வும் மணிவிழாவும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது விழா நாயகன் விருந்தினர்கள் சகிதம் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

# மகிந்தவின் தோல்வி நிச்சயம்!

எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்வி நிச்சயம் என்று ராவய பத்திரிகையில் பிரதம ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவின் தோல்வி நிச்சயிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

எனினும் தில்லுமுல்லுகள் மூலம் மிகவும் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றிபெற்றாலும் அந்த வெற்றி நிலைக்காது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது எதிர்க் கட்சிகள் தான் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெறும். அதன் பின்னர் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

தற்போதைய அரசியல் சூழலில் அத்துரலியே ரத்னதேரர் அருமையான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

அதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்வது எதிர்க்கட்சிகளின் சாமர்த்தியத்தில் தங்கியுள்ளது என்றும் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 150 | 180 |
| தக்காளி | 200 | 150 | 160 | 160 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 30 | 40 | 60 |
| கோவா | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 200 | 120 | 200 | 200 |
| பூசணி | 50 | 40 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 150 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 140 | 130 | 100 |
| லீக்ஸ் | 250 | 180 | 170 | 250 |
| பீற்றூட் | 120 | 120 | 110 | 140 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 350 | - | 200 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 160 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-50 | 40 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 250 | 140 | - | - |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 198

இரத்தினசபாபதி பாலராஜா




அபினேஷ் உமாகாந்தன்




தமிழ் பையன்

ஒரு மனநல காப்பகத்தில் ரமேஷ் என்கிற ஒருவர் சிகிச்சை பெற்று வந்தார். ஒரு நாள் பிரதீப் என்கிற சக மன நோயாளி ஒருவன் கிணற்றில் குதித்து விட தன் உயிரை துச்சமென நினைத்து கிணற்றுக்குள் குதித்து அந்த நோயாளியை காப்பாற்றி விட்டார் ரமேஷ்.

அவரின் இந்த வீரதீரச் செயல் மருத்துவமனை முழுக்க பரவிவிட்டது. அதைக் கேள்விப்பட்ட மருத்துவ நிபுணர் ரமேஷை அழைத்து "உனக்கு ஒரு நல்ல செய்தியும், ஒரு துக்கமான செய்தியும் சொல்லப்போகிறேன்" என்றார்.

உடனே ரமேஷ் "சொல்லுங்க டாக்டர்" என்றான். "நீ உனது நண்பனைக் காப்பாற்றியபடியால் நீ சுகமடைந்து விட்டாய் என நினைக்கிறேன். நீ வீடு செல்லலாம். இது நல்ல செய்தி" "துக்கமான செய்தி நீ கிணற்றில் இருந்து காப்பாற்றிய உனது நண்பன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து விட்டான்" டாக்டர் பேசி முடித்த உடன் ரமேஷ் ஆர்வமுடன் சொன்னார்,



"டாக்டர்... அவன் சாகவில்லை. கிணற்றில் விழுந்து நனைந்தவனை ஈரம் காயட்டும் என்று நான் தான் அவனது கழுத்தில் கயிற்றினைக் கட்டி மரத்தில் தொங்க விட்டிருக்கிறேன். ஈரம் காய்ந்ததும் அவன் குணமாகி விடுவான் என்று..."

இரத்தினசபாபதி பாலராஜா




சக்தி வேல்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர்களிடத்திலும் இனச்சுத்திகரிப்பு இடம்பெறுகிறது



## த.தே.கூ.சபையில் தெரிவிப்பு

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து செட்டிக்குளம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்ததைப் போன்ற நிலைமையே கொஸ்லாந்தை மீரியாபெத்தவில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் மலையகத்தமிழர் மத்தியிலும் இனச்சுத்திகரிப்பு ஒன்று இடம் பெற்று வருகின்றது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2015 ஆம் ஆண்டு க்கான வரவு செலவுத் திட்டத்தின் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்ப ட்டுள்ள அமைச்சர்கள் மீதான குழுநிலை விவாதத் திலகலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொஸ்லாந்தை மீரியாபெத்தவில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அஞ்சலியை செலுத்துகின்ற அதே வேளை பாதிக்கப்பட்டவர்களுக்கும் கவலையையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓரங்கட்டப்பட்டவர்களும் வறுமை நிலைககுட்பட்டவர்களுமான மக்களே இயற்கை அனர்த்தங்களிலும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இடதுசாரிகளை ஆதரிப்போர் தமிழ் மக்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் என்ற மூன்று வழிகளில் மலையக தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். இந்த நிலைமை மலையக மக்களுக்கு மட்டுமேயன்றி உலகில் வேறு எந்த சமூகத்தினருக்கும் இருந்ததில்லை.

மேலும் மீரியாபெத்த மண்சரிவினால் பலியானவர்களின் எண்ணிக்கை, பாதிக்கப்பட்டவர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை உள்ளிட்ட எந்தவொரு விபரங்களும் இதுவரை முழுமையாக கண்டறியப்படவில்லை.

இங்கு ஏற்பட்ட மண்சரிவில் 200 க்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அத்துடன் நூற்றுக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர். மேற்படி சமூகத்தை இலங்கைக்கு அழைத்து வந்த பிரித்தானிய அரசாங்கம் அவர்கள் அழைத்து வரப்படுவதற்கு அனுமதியை வழங்கிய இந்திய அரசாங்கம் மற்றும் இதுவரை காலமும் கூலிகளாகவே பத்துக்கு பத்து லயன் காம்பராக்களில் வைத்திருக்க இலங்கை அரசாங்கமுமே மலை யக மக்களின் இன்றைய நிலைக்கு காரணமாகும். பூனாகலை முகா முக்கு சென்றிருந்த போது அங்கு செஞ்சிலுவைச் சங்கத்தினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அனைத்து விபரங்களும் சிங்கள மொழி யிலேயே இருந்தன.

அதுமாத்திரமின்றி மலையகத்தில் கட்டாயக் கருத்தடைகள் இடம்பெற்று வருகின்றன. நவீன வசதிகளுடனான வீடுகள் கிடையாது. கல்வி வசதிகள் இல்லை. ஒரு இன சுத்திகரிப்பு ஒன்று இடம்பெற்று வருகிறது. என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் அறிவியல்சார்ந்த உரையாடலின் முக்கியத்துவம்

**உலக மெய்யியல் தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

இன்று உலக மெய்யியல் தினமாகும். உலகெங்கிலும் பரந்து வாழும் மெய்யியற் சிந்தனையாளர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் சாதாரண மனித வாழ்வியல் நடைமுறைகளில் மெய்யியற் சிந்தனைகளின் அவசியத்தினை வலியுறுத்தும் நோக்குடனும் வருடந்தோறும் இவ் உலக மெய்யியல் தினமானது UNESCO நிறுவனத்தின் ஆதரவுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த வருட உலக மெய்யியல் தினத்தின் கருப்பொருளானது *சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதில் அறிவியல் உரையாடல்களின் முக்கியத்துவம்* எனும் தலைப்பில் அமைந்துள்ளது. சமூகத்தில் இழையோடிக் காணப்படுகின்ற பிரச்சினைகள், முரண்பாடுகள், நாட்டின் அரசியல் பொருளாதார போக்குகளில் ஓர் நேர்கணிய மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் அது அறிவியல்சார்ந்த உரையாடல்களின் ஊடாகவே சாத்தியமாகும் என்பதனை இத்தலைப்பு வலியுறுத்தி நிற்கின்றது. இங்கு அறிவியல் சார்ந்து உரையாடல்கள் என்பது சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், சான்றோர்கள், பொதுநலன் விரும்பிகள் பொதுக்களத்திலே ஒன்றுகூடி எடுக்கப்படுகின்ற முடிவுகளினைப் பிரதிபலிக்கின்றது.

இப் பொதுக்களமானது மக்களுடைய சமூக வாழ்க்கையில் ஓர் இடப்பரப்பினை குறிக்கின்றது. இவ் இடப்பரப்பினுள் மக்கள் ஒன்றுகூடி சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை, தமது அரசியல் அபிலாசைகளினை வென்றெடுப்பதனை நோக்கியதாகவும் அமைந்து காணப்படும். இப் பொதுக்களத்திலே சமூகத்தில் தோன்றியிருக்கும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளையோ அல்லது நாட்டினுடைய அரசியல், பொருளாதார, பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்த பிரச்சினைகளையோ கலந்தாலோசித்து பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் பொழுது அங்கு ஓர் தர்க்க ரீதியான, பகுத்தறிவு ரீதியான முடிவுகளை எடுக்க முடியும்.

இக் கலந்துரையாடல்கள், ஆலோசனைகள் பிரச்சினைக்குரிய தீர்வினை வழங்கக்கூடியதாக இருக்கும் அதேவேளை அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் பொதுவான உடன்படிக்கையினை எட்டக்கூடியதாகவும் காணப்படும். அவ்வாறு எடுக்கப்படுகின்ற முடிவுகளானவை சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதில் காத்திரமான பங்கினை வகிக்கும் என்பது எனது பிரதான நம்பிக்கையாகும்.



ஏனெனில் மனிதன் பகுத்தறிவு வழியில் சிந்திக்கும் திறன் கொண்டவன். அவனால் மனிதப்பண்பு மிக்க நீதியான, சமத்துவமான, சமூகத்தினை உருவாக்க முடியும். இதற்கு அடிப்படையான களமாக இக்களமே அமைகின்றது. இக்களத்தினில் ஆண்களும் பெண்களும் தங்களுடைய தன்னாட்சி, பொறுப்பு என்பனவற்றின் மீதான ஆர்வம், விழிப்புணர்வு கொண்டவர்களாக இருப்பார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் நன்கு தர்க்கிக்கப்பட்ட நிலையில் உள்ள கருத்துக்களுக்கு அவர்கள் உடன்படுவார்கள். இப் பொதுக்களத்தில் எடுக்கப்படும் முடிவுகளானவை பொதுமக்களினுடைய அபிப்பிராயம் என்ற மார்க்கத்தினூடாக சமூகத்தினுடைய தேவையினை அரசு பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிலையினை உருவாக்குவதுடன் ஓர் சிறந்த அரசாங்கமானது தனது சட்டமாக இயற்றவும் முனையும், அப்பொழுதுதான் சமூக மாற்றத்திற்கான அடித்தளத்தினை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இன்றைய சமகால அரசியல், சமூக பொருளாதார விடயங்களில் பொதுக்களத்தின் தேவை மிகவும் அவசியமானதொன்றாக உணரப்படுவதுடன் நடைமுறையில் சிவில் சமூகங்கள், புத்திஜீவிகள் சமூகம் எனும் பெயரில் இயங்கும் அமைப்புக்கள் மேற்படி இலக்குகளினை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகின்றமையினை காணக்கூடியதாகவுள்ளது.

உண்மையான ஜனநாயக அரசின் செயற்பாடானது பொதுக்களத்தினாலே இயக்கப்படவேண்டும். அத்துடன் சட்டபூர்வமாக அரசாங்கம் என்றால் அது பொதுக்களத்தின் கருத்துக்களை கேட்டறியும் அரசாக காணப்படல் வேண்டும் அதேவேளை ஓர் அறிவு பூர்வமான வவாதத்தில் தனது பிரஜைகளினை ஈடுபடுவதற்கான சந்தர்ப் பத்தினை வழங்குவதாகவும் காணப்படல் வேண்டும். அப்போது தான் அங்கு சட்ட ஆட்சியும் நல்லாட்சியும் செழிப்புற்று வளரும்.

இன்றையகால நவீன அரசியல் சமூகத்தில் அரச நிறுவனங்கள் தனிமனிதனை தங்களுக்கு ஏற்ற வகையில் இயக்கிக்கொண்டு இருக்கின்றது. மாறாக அத் தனிமனிதனுடைய தனிப்பட்ட நலன்சார் தேவைகளினை பூர்த்திசெய்ய விடுவதில்லை.

இந்நிலையில் இங்கு ஓர் நெருக்கடி நிலைமை தோன்றுகின்றது. இந்த நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவ்வாறான ஓர் செயற்பாடுதான் பொதுக்களத்திற்கான வெளியினை உருவாக்கம் செய்கின்றது.

இங்கு அர்த்தமுள்ள மொழியும். பகுத்தறிவுச் சிந்தனையும் மனிதனின் எல்லா வகையான செயற்பாட்டுடன் இணைகின்றது. இந்த செயற்பாடானது மனிதன் ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளவும் ஒருவரோடு ஒருவர் உடன்பட்டு ஓர் பொதுவான செயற்றிட்டத்தினை தீட்டுவதற்கும் உதவுகின்றது. இவ்வாறான ஓர் நிலையில் சர்வாதிகாரம், முதலாளித்துவம் அதன் நிலையில் இருந்து விலகி சமத்துவம் / ஜனநாயகத்துக்கு மாறும்நிலை உருவாகும். இது பொதுக்களத்திலே மேற்கொள்ளப்படும் அறிவார்ந்த தொடர்பாடல் செயற்பாட்டால் மட்டுமே நடக்கும். மாறாக புரட்சியினாலேயோ அல்லது போராட்டத்தினாலேயோ நடைபெறுவது சாத்தியமற்றது. புரட்சி, போராட்டம் போன்றவற்றினை நீக்குவதற்கு அறிவியல் சார்ந்த உரையாடல்களின் அவசியத்தினையே இன்றைய மெய்யியல் தினமானது அறிமுகம் செய்து வைக்கின்றது.

மேற்படி எனது கருத்துக்கள் சமூகத்தில் மனித விடுதலையின் குறிக்கோள்களை முன்னெடுக்கும் அதேவேளை அனைவருக்கும் பொதுவான அறவிழுமிய அறிவின் அவசியத்தினை வழங்குவதாகவும் அமையுமென நம்புகின்றேன்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் எப்பொழுது சாத்தியப்படுமெனில் சுதந்திரமான, சமத்துவமான மனிதர்களுக்கு இடையில் எந்த விதமான கட்டுப்பாடுகளும், நெருக்கடிகளும் இல்லாத நிலையில் திறந்த, சுயாதீன, பகுத்தறிவுடன் கூடிய கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்பட்டால் மாத்திரமே சாத்தியப்படும்.

அதேவேளை சமூகங்களில் ஒழுக்கவிழுமிய கருத்துக்களினை பரப்புவதன் மூலமும் சமூக மாற்றத்தினை ஏற்படுத்தலாம்.

மனிதன் பகுத்தறிவு வழியில் சிந்திக்கும் திறன் கொண்டவன். அவனால் மனிதப்பண்புமிக்க நீதியான, சமத்துவமான, சமூகத்தினை உருவாக்க முடியும். இதற்கு அடிப்படையானது ஒழுக்கவியல் சிந்தனைகளே.

எனவே ஒழுக்க ரீதியான கருத்துக்களினை பரப்புவதன் மூலம் இதனை சாதிக்கலாம் என நான் நம்புகின்றேன்.

**ந. சிவகரன்**
**விரிவுரையாளர்,**
**மெய்யியல் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகிறது

# தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி

வடபகுதியில் உயர்கல்வி வாய்ப்பினை வழங்கும் ஒரேயொரு பல்கலைக்கழகமாக யாழ். பல்கலைக்கழகம் விளங்குகின்றது. அபிவிருத்திப் பாதையில முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் இப்பல்கலைக்கழகத்தில் முகாமைக்கற்கைகள் வணிக பீடமும் ஒன்றாகும். இப்பீட்த்தினால் தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பீடத்தின் வளர்ச்சி**

ஆரம்பத்தில் வணிக முகாமைக் கற்கைகள் என்ற துறையின் கீழ் வணிக மாணி, முகாமைத்துவ மாணி என்ற இரு கற்கை நெறிகள் காணப்பட்டதுடன் இத்துறையானது கலைப் பீடத்தின் கீழ் இயங்கி வந்தது. 1994 இல் முகாமைக் கற்கைகள் வணிக பீடம் என தனியான பீடம் உருவாக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களிலுள்ள முகாமைத்துவ மற்றும் வணிக கற்கைநெறிகளின் தரத்துடன் ஒத்துப் போகக்கூடிய வகையில் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அரையாண்டுக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழில் சந்தையில் போட்டியிடுவதற்கும், தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் ஏற்றவகையில் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்குடன் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் 1999 இல் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களின் விசேட கற்கைநெறிகளுக்கு வசதியளிக்கும் வகையிலும் கூடுதலான மாணவர்களைப் பீடத்திற்கு உள்வாங்கும் நோககிலும் 2010ஆம் ஆண்டு பீடத்தின் இரு துறைகளும் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டு கணக்கியல் துறை, நிதி முகாமைத்துவத்துறை, மனிதவள முகாமைத்து வத்துறை, சந்தைப்படுத்தல் துறை என நான்கு துறைகள் உருவாக்கப்பட்டன. தற்போது முகாமைத்துவம், வணிகம் ஆகிய இரு கற்கை நெறிகளுக்கும் சேர்த்து வருடாந்தம் 400 மாணவர்கள் வரையில் அனுமதி பெறுவதுடன் பீடத்தில் ஏறத்தாழ 1200 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

**பீடத்தின் கற்கை நெறிகள**

முகாமைக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில்




நிர்வாகமாணி, வணிகமாணி என்ற இரு பட்டப்படிப்பு கற்கை நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தொழில் நிர்வாக மாணி கற்கைநெறியைப் பயிலும் மாணவர்கள் கணக்கியல், நிதிமுகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் என்ற நான்கு துறைகளில் விசேடத்துவ கல்வியைத் தொடர முடியும். அவ்வாறே வணிக மாணிக் கற்கை நெறியிலும் மாணவர்கள் கணக்கியலும் நிதியும், வியாபார தொழில நுட்ப முகாமைத்துவம் என்ற இரண்டு துறைகளில் விசேடத்துவ கல்வியை மேற்கொள்ள முடியும்.

வணிகமாணி (வெளிவாரி) கற்கைநெறியும் பீடத்தினால் நடத்தப் பட்டு வருகிறது. பீடத்தின் வளர்ச்சிப் படிகளில் ஒன்றாக 2008 ஆம் ஆண்டு இணையவழி வியாபார முகாமைத்துவ மாணி (வெளிவாரி) கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. இக் கற்கைநெறியின் முதலாம் அணி மாணவர்கள் தமது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ளனர். 2011ஆம் ஆண்டில் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா, நுண்நிதியியல் டிப்ளோமா என மூன்று டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**பட்டப்பின் படிப்புகற்கைநெறிகள்**

முகாமைத்துவ முதுதத்துவமாணி, வணிக முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்ட கற்கைநெறிகளும் இப்பீடத்தினால் உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் கீழ் நடத்தப்பட்டுவருகின்றன.

இததகைய வளர்ச்சிப் போககின் பிரதான ஒரு கட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் இன்று காலடி எடுத்து வைக்கின்றது. தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி நவம்பர் 19 ஆம் திகதி அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பித்து வைககப்படுகிறது. சமூகத்தின் தேவையைக்கருத்திற்கொண்டு இம் முதுமாணிக கற்கை நெறியை ஆரம்பிப்பது தொடர்பான நீண்ட நாள் கனவு இன்று நனவாகிறது. வடபகுதி மக்களின் ஒரே உயர்கல்வி நிறுவனமான யாழ். பல்கலைக்கழகம் தனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் உன்னத பணியில் தொடர்ந்து புதிய புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்து வருவது அனைவரும் அறிந்ததே. அதன் வழியில் முகாமைக கற்கைகள் வணிகபீடம் எதிர்காலத்தில் மென் மேலும் புதிய கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளது.

**திருமதி. தனேஸ்வரி ரவீந்திரன்**
**இணைப்பாளர்**
**தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி**

# மலையக மக்களுக்கான பிரார்த்தனை பயணத்தில் யாழ். சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தினர்





மலையகத்தில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி இறந்த வர்களின் ஆத்ம சாந்திக்காகவும் உறவுகளை இழந்த குடும்பத்தினருக்கும் பாதிப்படைந்த மக்களுக்கும் இறையருள் வேண்டி சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியக்குழுவினர் அண்மையில்பிரார்த்தனைப் பயணம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் தலைமையில் ஒன்றிய செயலாளர் சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக்குருக்கள் மற்றும் உறுப்பினர்கள்கொண்ட குழுவே இவ்வாறு பிரார்த்தனைப் பயணத்தை மேற்கொண்டு பாதிப்படைந்த உறவுகளை சந்தித்து தமது பிரார்த்தனைகளை முடித்துக் கொண்டு பல உதவிப் பொருட்களையும் வழங்கியிருந்தனர்.

மண் சரிவில் சிக்கி இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் உறவுகளை இழந்த குடும்பத்தினருக்கும் பாதிப்படைந்த மக்களுக்கும் இறையருள் வேண்டி மேற்படி பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது.

வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த இப் பிரார்த்தனைப் பயணமானது குருமார்களால் சேகரிக்கப்பட்ட பல்வேறு வகையிலான பொருட்களுடனும் யாழ். பருத்தித்துறை வீதி ஆனைப் பந்தியில் ஆரம்பமானது. இந்துக் குருமார்களின் வருகைக் காக அப் பகுதியில் உள்ள மக்கள் காத்திருந்தார்கள்.

இதன் போது அன்றைய தினம் அனர்த்தத்தில் இறந்த மக் களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனை ஒன்று ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் இடம் பெற்றது.

அத்துடன் வேதபாராயணம், திருமுறைபாராயணம் ,சிவபஜனை, என்பன குருமார்களால் நடத்தப்பட்டன.

தொடர்ந்து உயிரிழந்தவர்களது மீட்புப்பணிகள் தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் குருமார்கள் சந்தித்து கலந்துரையாடியதுடன் மீட்புப்பணிகளை விரைவுபடுத்தும்படி தெரிவித்தனர்.

அதன்பின் மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டதுடன் அங்கிருந்து முகாமிற்கு சென்று அங்குள்ள மக்களை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது அங்குள்ள மக்கள் குருமார்களைகண்டவுடன்சுவாமி சுவாமி என அலறியடித்து உணர்ச்சி வசப்பட்டுள்ளார்கள்.

இவ்வேளை அம்மக்களுக்கு ஆறுதல் கூறிய குருமார்கள் உதவிப் பொருட்களையும் கையளித்ததுடன் ஆசீர்வாதங்களையும் வழங்கியுள்ளனர்.

இவ்வாறு தமது பிரார்த்தனையை மேற்கொண்ட குருமார்களுடன் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகப் பேச்சாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா இணைந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 678 குடும்பங்களைச் சேர்ந்த 2073 பேர் தற்காலிக முகாமில்

நுவரெலியா மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 678 குடும்பங்களைச் சேர்ந்த 2073 பேர், இதுவரையிலும் தற்காலிக முகாம்களிலே தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜி.குமாரசிறி, நேற்று முன் தினம் தெரிவித்தார்.

நுவரெலியாவில் 218 குடும்பங்களை சேர்ந்த 341 பேர் ஐந்து முகாம்களிலும், கொத்மலை பிரதேசத்தில் 190 குடும்பங்களை சேர்ந்த 741 பேர் மூன்று முகாம்களிலும், வலப்பனை பிரதேசத்தில் 84 குடும்பங்களை சேர்ந்த 278 பேர் இரண்டு முகாம்களிலும் ஹங்குரன்கெத்த பிரதேசத்தில் 39 குடும்பங்களை சேர்ந்த 126 பேர் ஒரு முகாமிலும், அம்பகமுவ பிரதேசத்தில் 147 குடும்பங்களை சேர்ந்த 587 பேர் நான்கு முகாம்களிலும் இன்னும் சிலர் தங்களது உறவினர்களின் வீடுகளிலும் தங்கவைக்கபபட்டுள்ளனர் என அவர் கூறினார்.


மொத்தமாக 15 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 2ஆயிரத்து 073 பேருக்கான நாளாந்த உணவு, கிராமசேவகர்கள் ஊடாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

தொடர்ந்தும் நுவரெலியா மாவட்டத்தின் காலநிலை சீரற்ற நிலையில் காணப்படுவதால், இவர்களை சொந்த வீடுகளுக்கு அனுப்பிவைப்பதில் பல சிக்கல்கள் காணப் படுவதாகவும், காலநிலை முற்றாக சீரடைந்த பின்னரே இவர்களை சொந்த வீடுகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் குமாரசிறி மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

# 17.11.2014-15.12.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்**

**தங்கள் மனதில் பட்ட கருத்துக்களை தைரியமாக எடுத்துரைக்கும் மேட இராசி நேயர்களே! சிந்தித்து எடுக்கும் முடிவுகளால் சிறப்புகள் வந்து சேரும்!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசிநாதன் செவ்வாய் குரு வீட்டில் சஞ்சரிக்கிறார். அதன்மீது சனியின் பார்வை பதிகிறது. தொழில் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்குபவர் சனி என்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொகை வரவு திருப்தி தரும்.

சூரிய, சுக்ர சேர்க்கை 8 ஆம் இடத்தில் இருப்பதால் பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். அவர்களின் வெளிநாட்டு முயற்சி அல்லது வீடு கட்டும் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள். சனியின் சப்தம பார்வை உங்கள் ராசியில் பதிவதால் அப்போதைக்கு அப்போது சில்லறைத் தொல்லைகள் உடல் உபாதைகள் ஏற்படலாம். அவற்றிலிருந்து விடுபட உடனுக்குடன் மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது. 12 இல் கேது சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும். வீண் வாக்குவாதங்களால் பிரிந்தவர்கள் இப்பொழுது வந்திணைவர். உச்ச குருவின் பார்வை செயல் ஸ்தானத்தில் பதிவதால் செய்யும் செயல்களில் உங்கள் திறமை வெளிப்படும். பாராட்டும், புகழும் கூடும்.

திட்டமிட்ட காரியங்கள் ஒவ்வொன்றும் நிறைவேறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். திருக்கார்த்திகை திருநாளில் முருகப்பெருமான் ஆலயத்திற்கு சென்று கந்தன் புகழ்பாடினால் வந்த துயர் விலகும். வளர்ச்சியும் கூடும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

3, 6 இறகு அதிபதியான புதன் நவம்பர் 20 ஆம் தகதியன்று அஷ்டமத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, விபரீத ராஜயோக அடிப்படையில் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அரங்கேறப்போகின்றது. கடிதம் கனிந்த தகவலைத் தரும். நீண்ட நாளாக நிறைவேறாத சில காரியங்கள் இப்பொழுது நிறைவேறி மகிழ்ச்சியை வழங்கும்.

**மகிழ்ச்சி தரும் மகர செவ்வாய்!**

ராசிநாதன் செவ்வாய் நவம்பர் 22 ஆம தகதி உச்சம் பெறுகிறார். இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இந்த அற்புதமான நேரத்தில் ஓய்வு பெற்ற பிறகும்கூட புதிய தொழில் தொடங்குவர். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிம்ம குருவின் செயறபாடுகள்!**

டிசம்பர் 3ஆம தகதி அதிசாரமாக குரு பகவான் சிம்மத்திற்கு செல்கிறார். அங்கு சில நாட்களே அவர் இருந்தாலும் பார்வைக்கு பலன் உண்டு அல்லவா? எனவே, அவர் உங்கள் ராசியையும், 9 ஆம் இடத்தையும் லாப ஸ்தானத்தையும் பார்க்கும் இந்த நேரம் ஒரு யோகமான நேரமாகும். பொருளாதார நிலை உயரும். பூமியோகம் கிட்டும். பொன், பொருள் சேரக்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். வெற்றிச் செய்திகள் வந்துசேரும்.

**புத-சுக்ர யோகம் செயறபடும் நேரம்!**

டிசம்பர் 7ஆம் தகதி தனுசு ராசியில் சுக்ரன சஞ்சரிக்கப் போகிறார். அதைத் தொடர்ந்து புதனும் ஆகஸ்டு 8 இல் தனுசு ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். குடும்ப ஸ்தானாதிபதியும், சகாய ஸ்தானாதிபதியும் 9 ஆம் இடத்தில் ஒன்றாக இணையும் நேரம் ஒரு உன்னதமான நேரமாகும். குடும்பத்திலிருந்து குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டைச் சொந்த வீடாக மாற்றிக் கொள்ள யோகம் வந்து சேரும். தொழிலில் கூடுதல் வருமானம் கிடைக்கும். தொலை தூரத்திலிருந்து அழைப்புகள் வந்து சேரும்.

இம்மாதம் சபரிமலைவாசன் வழிபாடு சந்தோஷம் வழங்கும்.


**பெண்களுக்கான சிறப்புபலன்கள்**

இம் மாதம் விலகிப் போன சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் மாதமாகும். வரன்கள் வாயில் தேடி வரும். கரம் குளிரப் பொருள் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அதிசார குருவின் பார்வை பலத்தால் நிதிநிலை வரலாறு காணாத அளவு உயரும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

இதுவரை செய்த விரயங்களை ஈடுகட்டும் விதத்தில் புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். ஆஞ்சநேயர் வழிபாடு அல்லல் தீர்க்கும்.

# சிந்தித்து எடுக்கும் முடிவுகளால் சிறப்புகள் வந்து சேரும்!

சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,
ரோகிணி, மிருகசீரிடம்
1,2 ஆம் பாதங்கள்!**

**சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற இடப இராசி நேயர்களே!**

**நினைத்தது நிறைவேறும் மாதம்!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, உங்கள் ராசிநாதன் சுக்ரன் சக ஸ்தானாதிபதி சூரியனுடன் கூடி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். திருமணம் மற்றும் தெய்வீக காரியங்களுக்காக ஒரு சில தொகையைச் செலவிட்டு மகிழ்வீர்கள்.

அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. வாகனங்களில் செல்லும் பொழுது வழியில் கவனம் தேவை. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும். ஒருசிலருக்கு வாகனம் வாங்க அலுவலகத்தில் கடன் உதவி பெற நினைத்தால் அதுவும் கைகூடும்.

அதே நேரத்தில் விரயாதிபதியாகவும் செவ்வாய் விளங்கி அஷ்டமத்தில் மறைவதால் விபரீத ராஜயோகம் அடிப்படையில் செலவிற்கேற்ற தொகை வந்து கொண்டே இருக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். சொத்துப் பிரச்சினைகள் சுமுகமாக முடியும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். வாழ்க்கைப் பயணம் சிறப்பாக அமையவும், வளம் கூடவும் வள்ளி மணாளனை வழிபட்டு வருவது நல்லது. குரு அதிசாரத்தில் இருக்கும் நேரம் தட்சிணாமூர்த்தியை வழிபட்டு திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் நவம்பர் 20 ஆம் தகதி விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த நிகழ்வு ஒரு யோகம்தான். புதன், சுக்ரன், சூரியன் ஆகிய மூன்றும் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் பொழுது புத-சுக்ர யோகம் மற்றும் புத-ஆதித்ய யோகம் செயறபடும். இதனால் பொருளாதார நிலை மேலோங்கும். பூமி வாங்க விற்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். நூதனப் பொருள் சேர்க்கை உண்டு. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அனுகூலமான நேரமிது. புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

**மகிழ்ச்சி தரும் மகர செவ்வாய்!**

நவம்பர் 22 ஆம் திகதி சப்தம விரயாதிபதி உச்சம் பெறப்போகிறார். வீடுகட்டும் முயற்சிக்கு வித்திட்டவர்கள், நாடு மாற்றம் செய்ய முயற்சித்தவர்களுக்கு எல்லாம் நல்ல நேரமிது. பாடுபட்டதற்கேற்ற பலன கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். புதிய பங்கு தாரர்கள் பொருளாதார நிலை உயரப் பாடுபடுவர்.

**அதிசார குருவின்
அற்புதப் பலன்கள்!**

டிசம்பர் 3 ஆம் தகதி அதிசாரமாக குரு பகவான் சிம்மத்திற்கு செல்கிறார். உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு பகைக் கிரகமாக விளங்கும் குருபகவான் அதிசாரமாக சிம்மத்திற்குச் செல்வது அதிர்ஷ்ட வாய்ப்புகளை அள்ளிக் கொடுக்கும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். குருவின் பார்வை பலத்தால் தொழில் தொடங்கும் வாய்ப்புகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் அனுகூலமும், உயர்வும் கிடைக்கும்.

**புத-சுக்ர யோகம் செயறபடும் நேரம்!**

டிசம்பர் 7ஆம் திகதி தனுசு ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அதைத் தொடர்ந்து டிசம்பர் 8ஆம் தகதி தனுசு ராசியில் புதனும் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, அஷ்டமத்தில் கூடும் இந்த சுக்ர புதனின் சேர்க்கையால் தங்கம், வெள்ளி தடையின்றி வாங்கும் யோகம் உண்டாகும். குழந்தைகளின் கல்யாண சீர் வரிசைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் அதற்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை அணிந்து அழகு பார்க்க ஆபரணங்களை வாங்கி மகிழப் போகிறீர்கள். சுபச் செய்திகள் வந்து சேரும். இம்மாதம் அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். அதுமட்டுமல்லாமல் குமரக் கடவுளையும், கார்த்திகைத் திருநாளில் வழிபட்டால் அமைதியும் கிடைக்கும், ஆனந்தமும் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதமாக அமைகிறது. தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளும் கைகூடும். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி அமையும். பாசத்தோடு குடும்ப உறுப்பினர்கள் பழகுவர். ஆசைகள் அரங்கேறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகளாலும் வருமானம் உண்டு. தங்கம், வெள்ளி போன்றவைகள் தடையின்றி வந்து சேரும். சர்ப்ப கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும். உங்கள் பெயரில் தொழில் தொடங்கக் குடும்பப் பெரியவர்கள் சம்மதிப்பர்.

# நினைத்தது நிறைவேறும் இம்மாதம் இனிய மாதமே!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாட்டுத்தலம் மீதான தாக்குதலால் இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே

# மீண்டும் போர் பதற்றம்



இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில உள்ள யூத வழிபாட்டுத் தலத்தில் 2 பாலஸ்தீன இளைஞர்கள் நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 4 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தால் இஸ்ரேல், பாலஸ்தீனம் இடையே மீண்டும் போர் பதற்றம் உருவாகியுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இஸ்ரேல் படை வீரர்கள் 3 பேரை பாலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்தினர் கடத்திச் சென்று கொலை செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பாக இரு தரப்புக்கும் இடையே போர் வெடித்து காஸா பகுதியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்நிலையில் கிழக்கு ஜெருசலேம் பகுதியில் உள்ள யூத வழிபாட்டுத் தலத்துக்குள் நேற்று முன் தினம் 2 பாலஸ்தீனர்கள் நுழைந்தனர். அங்கு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலியர்களை அவர்கள் கத்தி, கோடரியால் சரமாரியாக வெட்டினர்.



இதில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 10இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர், 2 பாலஸ்தீனர்களையும் சுட்டு வீழ்த்தினர். ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இந்த தாக்குதலை நடத் தியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால இஸ்ரேல் பாலஸ்தீனம இடையே மீண்டும் போர் பதற்றம் உருவாகியுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறிய போது, படுகொலைக்கு காரணமானவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

இருதரப்பினரும் ஜெருசலேமை புனித நகரமாக கருதுகின்றனர். ஜெருசலேமில் பாலஸ்தீனர்கள் மட்டுமே பிரார்த்தனை நடத்த வேண்டும் ஏனைய வழிபாட்டுத் தலங்கள் இருக்கக் கூடாது என்று ஹமாஸ் இயக்கம் வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அமெரிக்காவிலும் அவல நிலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வறுமை, குடும்ப வன்முறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வீடில்லாமல் தெரு வில் அனாதையாக திரியும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

வல்லரசு நாடு என கூறிக் கொள்ளும் அமெரிக்காவில் இரண்டாவது முறையாக ஜனாதிபதி ஒபாமா பதவியில் இருந்து வருகிறார். அமெரிக்காவிலும் வறுமை, வேலையில்லா திண்டாட்டம் பெருகி வருகிறது.

குடும்பத்தில் தனி நபர் வருமானம் போதுமானதாக இல்லையென்பதால் கணவன் , மனைவி இருவரும் ஊழியம் செய்து வருவாய் ஈட்டும் நிலையில் உள்ளனர். இந்நிலையில் வீடிழந்த குடும்பத்தினருக்கான தேசிய மையம் என்ற அமைப்பு நாடு முழுவதும் உள்ள மாகாணங்கள், நகரங்கள், கிராமங்கள் என சர்வே நடத்தி கடந்த 2012-2013 ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கை வெளியிட்டது.

அதில் கடந்த ஆண்டு 2.5 மில்லியன் குழந்தைகள், குடும்ப வன்முறை உள்ளிட்ட காரணங்களால் அனாதையாகவிடப்படுவது அதிகரித்து வருகிறது. (இ-5)




## எபோலாவை எதிர்கொள்வதற்கு உலக வங்கி 285 மில்.ஒதுக்கீடு

எபோலா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு உலக வங்கி 285 மில்லியன் டொலர் மானியம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

ஆபிரிக்கா நாடுகள் எபோலா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு உள்ளது.

உலக சுகாதார அமைப்பு நவம்பர் 14 வரை எபோலா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 14,413 பேர் என்றும் எபோலா வைரஸ நோயினால் இறந்தவர்கள் எண்ணிக்கை 5,177 பேர் என்றும் தெரிவித்துள்ளது.

எபோலா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட நாடுகளான கினியா, லைபீரியா, சிரியா, ஆகிய நாடுகளுக்கு எபோலா வைரஸ் நோயை கட்டுப்படுத்துவதற்கு சுமார் 285 மில்லியன் டொலர்களை வழங்க ஒப்புதல் அளித்துள்ளதாக உலக வங்கி தலைவர் ஜிம் யோங் கிம் தெரிவித்துள்ளார்.

எபோலா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட நாடுகள், ஏனைய நாடுகளுக்கு பரவாமல் இருக்கவும், எபோலா வைரஸ் நோயை கட்டுபடுத்துவதற்கு இந்த நிதி அளிக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி கூறியுள்ளது. (இ-5)

## இந்தியாவில் தடைவிதிப்பு

ஈராக் மற்றும் சிரியாவில் பெரும் பகுதிகளை கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அந்த பகுதிகளை இஸ்லாமிய நாடாக அறிவித்து உள்ளனர். தங்களுக்கு என தனி சட்டம் தனி நாணயம் என செயற்பட்டு வருகின்றனர். ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்திற்கு உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் இருந்து ஜிகாதி ஆதரவாளர்களை தேர்ந்து எடுத்து வருகின்றனர். பல நாடுகள் ஜிகாதிகள் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் சேருவதற்கு தடை விதித்து உள்ளனர். இந்தியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் சேர்வதற்கு சென்ற ஜிகாதிகள் ஐதராபாத், ராமநாதபுரம் ஆகிய நகரங்களில் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிணைக் கைதிகளை மீட்கும் அமெ.கொள்கையில் மாற்றம்

### ஜனாதிபதி ஒபாமா முடிவு

தீவிரவாதிகளின் பிடியிலிருக்கும் பிணைக் கைதிகளை மீட்கும் விவகாரத்தில் புதிய கொள்கைகளை வகுக்க வேண்டும் என்றும், அது தொடர்பாக ஆய்வு மேற கொளளுமாறும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் வெளிநாட்டினர் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சமீபத்தில் ஜேம்ஸ் போலே என்ற அமெரிக்க பத்திரிகையாளரைப் பிடித்துச் சென்ற ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள், அவரை கொலை செய்தனர். பிணைக் கைதியை விடுவிப்பதற்கு பணம் அளிப்பது தொடர்பாக அரசின் பல துறைகளும் பல்வேறு விதமான தகவல்களை தங்களிடம் கூறியதாக ஜேம்ஸ்போலேவின் உறவினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.


இதையடுத்து அமெரிக்க எம்.பி. டன்கன் ஹன்டர், பிணைக் கைதிகளை மீட்கும் கொள்கையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அரசு துறைகளுக்கு இடையே போதிய ஒத்துழை ப்பு இல்லாததால், பிணைக் கைதிகளை மீட்பதில் சிக்கல் ஏற்படுவதாக அவர் கூறினார்.

இது தொடர்பாக அவருக்கு அமெரிக்க பாதுகாப்புக் கொள்கை வகுக்கும் துறைச் செயலாளர் கிறிஸ்டின் வார்மத் எழுதிய கடிதத்தில், "வெளிநாடுகளில் அமெரிக்கர்கள் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டு கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

தீவிரவாதிகளின் இச் செயலைத் தொடர்ந்து, பிணைக் கைதிகளை மீட்பது தொடர்பான அரசின் கொள்கையை மறுபரிசீலனை செய்ய ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார். பிணைக்கைதிகளை மீட்பதில் சம்பந்தப்பட்டவரின் குடும்பத்தினருடன் கலந்தாலோசிப்பது, உளவுத் தகவல்களை திரட்டுதல், பிற நாடுகளுடனான ராஜ்ஜிய ரீதியிலான உறவுகள் ஆகியவை குறித்து புதிய கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று ஒபாமா கூறியுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், பிணைக் கைதிகளை பணம் கொடுத்து விடுவிப்பது தொடர்பான யோசனை எதுவும் முன்வைக்கப்பட்டிருக்கிறதா என்பது பற்றி தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 4 கை,காலுடன் பிறந்த அதிசய குழந்தை



இந்தியாவின் மேற்கு வங்கத்தில் உள்ள பருய்பூர் கிராமத்தில் நான்கு கைகள் மற்றும் கால்களுடன் அதிசய குழந்தை பிறந்துள்ளது. இது குறித்து கேள்விப்பட்ட அப்பகுதி மக்கள் இது கடவுளின் குழந்தை என்று கூறி குழந்தையை பார்ப்பதற்காக வந்த வண்ணம் உள்ளனர்.

குழந்தையை பார்க்க வைத்தியசாலைக்கு வரும் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் திணறிவருகின்றனர். கடவுளின் அவதாரத்தில் தான் பல கைகளும், கால்களும் இருக்கும் என்று நம்பப்படுவதால், இக்குழந்தையும் கடவுளின் குழந்தை என்று அப்பகுதி மக்களால் கருதப்படுகிறது. (இ-5)

## ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை மன்னித்து விட்டோம்; கண்ணீருடன் மனம் திறக்கும் பெற்றோர்

(டமாஸ்கஸ்)

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை மன்னிக்க முயற்சி செய்து வருவதாக படுகொலை செய்யப்பட்ட அமெரிக்க பிணைக்கைதி பீட்டரின் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகளை செய்து வந்த அமெரிக்க முன்னாள் இராணுவ வீரரான பீட்டர் காஸிக (Peter kassig Age-26) என்பவரை கடந்த மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கடத்தி சென்றனர்.

இதன்பின் பிணைக் கைதியாக வைத்திருந்த அவரை மதம் மாற்றி அப்துல் ரகுமான (Abdul Rehman)என அவருக்கு பெயர் சூட்டியதுடன், கடந்த இரு தினங்களுக்கு முன்பு அவரின் தலையைத் துண்டித்து கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

மேலும் அந்த படுகொலை காணொலியையும் தீவிரவாதிகள் வெளியிட்டது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து பீட்டரின் பெற்றோர் கூறுகையில், எங்களது மகன் கொலை செய்யப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்த விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கப்படவுள்ளது

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட சிறுகுளங்களின் கீழ் கடந்த 2013-2014 ஆம் ஆண்டுகளில் காலபோக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு அழிவடைந்த விவசாயிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவில் முன்வைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோருக்கு விதைநெல்வழங்கப்படவுள்ளதாக ஒலுமடு கமநல சேவை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## ஒலுமடு கமநல சேவை நிலையம் தகவல்

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த 2013-2014 ஆம் ஆண்டுகளில் காலபோக நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு அழிவடைந்த விவசாயிகளுக்கு 2014-2015 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்பயிர் செய்கையை மேற்கொள்ள உதவும் பொருட்டு விதை நெல் விநியோகம் அல்லது அதற்கான பணம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளை இனம் காணும் பொருட்டு கமக்கார அமைப்புக்களிடம் விவசாயிகள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கும் விண்ணப்பப் படிவம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் அதனைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக கமக்கார அமைப்பினர் ஊடாக ஒலுமடு கமநலசேவை நிலையத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைக்காத விவசாயிகளுக்கு எக்காரணம் கொண்டும் நட்டஈடு வழங்கப்படமாட்டாது எனவும் அவர்கள் மேலும் அறிவித்துள்ளனர். (2-15)




### வாகன் பற்றரியை களவாடிய நபருக்கு விளக்கமறியல்

புதுக்குடியிருப்புகைவேலிப் பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றிற்கு பொருத்தப்பட்டிருந்த பற்றரியை களவாடியதாக குற்றம் சாட்டப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நபரினை 03/12/2014 வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டார்.

கைப்பற்றப்பட்ட பற்றரியை நீதிமன்ற உத்தரவின் பேரில் உரிமையாளரிடம்பிணைமுறியில் ஒப்படைக்கப்பட்டது.(2)

## மாணிக்கஜோதியின் மரணத்தில் சந்தேகம்; அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவு

மாணிக்கஜோதி அபிமன்னசிங்கத்தின் மரணம்தொடர்பான வழக்கு விசாரனை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் இவ் வழக்கில் ஆஜராகி இருந்தார்.

மன்றில்வாகன சாரதிதனது சாட்சியத்தில் பிழையான பாதையில் பயணித்த வெள்ளை நிறடிப்பர்வாகனம்ஒன்றுமோதியே இந்த மரணம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தார். பொலிசாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம் யானை ஒன்றினாலேயே வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டு மரணம் நடைபெற்றதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் விசாரணையில் ஏற்பட்டுள்ள திருப்பம் காரணமாக உண்மைநிலையைக் கண்டறியமேலதிகவிசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்டநீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் வாகனத்தை பிணைமுறியில் விடுவிக்குமாறு நீதிபதியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாணிக்கஜோதிஅபிமன்னசிங்கத்தின் மரணம் விபத்து மரணமா அதற்கு வாகனமா அல்லது யானையா காரணம் என்பன பற்றி தகுந்த விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (2)

## வாகனம் மோதித் தள்ளியதில் 5 பிள்ளைகளின் தந்தை மரணம்

(மல்லாவி)

மாங்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பனிக்கன் குளத்தில் ஏ-9 வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை வாகனம் மோதித் தள்ளியதில் மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணிக்கும் 4.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பனிக்கன் குளம் ஏ-9 வீதி வளைவிற்கும் அருகிலுள்ள வைரவ ஆலயத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் (230 ஆவது மைக்கல்) இடம் பெற்றது.

இவ் விபத்துச் சம்பவத்தில் பனிக்கன் குளத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கோவிந்தன் செல்வரெட்ணம் (வயது 51) என்பவரே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தனது வீட்டிலிருந்து உறவினர் வீட்டிற்கு வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த வேளை அவ் வழியால் பயணித்த வாகனம் பிரஸ்தாப நபரை மோதித்தள்ளியது.

இதன்போது அவர் படுகாயம் அடைந்து பல மணிநேரம் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளை அவ் வீதியால் வந்த நபர் அவுரை மீட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் மரணமடைந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணையினை மேற்கொண்டுள்ளனர். (2-15-277-28)





வடமாகாண விவசாய அமைச்சினால் நவம்பர் மாதம் மரநடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அண்மையில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் மரக்கன்று நாட்டி வைக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இணைந்து 3 கோரிக்கைகளை முன்வைத்து அமைதி ஊர்வலம்

### மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை மற்றும் மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள தலைமைத்துவ அமைப்பு ஆகியவை இணைந்து மன்னார் தீவுப்பகுதியைச் சேர்ந்த ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்து மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அமைதி ஊர்வலம் ஒன்றை நேற்றையதினம் காலை நடத்தினர். இதன்போது மனனார் மாவட்ட அரசாங்க அதிபர் எம். வை.எஸ். தேசப்பிரியவிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் கையளித்துள்ளனர்.

இதன்போது மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம், ஜிம்ரோன் நகர், ஜீவபுரம், உப்புக்குளம், பள்ளிமுனை ஆகிய 5 கிராமங்களைச் சேர்ந்தமக்கள் இணைந்து குறித்த ஊர்வலத்தை மேற்கொண்டனர்.

இதுவரை இந்திய வீட்டுத் திட்டம் வழங்கப்படாமை, குடிநீர் பிரச்சினை, வீதி சீரின்மை ஆகிய பிரச்சினைகளை முன்வைத்து குறித்த அமைதி ஊர்வலத்தை அவர்கள் மேற்கொண்டனர்.

மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியில்முற்பகல்9.30 மணிக்கு குறித்த ஊர்வலம் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து மன்னார் மாவட்டச்செயலகத்தை சென்றடைந்தது.

இதில் கலந்துகொண்ட பல நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வாறு குறித்த ஊர்வலத் தில் பங்கேற்றனர்.

தமது கோரி கைகை அடங்கிய மகஜரை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்து தமது பிரச்சினைகளை நேரடியாக தெரிவிக்க விரும்பினர்.

ஆனால் அதற்கு அதிகாரிகள் இடமளிக்காத நிலையில் ஒரு சில கிராம மட்ட தலைவர்களுக்கு மாத்திரமே அரசாங்க அதிபரை சந்தித்துமகஜர்வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

இந் நிலையில் ஊர்வலத்தில் திரண்டு வந்த மக்கள் ஆத்திரமடைந்த நிலையில் அரசாங்க அதிபரை சந்தக்க முயன்றனர். ஆனால் அரசாங்க அதிபர் தனது அலுவலகத்தில் இருந்து வெளியே வர இல்லை.

இந்நிலையில் ஊர்வ லத்தில் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் மாவட்டச் செயலகத்திற்கு முன் பதாதைகளுடன் அமர்ந்து கொண்டனர்.

சுமார் ஒரு மணித் தியாலம் அவ்விடத்தில் நீண்ட நேரம் வெயிலில் காத்திருந்த மக்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரைமன்னார் நகர சபையிடம் கையளிக்கச் சென்றனர்.

இதன்போது மன்னார் நகர சபை தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் மற்றும் நகர சபை உறுப்பினர்களான இரட்ணசிங்கம் குமரேஸ், எஸ். பிரிந்தாவன நாதன் ஆகியோர் அம் மக்களின் கோரிக்கைகளையும், பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டதோடு மக்கள் வழங்கிய மகஜரையும் பெற்றுக் கொண்டனர்.

பின் மன்னார் நகர சபையினால்மேற்கொள்ளப்பட வேண்டிய சகல வேலைத் திட்டங்களையும் உடனடியாக குறித்த கிராமங்களில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என நகர சபை தலைவர் தெரிவித்த நிலையில் மக்கள் அவ்விடத்தில் இருந்து கலைந்து சென்றனர். (2-230)

## முல்லை.பாடசாலை அதிபர்களுக்கு தேர்தல் தொடர்பான சுற்று நிருபம்

### அனுப்பி வைத்தார் முல்லை.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் நாடளாவிய தேர்தல்-2015 பணியாட்கள் தேவைப்பாடு எனும் தலைப்பில் சுற்று நிருபம் ஒன்றினை முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தின்படி, தேர்தல் கடமைகளுக்கான அலுவலர்களில் பிரதான வாக்குகள் எண்ணும் அலுவலர் உதவிதெரிவத்தாட்சிஅலுவலர்,சிரேஷ்டதலைமை தாங்கும் அலுவலர், கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் எழுதுநர் ஆகிய கடமைகளுக்கு பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பிக்குமாறு சுற்று நிருபத்துடன் விண்ணப்பப்படிவம் ஒன்றையும் அனுப்பிவைத் துள்ளார்.

விண்ணப்ப இறுதி திகதி நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து உதவி தேர்தல்கள் ஆணையாளர், முல்லைத்தீவு மாவட்டம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிகபடிவங்கள்தேவைப்படுவோர் முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகம் மற்றும் முல்லை.மாவட்ட செயலகம் உட்பட்ட வலயக் கல்வி அலுவலகங்களிடம் பெற்றுக் கொள்ள முடியுமென அவரது சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப்பழக்கத்தையும் யன்னல் வழியாக தூக்கியெறிந்து விடமுடியாது. கையைப்பிடித்து படிப்படியாகத் தான் இறக்கி வெளியேற்ற வேண்டும்

*– மார்க் ட்வெய்ன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மகிந்தவை நினைத்து மனம் வருந்துகிறேன்

## ஜனாதிபதி ஆலோசகர் ரஜீவ கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்கம் தனது யோசனைகளுக்கு பதிலளிக்காது போனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சியை வலுப்படுத்துதல் மற்றும் ஜனநாயகம் தொடர்பாக சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்திற்கு யோசனை ஒன்றை அனுப்பியதாக பேராசிரியரான விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தனது யோசனைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உரிய பதிலை வழங்க தவறினால், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க போவதில்லை என அவர் உறுதியாக தெரிவித்துள்ளார்.

எனக்கும் ஜனாதிபதிக்கும் எந்த பிரசசினைகளும் இல்லை. அவர் நல்ல மனிதர். ஆனால் அவரை சுற்றியிருக்கும் கொத்து கொத்தான திருடர்களே பிரச்சினைக்குரியவர்கள்.

ஜனாதிபதியை நினைத்து நான் வருந்துகிறேன் எனவும் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை எதிர்க்கட்சிக்கு மாற விருப்பதாக பரவி வரும் வதந்திகளையும் அவர் மறுத்துள்ளார்.

கட்சி தாவ உள்ளதாக கூறப்படுவதில் உண்மையில்லை. அது முட்டாள்தனமானது. நான் எனது நிலைப்பாடு குறிதது ஏற்கெனவே தெளிவான முடிவை எடுத்து விட்டேன். அதில் மாற்றங்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஜீவ விஜேசிங்க கடந்த சில வருடங்களாக வெளிவிவகார அமைச்சும் மற்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் செயற்பாடுகள் குறித்து கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜனாதிபதி ஆட்சி முறை ஒழியாது; ஒழிக்கும்

கறையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருந்த கதையாகிவிட்டது இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறை. ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த ஜனாதிபதி ஆட்சி முறை இப்போது, இலங்கையின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாகி விட்டது.

தன்னுடைய ஆட்சியையும் தனது ஐக்கிய தேசியக் கட்சியையும் நிலைநிறுத்துவதற்காக ஜே.ஆர். ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஏற்படுத்தியிருந்தார்.

ஆனால் இப்போது அந்த ஆட்சிமுறை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கைகளில் அகப்பட்டுக்கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியை காப்பாற்றக் கொண்டு வந்த அதிகார ஆட்சி முறை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுகிறது எனச் சிந்திக்கும் போது, அவதந்திரம் தனக்கு அந்தரம் என்ற முதுமொழி ஞாபகத்திற்கு வருகிறது.

இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டுமென்ற கருத்து பரவலாக உள்ள போதிலும் அட! ஒரு தடவையேனும் அந்த அதிகாரத்தில் இருக்காமல் அந்தப் பதவியை ஒழிப்பதா? என்ற ஏக்கம் முக்கிய அரசியல்வாதிகளிடம் இருக்கவே செய்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவி வகித்த பின்னர் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்று நினைத்தார்.

தன்னோடு இந்தப் பதவிக்கு முடிவுகட்ட வேண்டும் என்று நினைத்த அவர் அப்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவைக் கோரியிருந்தார்.

எனினும் சந்திரிகாவிற்கு அடுத்தது தானே! ஜனாதிபதி என்று நம்பிய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க மறுத்துவிட்டார். என்ன செய்வது? விதிப்பயன் ரணிலுக்குப் பாதகமாக இருக்க, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார்.

அட! சந்திரிகா கேட்டபோது ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க ஆதரவு கொடுத்திருக்கலாம் என்று ரணில் வருத்தப்பட்டார். கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பதாக ரணிலின் ஞானம் இருந்தது.

இப்போது ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கக் கூடிய வல்லமை மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே உண்டு. அவர் நினைத்தால் பாராளுமன்றத்தில் தனக்கு இருக்கக் கூடிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாதொழித்துவிடலாம்.

அவ்வாறானதொரு நல்ல சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டதாயினும், மூன்றாவது தடவையும் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்று உயர் நீதிமன்றம் விடுத்த பரிந்துரை ஜனாதிபதி ஆட்சி முறைக்கு மீளவும் அடியுரமிட்டு பலப்படுத்தியுள்ளது.

ஆக, இனிமேல் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது என்ற பேச்சுக்கே இடமிருக்கமாட்டாது. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றால் மட்டுமே இந்தநிலை என்று யாரும் நினைத்து விடலாகாது.

மாறாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுபவர் ஒரு பலமானவராக இருந்து அவர் வெற்றி பெற்றால் கூட அவரும் தனக்குக் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை இல்லாது செய்ய விருப்பம் கொள்ளார்.

ஒட்டுமொத்தத்தில் இலங்கையில் உள்ள நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை, எல்லாவற்றையும் ஒழித்துக்கட்டுமே தவிர அதனை ஒழிக்க எவராலும் முடியாது.

ஜனாதிபதி ஆட்சி முறை ஒழியவேண்டும் என்பது இறைசித்தமாயின் அப்போது இந்த நாட்டில்முக்கியமான மாற்றங்கள் நடந்திருக்கும்.

# இலங்கை நீதித்துறையானது சுதந்திரமாக இயங்கவில்லை

(கொழும்பு)

நாட்டில் சட்டமோ, நீதித்துறை சுதந்திரமோ இல்லை என தூய்மையான நாளை அமைப்பின் ஏற்பாட்டாளரான ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சட்டத்திற்கு அமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த பதவிக்கு மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்.

அரசாங்கத்தில் இருக்கும் மிகவும் தேசப்பற்றாளர்கள் எனக் கூறும் நபர்கள், மேற்குலக அழுத்தங்கள் இருக்கின்றது. இதனால் மகிந்தவை எப்படியாவது வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர். இந்த விலங்குகளும், புரட்சியாளர்கள் என்று கூறிக் கொள்ளும் துரைமாரும் இதனை எப்படி கூறுகின்றனர் என்பது எனக்கு புரியவில்லை. மேற்குலக அழுத்தங்கள் என்பதால் மகிந்தவை பாதுகாக்க வேண்டுமா? எந்த காரணங்களுக்காகவும் மகிந்தவை பாதுகாக்கும் தேவை எமக்கில்லை. பயங்கரவாதத்தை தோற்கடிப்பது என்பதும் நிறைவேற்று அதிகாரத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பது என்பது இருவேறான விடயங்கள் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நீதிபதிகளையும் அரசு இடமாற்ற ஆரம்பிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்வதை போன்று ராஜபக்ஷ அரசாங்கம் நீதிபதிகளையும் இடமாற்றம் செய்ய ஆரம்பித்துள்ளது.

தனது அரசியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல நீதிபதிகளை அரசாங்கம் இடமாற்றம் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இடமாற்றங்களில் முக்கியமானதாக கங்கொடவில நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதியின் இடமாற்றம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பிட்ட நீதிபதி இடமாற்றம் செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு சார்பான நெலும்தெனிய என்பவர் அந்த இடத்தில் அமரவைக்கப்பட்டுள்ளார்.

நெலும்தெனிய பல மோசடிகளுடன் தொடர்புபட்டு உள்ளதாகவும், ஐக்கிய தேசிய கட்சியின் சிறிகோத்தாவும், மாதுளவாவே சோபித தேரரின் கோட்டை நாகவிகாரையும் கங்கொடவில நீதவான் நீதிமன்றத்திற்குள் வருவதால் இந்த அவசர இடம்மாற்றம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச்சிறந்தது எதுவும் இல்லை"

*–சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)*

## சத்திய தரிசனம்



### நல்லதைப் பின்பற்று

❖ பணம் சம்பாதிக்க வேண்டாம் என்று சொல்வது கூடாது. அதன் மீது கடும்பற்று வைக்காதே என்று தான் சொல்ல வேண்டும்.

❖ சொந்த வீட்டில் இருப்பவர் பற்று வைத்திருப்பதால் வேதனைக்கு ஆளாகிறார். வாடகைக்கு இருப்பவரோ வீட்டைப் பற்றிக் கலைப்படுவதில்லை.

❖ பிறரைப் பார்த்து நாமும் ஆடம்பரமாக வாழ முற்படுவது கூடாது. ஒருவரிடமுள்ள நற்பண்புகளை மட்டும் கடைபிடிக்க முயல்வது நல்லது.

❖ இன்று மனிதர்கள் நிறைய நல்லதை பேசுகிறார்கள். ஆனால், அவற்றை கடைப்பிடிக்க மறந்து விடுகிறார்கள்

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### பயன்படுத்தலாகா நேரங்கள்

✦ எலுமிச்சம்பழத்தினைத் தினசரி பயன்படுத்தக்கூடாது. தொடர்ந்து உபயோகித்தால் உடலில் உள்ள கார சேமிப்பு குறைந்து நோய் எதிர்ப்பு சக்தி குறையும்.

✦ அடுத்தநாள் சமையலுக்கு முதல்நாள் இரவே காய்கறிகளை நறுக்கி வைக்கக் கூடாது.


✦ இப்படி முன்னதாக நறுக்கிவைக்கப்படும் காய்கறிகளின்மேல் காற்றிலுள்ள பிராணவாயுபடுவதால் அதிலுள்ள பி, சி விற்றமின்கள் வெட்டப்பட்ட பகுதிமூலம் வெளியேறுகின்றன. எனவே சமைக்க ஆரம்பிக்கும் முன்பாகத் தான் காய்கறிகளை நறுக்கவேண்டும்.

✦ இரவில் இஞ்சி, பாகற்காய், கஞ்சி, தயிர், நெல்லிக்காய் ஆகியவற்றைச் சேர்க்கக்கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார்வின் சிறப்பாட்டம்

# கே.சீ.சீ.சீ. அணியை வீழ்த்தி சென்றலைட்ஸ் திரில் வெற்றி







டார்வினின் சகலதுறை பெறுபேற்றினால் கே.சீ.சீ.சீ அணிக்கு எதிரான 2014 ஆம் ஆண்டுக்கான டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த தொடரின் பரபரப்பான இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணி ஒரு விக்கெட்டால் திரில் வெற்றி பெற்றது.

45 ஓவர்களைக் கொண்டமைந்த இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கே.சீ.சீ.சீ. அணி, சென்றலைட்ஸ் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் 37.2 ஓவர்கள் வரையே துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் வல்லவகுமாரன் 29, ராகுலன் 24, உமாகாந்த் 16, ஜெயரூபன் 15 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாக எடுத்தனர்.

சென்றலைட்ஸ் அணி சார்பில் பந்து வீச்சில் அசத்திய டார்வின் 8 ஓவர்கள் வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

தவிர வியாசன் 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அலன்குமார், ஜெனோசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

134 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றியிலக்கைநோக்கி பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த சென்றலைட்ஸ் அணி கடும் போராட்டத்திற்கு பின் 41.5 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து ஒரு விக்கெட்டால் வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் டார்வின் ஆட்டமிழக்காமல் 31, கோகுலன் 27, ஸ்ரீபன் ராஜ், வதுசனன் ஆகியோர் தலா 13 ஓட்டங்கள் எடுத்தனர்.

இத்தொடரின் சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் ஆகிய விருதுகளை கே.சீ.சீ.சீ அணியின் சாப[illegible]வன், ஆதித்தன் ஆகியோரும், சிறந்த துடுப்பாட்ட வீரர், சகலதுறை வீரர், இப்போட்டியின் ஆட்டநாயகன், தொடரின் நாயகன் ஆகிய விருதுகளை சென்றலைட்ஸ் அணியின் டார்வினும் பெற்றனர். (கு)

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம் கே.சீ.சீ.சீ.தொடர்ந்து முன்னிலை

ஜோர்ஜ்.வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம்2014ஆம்ஆண்டு யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவில் கே.சீ.சீ.சீ அணி 125.24 புள்ளிகளை பெற்று முன்னிலையிலுள்ளது.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 5 ஆவது ஆண்டாக 2010 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி வெற்றிக்கிண்ணத்திற்கான சிறந்த கழக அணி தெரிவு நிகழ்வில் 01.01. 2014 தொடக்கம் 30.09.2014 வரை நடைபெற்ற 120 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கழகங்களின் தரவரிசைப்பட்டியல் பின்வருமாறு,

| இல | கழகங்கள் | புள்ளிகள் | போட்டிகள்/ வெற்றி/சமநிலை |
|---|---|---|---|
| 01 | கே.சீ.சீ.சீ விளையாட்டுக்கழகம் A | 125.24 | 23./21 |
| 02 | சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் (சொக்ஸ்) | 123.58 | 21/18 |
| 03 | பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழ்கம் | 85.40 | 19/11 |
| 04 | யாழ்.பல்கலைக்கழகம் | 72.26 | 13/07 |
| 05 | யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் | 69.95 | 13/09 |
| 06 | மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் | 60.82 | 14/06 |
| 07 | ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகம் | 60.76 | 14/07 |
| 08 | கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் | 60.43 | 15/08 |
| 09 | யூனியன்ஸ் விளையாட்டுக்கழகம் | 47.63 | 12/06 |
| 10 | யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் | 44.65 | 12/04 |
| 11 | ஜொலிஸ்ரார்ஸ் வில்ளையாட்டுக்கழகம் | 43.95 | 13/04 |
| 12 | திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் | 38.41 | 10/04 |
| 13 | ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக்கழகம் | 33.15 | 09/04/01 |
| 14 | ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக்கழகம் | 25.93 | 05/03 |
| 15 | அரியாலை சென்றல் விளையாட்டுக்கழகம் | 24.46 | 07/01/01 |



SPORTS
விளையாட்டுச் செய்திகள்

அவுஸ்திரேலிய மெல்போர்னில் கிரிக்கெட் மைதானத்தில் இந்திய பிரதமர் மோடிக்கு அவுஸ்திரேலிய பிரதமர் விருந்து அளித்தார். மைதானத்துக்கு வந்த நரேந்திரமோடிக்கு அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபோர்ட் உற்சாக வரவேற்பு அளித்தார். இந்த விருந்தில் இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கபில்தேவ், கவாஸ்கர், வீ.வி.எஸ்.லக்ஸ்மன் பங்கேற்றுள்ளனர்.

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து; கொல்கத்தா அணி வெற்றி




யுனைடெட் எப்.சி அணியை வென்றது கொல்கத்தா

இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த 35 ஆவது லீக் ஆட்டத்தில் அட்லெடிகோ டீ கொல்கத்தா-நார்த் ஈஸ்ட் யுனைடெட் எப்.சி. (கவுகாத்தி) அணிகள் பலப்பரீட்சை நடத்தின. விறு விறுப் பான இந்த ஆட் டத்தில் முதல் பாதியில் கோல் எதுவும் போட ப்பட வில்லை.

பிற்பாதியில் 51 ஆவது நிமி டத்தில் கொல் கத்தா அணி வீரர் லூயிஸ் கார் சியா தலையால் முட்டி அபாரமாக அடித்தார். கவுகாத்தி அணிக்கு 58 ஆவது நிமிடத்தில் சமன் செய்ய கிடைத்த பிரிகிக் வாய்ப்பை அந்த அணி வீரர் கோகே வெளியில் அடித்து வீணடித்தார்.

முடிவில் கொல்கத்தா அணி 1-0 என்ற கோல் கணக்கில் யுனை டெட் எப்.சி. (கவுகாத்தி) அணி யை வீழ்த்தியது. இந்த போட்டி தொட ரில் கொல் கத்தா அணி 2 ஆவது முறை யாக யுனை டெட்எப்.சி. (கவுகாத்தி) அணியை தோற்கடித்து இருககிறது.

கொல்கத்தா அணி இதுவரை 9 லீக் ஆட்டங்களில் விளையாடி 4 வெற்றி, 4 டிரா, ஒரு தோல்வியுடன் 16 புள்ளிகள் பெற்று பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது. (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசி...

திக்குள் அடங்கும் கைதிகள் பொதுமக்கள் பாதுகாப்பு மட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் அல்லது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் பிறப்பிக்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவு (Detention Order) இன் கீழ் பொலிஸ் நிலையங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இவ்வகுதிக்குள் அடங்குவர்.

அந்த வகையில் மேற்படி கைதிகள் பொலிஸ் நிலையங்களிலும் பொலிசாரினால் நிர்வகிக்கப்படும் தடுப்பு நிலையங்களிலும் மற்றும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர்.

தற்போதுள்ள நிலையில் சாதாரண பொலிஸ் நிலையங்களில் மேற்படி கைதிகள் எவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கவில்லை. ஆயினும் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்கும் விசேட பிரிவுகளான குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (Criminal Investigation Department -CID) பயங்கரவாத தடுப்புப்பிரிவு (Terrorism Investigation Division ) கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு (Colombo Crime Division - CCD) ஆகியவற்றால் அவ்வப் போது மேற்படி சட்டத்தின் கீழ் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்படி மூன்று விசேட பிரிவுகள் தவிர வேறு சிறப்புப் பிரிவுகளும் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டு அவையும் மேற்படி சட்டங்களின் கீழ் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர் என்ற போதிலும் 2009 ஆம் யுத்தம் முடிவடைந்த பின்னர் அத்தகைய வேறு சிறப்பு பிரிவுகளில் எவராவது தற்போது தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனரா? என்று அறியமுடியவில்லை.

மேற்குறிப்பிட்ட மூன்று விசேட பிரிவுகளுள் குறிப்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத தடுப்புப்பிரிவு ஆகியனவே தொடர்ந்தும் மேற்படி சட்டங்களின் கீழ் கைது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் இவ்விரு பிரிவுகளின் தலைமையகங்களிலும் பிராந்திய நிலையங்களிலும் கைதிகள் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்படி இரு பிரிவுகளதும் பிராந்திய நிலையங்களால் கைது செய்யப்படும் கைதிகள் பின்னர் கொழும்பில் உள்ள அவற்றின் தலைமையகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டும் இவ்வாறு அவற்றின் தலைமையகங்களில் ஒன்று சேர்ந்த கைதிகள் பின்னர் தடுப்பு காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டும் வருகின்றனர். அத்தகையை தடுப்புக்காவல் நிலையமாக பூசா தடுப்புக்காவல் நிலையமே பிரதானமாக இருந்து வருகின்றது.

வேறு ஏதேனும் விசேடமாக குறித்துரைக்கப்பட்ட தடுப்புக்காவல் நிலையங்களில் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது தொடர்பில் அறிய முடியவில்லை. யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முயற்சியின் ஒரு அங்கமாக அரசியற்கைதிகள் யர்வரும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்படவேண்டும் என்பதே நல்லிணக்கத்தை விரும்பும் எல்லோரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. உலக நாடுகள் பலவற்றில் இத்தகைய முன்னுதாரணங்கள் நல்லிணக்க முயற்சியின் அம்சமாக பின்பற்றப்பட்டுள் ளன.

இலங்கைக்கும் இது புதிய விடயம் அல்ல. 1971 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடைபெற்ற ஆயுதக்கிளர்ச்சியில் தொடர்பு பட்டவர்களுக்கும் 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகளுக்கும் 1989 ஆம் ஆண்டில் தென்னிலங்கையில் ஆயுதக்கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கும் முழுமையான பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போது தமிழ் அரசியற் கைதிகளுக்கு எதிரான பல வழக்குகள் சட்டமா அதிபரினால் கைவாங்கப்பட்டன என்ற போதிலும் இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நல்லிணக்கத்திற்கான விதந்துரைப்புகளில் அரசியற்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் முக்கியத்துவமளிக்கப்படாதது மிகுந்த ஏமாற்றமளிப்பதாக அரசியற்கைதிகள் தெரிவித்தனர்.

வட மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் எல்லாவிதமான யுத்தப்பாதிப்புக் கணக்கெடுப்பின் போதும் அரசியற் கைதிகளின் விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் மாகாணசபையின் திட்டமிடல் நிகழ்ச்சி நிரலில் இணைத்துக் கொண்டு பொருத்தமான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நம்பிக்கையோடு எதிர் பார்க்கின்றனர் என்ற விடயத்தை கூறி அமைகிறேன் என அவர் தெரிவித்தார். (செ-4)

# மாவீரர் வார...

தொழிற்றுறை பயிற்சி, சுற்றுலா விடுமுறைகளை அறிவித்துள்ள நிலையில் கலைப்பீடமும் எதிர்வரும் 24 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து நான்கு நாட்களுக்கு விடுமுறையாக அறவிக்கவுள்ளதாக அறிய முடிகின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி அன்று மாவீரர் தினம் என்பதால் மாணவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டித்து விடக்கூடும் என்பதனாலேயே இவ்வாறு விடுமுறைகள் தொடர்ச்சியாக அறிவிக்கப்படுவதாக தெரிய வருகின்றது.

கடந்த சில வாரங்களாக யாழ்.பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்து காணப்படுகின்ற அதேவேளை பல்கலைக்கழகத்துக்குள் என்ன நடைபெறுகின்றது என்பதையும் கண்காணித்து வருகின்றனர் என மாணவர் தரப்பினர் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இராணுவத்தின் பிரசன்னத்தால் மாணவர் மத்தியிலும் விரிவுரையாளர்கள் மத்தியிலும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது எனவும், இதனால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் பல்கலை ஆசிரியர் சங்கம் ஏற்கெனவே கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை விடுமுறை மற்றும் தொழில்துறை சுற்றுலா பயிற்சிக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுவதனால் விடுதிகளிலும் மாணவர்கள் தங்கமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு மாவீரர் தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழகம் ஒரு வாரத்துக்கு மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில் பரீட்சை விடுமுறை மற்றும் சில காரணங்கள் கூறப்பட்டு இவ்வருடமும் விடுமுறை வழங்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இவ்விடுமுறையினை அந்தந்த பீடங்களே அறிவித்துள்ளன எனவும் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் தெரிவித்தார். (செ-4)

# மாதகலில்...

நேற்று அளவீடு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு பொது மக்களின் காணிகள் பாதுகாப்பு படையினரின் தேவைக்காக சுவீகரிக்கப்படுவதாக மக்கள் பிரதிநிதிகளும், சிவில் சமூகப் பிரதிநிதிகளும் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மாதகல் ஜோதிப்புலம் பகுதியில் உள்ள 4.2 ஏக்கர் காணியை அளவீடு செய்வதற்காக நில அளவீட்டுத் திணைக்கள அதிகாரிகள் குழுவினர் நேற்று முற்பகல் 10 மணியளவில் சென்றிருந்தனர்.

இக் காணியில் ஏற்கெனவே கடற்படை முகாம் அமைந்துள்ளமை குறிபிடத்தக்கதாகும்.

காணியை அளவீடு செய்வதற்கு காணியின் உரிமையாளர் சம்மதம் தெரிவித்தமையால் தடைகள் இன்றி அதிகாரிகள் தமது பணிகளை முன்னெடுத்தனர்.

காணி அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட ஜோதிபுலம் பகுதிக்கு வலி வடக்கு மீள்குடியேற்றக் குழு தலைவர் எஸ்.சஜீவன், வலி வடக்கு பிரதேச சபைத் தலைவர் எஸ்.சுகிர்தன், வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் சென்றிருந்தனர்.

மாதகல் ஜோதிப்புலம் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட காணி அளவீட்டுப் பணிகள் தொடர்பில் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவிக்கையில்.

காங்கேசன்துறை துறைமுகத்தின் பாதுகாப்பிற்காகவே இந்த காணி சுவீகரிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

உரிய சட்ட நடைமுறைக்கு அமையவே இந்த காணி சுவீகரிப்புப் பணிகள் இடம் பெறுவதாக குறிப்பிட்ட கடற்படைப் பேச்சாளர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பலவந்தமாக காணிகள் கைப்பற்றப்படுவதில்லை என கூறினார்.(செ-4)

# அம்லா, பின்ஞ் சதம் அவுஸ்ரேலியா வெற்றி

துடுப்பாட்ட வீரர்களுக்கு சொர்க்க பூமியாகத் திகழ்ந்த கான்பெரா ஆடுகளத்தில் ஆரோன் பின்ஞ் சதம் அடித்து கைகொடுக்க தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 3 ஆவது ஒரு நாள் போட்டியில், அவுஸ்திரேலிய அணி 73 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றி வருகிறது.

இத்தொடரின் 3 ஆவது ஒருநாள் போட்டி நேற்று கான்பெராவில் நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரோன் பின்ஞ் - வோர்னர் (53) இணையின் (118) சிறப்பான ஆரம்பமும், ஸ்ரீவன் ஸ்மித்தின் (73*) இறுதிநேர அதிரடியும் கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் தனது 5 ஆவது ஒரு நாள் சதத்தை பூர்த்தி செய்த பின்ஞ் 109 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

கடின இலக்கை துரத்திய தென் னாபிரிக்க அணிக்கு டி ஹொக்- அம்லா இணை சுப்பர் தொடக்கம் (108) கொடுத்தது.

அரை சத வாய்ப்பை இழந்த ஹொக் 47 ஓட்டங்களில் வெளியேறினார்.

தொடர்ந்து துடுப்பாட வந்த டு பிளசி (17). ரோசோவ் (2) ஏமாற்றினாலும். தனி நபராக போராடிய அம்லா, அணித் தலைவர் டி வில்லியர்ஸுடன் இணைந்து 5 ஆவது விக்கெட்டுக்காக 76 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து அணிக்கு வலுச் சேர்த்தார்.

இந்நிலையில் டி வில்லியர்ஸ் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஒரு நாள் அரங்கில் 17 ஆவது சதத்தை பூர்த்தி செய்த அம்லா 102 ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்காவின் தோல்வியும் உறுதியானது.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 256 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.




பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் ஸ்ரார்க் 4, ஹாசில்வூட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ் திரேலிய அணியின் ஸ்ரீவன் ஸ்மித் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 4 ஆவது ஒருநாள் போட்டி நாளை மெல்பேர்னில் ஆரம்பமாகிறது. (க)

# தீயணைப்பு படைப்பிரிவின் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

பிரித்தானியாவை மையமாகக் கொண்டு இலங்கையில் இயங்கும் தீயணைப்பு பொறியியல் நிறுவனத்தால் (Institute of fire Engineers) நடத்தப்படும் 2014 ஆம் ஆண்டுக்கான IFE கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்பு மாதுவெல CMC விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

6 பேர் 5 ஓவர்களைக் கொண்டமைந்த இப்போட்டிக்கு அகில இலங்கை ரீதியில் உள்ள அனைத்து தீயணைப்பு படைப்பிரிவின் துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.

இதற்கான ஒழுங்கமைப்பினை Fire Unit of the Colombo Dockyard PIC நிறுவனம் செய்துள்ளது. முதல்தடவையாக யாழ்.மாநகர சபை தீயணைப்பு படைப்பிரிவிலுள்ள துடுப்பாட்ட அணியும் இப்போட்டியில் பங்குபற்ற கொழும்பு செல்கின்றது.

இப்போட்டியில் பங்குபற்றச் செல்லும் யாழ்.அணியின் விபரம் வருமாறு,

பெ.திருச்செல்வன், எ.கி.டெஸ்மன், செ.விக்னேஸ்வரன், அ.சகாயராஜா, சி.புருசோத்தமன், ஜோ.மைக்கல்ராஜ், ச.கணநாதன், சி.சுஜிந்தன். (க)

# மழையுடன்...

விடுத்துள்ளது.

அதற்கமைய, வடக்கு, வடமத்தி, கிழக்கு, ஊவா, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை மற்றும் பொத்துவில் ஊடாக காலி வரை யான கடற்பிராந்தியத்தில் காற்றின் வேகம் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன.

அதன்போது இந்த கடற்பகுதிகளில் அலையின் வேகம் அதிகரிக்ககூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பெரும்பாலான கடற்பிராந்தியங்களில் மழை அல்லது மின்னலுடன் கூடிய மழை பெய்வதற்குரிய வாய்ப்புகள் உள்ளதாக அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார முடியரசு ஆட்சியை...

களாக சந்திப்போம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப் படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இம்மாநாட்டில் சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல், இந்நாட்டில் மீண்டும் ஜனநாய கத்தை மீளமைத்து குடியரசை காப் பாற்றும் தேர்தலாகும்.

எனவே இந்த தேர்தல் கட்சி, நிறம், இனம், மதம் ஆகிய பேதங் களை கடந்த தேர்தலாக இருக்க வேண்டும். நாட்டை காப்பாற்ற ஒன்று சேரும் இந்த தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி, ஜனநாயக கட்சி, ஹெல உறுமய ஆகிய கட்சி களுடன் சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிரிவும் இடம்பெற வேண்டும்.

இவற்றுடன் இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதி நிதித்துவம் செய்யும் நமது கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் இடம் பெற வேண்டும்.

இந்த கூட்டு செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியு டன் நான் தெரிவித்துக் கொளகிறேன்.

எங்கு போனாலும் உங்கள் பொது வேட்பாளர் யார் என கேட்கிறார்கள். இதன் காரணம் இந்த அரசாங்கம் தான். இன்று பொது வேட்பாளர் பற்றி எங்களைவிட அரசாங்கம்தான் அதிகம் கலவரமடைந்து பதற்ற மடைந்துள்ளது.

அதனால்தான் எங்கே உங்கள் பொது வேட்பாளர் என்று எங்களிடம் கேட் கிறார்கள். நேற்று, இன்று, நாளை என நாம் நாள் கடத் துவதாக சொல்கிறார்கள்.

இது என்ன? பொது வேட் பாளரின் பெயரை அறிவிப் போம் என்று நாங்கள் எங்கே சொன்னோம்? இது அரசாங்கம் உருவாக்கியுள்ள கதை.

நாங்கள் பதற்றப்பட வில்லை. நாம் மிகவும் சாவ காசமாக இதை அணுகுகி றோம். அவசரப்பட வேண் டிய தேவை எங்களுக்கு இல்லை. நீங்கள் முதலில் தேர்தல் தொடர்பான மற்றும் நியமனம் தொடர்பான அறிவித்தல்களை அதி காரபூர்வமாக அறிவியுங்கள்.

அதன்பிறகு நாங்கள் எங்கள் பொது வேட்பாளரை அறிவிப்போம். எங்கள் வேட்பாளர் யார் என்பதை பற்றி அறிந்துகொண்டு, அந்த அடிப் படையில் தேர்தலுக்கு போவதா, இல்லையா என்று முடிவெடுக்க அரசு தடுமாறுவது எங்களுக்கு தெரியும்.

ஆகவே எங்கள் இரகசியம் எங் களுடன் உங்கள் அறிவிப்பு வரும் வரை இருக்கும். அதன்பிறகு நாட் டுக்கு தெரிய வரும்.

நாங்கள் பொது வேட்பாளர் பற் றிய விடயத்தை விட , பொது மேடை மற்றும் பொது எதிரணி கூட்டணி பற்றிய விடயத்துக்கே முன்னுரிமை கொடுத்து வந்தோம். அது இப்போது பலனளித்துள்ளது. அரசின் பிரதான பங்காளி கட்சியான ஹெல உறுமய, நேற்றுமுன்தினம்நாட்டுதலைவருக்கு பிறந்த நாள் பரிசு வழங்கியுள்ளது.

அந்த பரிசின் மூலம் இன்றைய அரசில் உள்ளவர்கள் மத்தியில் உடை உடுத்தி தன்மானத்துடன் தெருவில் நடக்கும் தகைமை ஹெல உறுமய கட்சிகாரர்களுக்கு மட்டுமே உள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது.

இந்த கட்சியுடன் எனக்கு கடு மையான முரண்பாடுகள் இருக்கின் றன. ஆனால், இன்று அவர்கள் தாம ஊழல் பைல்களுக்கு பயப்படுபவர் கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளார் கள் என்பதை கூற நான் தயங்கப்போ வதில்லை.

ஏனென்றால் ஹெல உறுமய எம்பீக்கள் எவரும மக்கள் பணததை திருடவில்லை. வாக்களித்த மக் களை காட்டிக் கொடுக்கவில்லை. அரசில் இருப் பதா இல்லையா என அவர்கள், ஒரு கட்சியாக கூட்டாக முடிவு செய்துள்ளார்கள்.

இன்னமும் நிறைய பரிசு களை வழங்க பலர் வரிசையாக காத்திருக்கின்றார்கள். உண் மையான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி விசுவாசிகளுக்கு இங்கே இடம் தயாராக உள்ளது.

இன்று ஒரு முடியரசாக மாறி யுள்ள இந்நாட்டை காப்பாற்றி, இந்நாட்டை மீண்டும் ஒரு குடியர சாக மாற்ற உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிகாரர்கள் தயாராக இருக்கின்றார்கள். அவர்களும் பரிசளித்து விட்டு இங்கே வருவார் கள். பொறுத்திருங்கள் என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)


## பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த பெண் ஒருவரை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவைப்படுகிறார்.

இடம் : அளவெட்டி, யாழ்ப்பாணம். தொ.இ : 077 845 3450 (C-9131)

## வீடு வாடகைக்கு

வெளிநாட்டில் இருந்து வருபவர்களிற்கும் திரு மண வைபவங்களை தங்கி நின்று நடத்துவதற் கும் சகல தளபாட வசதிகளும் கொண்ட புதிய வீடு கஸ்தூரியார் வீதியில் கிழமை, மாத அடிப் படையில் வாடகைக்குண்டு.

(8373) தொடர்பு : 0777 035 457


# விடுதலை...

தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் 2011-ம் ஆண்டில் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்டு, கொழும்பு உயர்நீதிமன்றத் தால், அக்டோபர் 30-ந்தேதியன்று மரணதண்டனை விதிக்கப்பட்டி ருந்தனர்.

இந்த சம்பவம் தமிழ்நாட்டில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியி ருந்தது.

இவர்கள் மேல்முறையீட்டுக்கு இந்தியா அனைத்து உதவிகளை யும் செய்யும் என்று இந்திய அரசு அறிவித்திருந்தது.

இந்த ஐந்து பேரையும் சிறை யிலிருந்து விடுவித்துவிட்டதாகவும், அவ்ர்களை இலங்கை குடிவரவு அதிகாரிகளிடம் கையளித்து விட்ட தாகவும் இலங்கை சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பொன்றில், இந்த மீன வரகளை விடுதலை செய்ய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்து, அவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும், விரை வில் அவர்களை இந்தியா அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக வும் கூறியிருக்கிறது.

இலங்கைக்கான இந்தியத் தூதர் வை.கே.சின்ஹா, இந்த மீனவர் கள் விடுதலையான் பிறகு தூதரகத் தில் அவர்களை சந்தித்தார்.

இலங்கை ஜனாதிபதி மனித நேய சமிக்ஞையாக இவர்களை விடுதலை செய்திருப்பது இந்தியா வுக்கும், இலங்கைக்கும் இடையே ஏற்கெனவே நிலவும் உறுதியான மற்றும் பன்முகத்தன்மையுடைய இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் என்று தூதரக செய்திக் குறிப்பு கூறியது.

### பொதுமன்னிப்பின் பேரிலேயே விடுதலை

இது குறித்து செய்தியாளர்களி டம் பேசிய மீனவர்களின் வழக் கறிஞர் அனில் சில்வா, இலங்கை அரசியல் சட்டத்துக்கு அமைய, ஜனாதிபதி வழங்கிய பொது மன் னிப்பின் பேரிலேயே இவர்கள் விடு தலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரி வித்தார்.

மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு கோரி இந்த ஐந்து மீன வர்கள் தாக்கல் செய்த மேன் முறை யீடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை வாபஸ் பெறப்பட்டது.

இதன் பின்னரே இவர்கள் விடு விக்கப்பட்டுள்ளதாக வழக்கறிஞர் அனில் சில்வா தெரிவித்தார். (செ-11)

# பாதுகாப்பு, வாழ்வாதா...

இதன்போதே மன்னாரில் அண மையில் முன்னாள் போராளி யொரு வர் சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரி வினரால் மேற்கொள்ளப் படுகின்ற தொடர் கைதுகள் போன்ற வற்றினை சுட்டிக்காட்டியே மேற் குறித்த கோரிக் கை விடுவிக்கப்பட்டுள் ளது.

தற்போது வடக்கு கிழக்கு மற் றும் நாடு முழுவதிலுமுள்ள முன் னாள் போராளிகளிற்கு பாதுகாப்பற்ற நிலையே காணப்படுகின்றது.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரி வினரால் தொடர்ச்சியாக விசார ணைக்குட்படுத்தப்பட்டு வருவதோடு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவிடு தலை செய்யப்பட்ட போராளிகளுககு உரிய பாதுகாப்பினையும் வாழ்வாதா ரத்தினையும் வடமாகாண சபை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், சிராய்வா உள்ளிட்டோர் கோரிக்கை முன்வைத்தனர். (செ-4)


# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாசினி அம்மா சிவபாதசுந்தரம்



வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், இல. 118/4, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாசினி அம்மா சிவபாத சுந்தரம் கடந்த (16.11.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த வீரசிங்கம் (புவனேஸ்வரி மருந்துக் கடை) - பாக்கியலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (ஓய்வு பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை) அவர்களின் பாசமிகு மனை வியும் காலஞ்சென்றவர்களான கோணேசபிள்ளை (பிரபலவர்த்தகர் அக்குரஸ்ஸ) - ஆச்சிமுத்து தம்பதியர்களின் பாசமிகு மருமகளும் யோகநாதன் (கனடா), அமரர் உலகநாதன் (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி), பரமநாதன் (கனடா), தருமநாதன் (ஜேர்மனி), கேதாரநாதன் (பிரான்ஸ்), தேவமலர் (கனடா), புவனேஸ்வரி (பிரான்ஸ்), பரமகுருநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். காலஞ்சென்ற சோமாவதி மற்றும் இராசலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - லண்டன்); வேதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மற்றும் கமலாதேவி, விமலாதேவி, சச்சிதானந்தம், ஞானாம்பிகை, உஷாராணி, தவமலர், சிவதாஸ், இராஜேந்திரன், சகிலா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகலியும்,

வைத்திய கலாநிதி அச்சுதன் (மயக்க மருந்து நிபுணர் - அவுஸ்திரேலியா), ஜனகதாரணி (ஆசிரியை - நல்லாயன் கன்னியர்மடம் - கொழும்பு 13), எந்திரி, விகிர்தன் (நீர்ப்பாசன பொறியியலாளர் - கிளிநொச்சி) ஆகியோரின் பாச மிகு தாயாரும், வைத்திய கலாநிதி சுபத்திரா (அவுஸ்திரேலியா), ஞானவேல் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), சைலஜா (அபி விருத்தி உத்தியோகத்தர் - கிராம அபிவிருத்தித் திணைக்களம், கச்சேரி, கிளி நொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அச்சயன், சாம்பவி, மேத்ரா, அவிக்னா, சதுசிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2014) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

118/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 0777702[illegible] / 077[illegible] (8364)

## இசை மேதை அமரர் சிவஸ்ரீ A.M.வர்ணகுலசிங்கம் அவர்களின் 31ம் நினைவு நாள்



ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அன்னாரின் வாழ்நாள் அனுபவ நூல் வெளியீடும்

23.10.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலை வன் அமரர் வர்ணகுலசிங்கம் அவர்களின் பிரார்த்தனை நிகழ்விலும், மதியபோசன விருந்திலும் கலந்து சிறப் பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அவர்தம் மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : வறுத்தலை பிள்ளையார் ஆலய மண்டபம் அளவெட்டி வடக்கு, (கூத்தஞ்சி மாசந்தை அருகாமையில்)

நேரம் : காலை 10.30 மணி

காலம் : 22.11.2014 சனிக்கிழமை

இவ்வண்ணம்
திருமதி வர்ணகுலசிங்கம் மற்றும் குடும்பத்தினர்.
வர்ணராமேஸ்வரன் (மகன்) 0754626315
கைலாயநாதன் (மருமகன்) 0771723613

(8372)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org